அந்தரங்கமானது

# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை - 2018

## 23 - அரசியல் விஞ்ஞானம்



Father of Political Science

இந்த விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்துக்காகத் தயாரிக்கப்பட்டது. பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக்கொள்ளும் கருத்துக்களுக்கிணங்க, இதில் உள்ள சில விடயங்கள் மாறலாம்.

இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன

முழுப்பதிப்புரிமையுடையது

## கட்டாய கவனத்திற்கு

இந்த புள்ளியிடும் திட்டத்தில் தரப்பட்டுள்ள மாதிரி விடைகள் பரீட்சகர்களுக்கு வழிகாட்டுவதற்காக மட்டுமே ஆகும். பரீட்சார்த்திகள் மாதிரி விடைகளில் குறிப்பிடப்பட்டுள்ள சகல விடயங்களையும் தமது விடைகளில் உள்ளடக்காமல் இருக்கலாம். எனினும் எழுதப்பட்டுள்ள விடைகளை மதிப்பீடு செய்யும் போது மாதிரி விடைகளில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களுக்கு இசைவானவை எனத் தென்படுமாயின் பொருத்தமான புள்ளிகளை வழங்குவதற்கு பரீட்சகர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்**

**தேசிய மதிப்பீடு மற்றும் பரீட்சைகள் சேவை**

**கல்விப் பொதுத் தராதரப் பத்திர(உயர் தரப்) பரீட்சை-ஆகஸ்ட் 2018**

**புள்ளி வழங்கும் திட்டம்**

**23 அரசியல் விஞ்ஞானம்**

**புள்ளிகளைப் பகிர்ந்தளித்தல்**

**வினாப் பத்திரம்- I**

**காலம்: 02 மணித்தியாலம்**

சகல வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். ஒரு வினாவுக்கு 02 புள்ளிகள் வீதம் மொத்தம் 100 புள்ளிகள்

**வினா பத்திரம்-II**

**காலம்:03 மணித்தியாலம்**

இவ் வினாப் பத்திரம் மூன்று பகுதிகளைக் கொண்டது.

**பகுதி A-** இவ் வினாப்பத்திரம் 20 குறு வினாக்களைக் கொண்டதாகும். சகல வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். ஒரு வினாவுக்கு 01 புள்ளி வழங்கப்பட வேண்டும். 20 விடைகளுக்குமுரிய மொத்தப் புள்ளிகள் 20 ஆகும்.

**பகுதி B-** இவ் வினாப்பத்திரம் அரை கட்டமைப்பு மற்றும் கட்டுரை வடிவிலான 04 வினாக்களை உள்ளடக்கியதாகும். எவையேனும 02 வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்க வேண்டும். ஒரு வினாவுக்கு 20 புள்ளிகள் வழங்கப்பட வேண்டும். 02 விடைகளுக்குமுரிய மொத்தப் புள்ளிகள் 40 ஆகும்.

**பகுதி C-** இவ் வினாப்பத்திரம் அரைக் கட்டமைவு மற்றும் கட்டுரை வடிவிலான 04 வினாக்களை உள்ளடக்கியதாகும். 02 வினாவுக்களுக்கு மட்டும் விடையளிக்க வேண்டும். ஒரு வினாவுக்கு 20 புள்ளிகள் வழங்கப்பட வேண்டும். 02 விடைகளுக்குமுரிய மொத்தப்புள்ளிகள் 40 ஆகும்.

**வினாப்பத்திரம் -II ற்கான மொத்தப் புள்ளிகள் 100 ஆகும்.**

**இறுதிப் புள்ளிகளைக் கணிப்பீடு செய்தல்:** **வினாப்பத்திரம் I =100**

**வினாப் பத்திரம் II = 100**

**இறுதிப் புள்ளிகள் 200÷2 = 100**

# கல்விப் பொதுத் தராதரப் பத்திர(உயர் தரப்) பரீட்சை-ஆகஸ்ட் 2018

## அரசியல் விஞ்ஞானம் I மற்றும் II

## புள்ளி வழங்கும் திட்டம்

**பரீட்சகர்களுக்கான அறிவுறுத்தல்**

இக் கையேடானது 2018 ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற இல 23 அரசியல் விஞ்ஞான பாடத்திட்டத்தின் முதலாவது மற்றும் இரண்டாவது வினாப்பத்திரங்களுக்கான மாதிரி விடைகளை உள்ளடக்கியுள்ளது. இவ்விடைகள் உதவிப் பரிசோதகர்களுக்கு விடைகளைத் திருத்துவதற்கான ஒரு வழிகாட்டல் மட்டுமேயாகும். கேட்கப்பட்ட வினாக்களுக்கான அடிப்படை விடயங்களுக்கு மேலதிகமான விடயங்களை பரீட்சார்த்திகள் எழுதியிருப்பின் புள்ளிகளை வழங்க வேண்டும். விடைகளுக்கான புள்ளிகளை வழங்கும் போது பரிசோதகர்கள் பின்வரும் விடயங்களைக் கவனத்திற் கொள்ள வேண்டும்.

(அ) வினாக்களை சரியாக விளங்கியுள்ளனரா? இதனை அறிமுகத்தின் மூலம் விளங்கிக் கொள்ள முடியும்.

(ஆ) வினாக்களுக்கு உரிய விடயங்களை சரியாக தெரிவு செய்துள்ளனரா மற்றும் அந்த விடயங்களை சரியாகவும் முறையாகவும் ஒழுங்குபடுத்தி முன்வைத்துள்ளனரா என்பது.

(இ) விடயங்களைப் போதுமான வகையில் பகுப்பாய்வு செய்துள்ளனரா என்பது.

(ஈ) இறுதி முடிவுக்கு வந்துள்ளனரா மற்றும் அவ் இறுதி முடிவினை தர்க்க ரீதியாக முன்வைத்துள்ளனரா என்பது.

பரீட்சார்த்திகளின் விடைகளில் முன்வைக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக ஏதேனும் சிக்கலான தன்மைகள் காணப்படின் அதனை பிரதம பரீட்சகரின் கவனத்திற்கு உட்படுத்தி தீர்மானம் எடுக்கப்படுதல் வேண்டும்.

**வினாப்பத்திரங்களின் நோக்கம்**

**வினாப்பத்திரம்- I**

அரசியல் விஞ்ஞான பாடபரப்பினுள் உள்ளடக்கப்படும் கோட்பாடுகள் மற்றும் அதன் நடைமுறைத்தன்மைகள் தொடர்பாக பரீட்சார்த்திகளின் அறிவு மற்றும் புரிதலை பரிசோதனை செய்தலே இவ்வினாப் பத்திரத்தின் நோக்கமாகும். இதற்கிணங்க சில வினாக்களினூடாக கோட்பாடு ரீதியான எண்ணக்கருக்கள் பற்றி பரீட்சார்த்திகளின் அறிவினை நேரடியாக மதிப்பீடு செய்வதோடு மேலும் சில வினாக்களின் மூலம் தெரிவு செய்யப்பட்ட சில நாடுகளின் ஊடாக கோட்பாட்டுக்கும் நடைமுறைக்கும் இடையிலான தொடர்பு பற்றி பரீட்சார்த்திகளின் அறிவையும் புரிதலையும் பரீட்சித்தலாகும்.

**வினாப்பத்திரம்-II**

இவ் வினாப்பத்திரத்தின் நோக்கமானது பிரித்தானியக் குடியேற்ற நாட்டாட்சி காலத்தின் இலங்கையின் அரசியல் மற்றும் அரசாங்க முறைகளின் விருத்தி மற்றும் இயல்பு தொடர்பான பரீட்சார்த்திகளின் அறிவையும் புரிதலையும் பரிசீலனைச் செய்தலுமாகும். மேலும் சர்வதேச சமூகத்தில் நிலவும் நிறுவனங்களின் இயல்பினைப் பற்றி பரீட்சித்துப் பார்ப்பதும் இதன் நோக்கமாகும்.

## விடைத்தாள்களுக்குப் புள்ளியிடல் - பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற குமிழ்முனை பேனாவை பயன்படுத்தவும்.
2. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது **தெளிவான இலக்கத்தில்** எழுதவும்.
3. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, சிற்றொப்பத்தை இடவும்.
4. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் ☐ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.

**உதாரணம் - வினா இல 03**

(i) ................................................................................ ✓ △ 4/5
................................................................................
................................................................................

(ii) ................................................................................ ✓ △ 3/5
................................................................................
................................................................................

(iii) ................................................................................ ✓ △ 3/5
................................................................................
................................................................................

(03) (i) $\frac{4}{5}$ + (ii) $\frac{3}{5}$ + (iii) $\frac{3}{5}$ = $\boxed{\frac{10}{15}}$

**பல்தேர்வு விடைத்தாள் (துளைத்தாள்)**

1. க.பொ.த.(உ. தர) மற்றும் தகவல் தொழிநுட்பப் பரீட்சைக்கான துளைத்தாள் திணைக்களத்தால் வழங்கப்படும். சரியாக துளையிடப்பட்டு அத்தாட்சிப்படுத்திய துளைத்தாள் தங்களுக்கு கிடைக்கப்பெறும். அத்தாட்சிப்படுத்திய துளைத்தாளைப் பயன்படுத்துவது பரீட்சகரின் கடமையாகும்.
2. அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.
3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை O அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும்.

### கட்டமைப்பு கட்டுரை விடைத்தாள்கள்

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.
2. புள்ளிகளை ஓவலண்ட் கடதாசியின் இடது பக்கத்தில் குறிக்கவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக 2 இலக்கங்களில் பதியவும். வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள விடைகளுக்கான புள்ளியை மீண்டும் பரிசீலித்த பின் முன்னால் பதியவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் வழங்கப்படும் புள்ளிகளை உரிய விதத்தில் எழுதுவும்.

## புள்ளிப்பட்டியல் தயாரித்தல்

இம்முறை சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது. இது தவிர ஒவ்வொரு வினாப் பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும். வினாப்பத்திரம் I இற்குரிய புள்ளிப்பட்டியலில் "வினாப்பத்திரம் I" என்ற நிரலில் பதிந்து எழுத்திலும் எழுத வேண்டும். பகுதிப்புள்ளிகளை உள்ளடக்கி "வினாப்பத்திரம் II" எனும் நிரலில் வினாப்பத்திரம் II இற்குரிய இறுதிப்புள்ளியை பதிய வேண்டும். 51 சித்திரப் பாடத்திற்குரிய I, II, மற்றும் III ஆம் வினாப்பத்திரங்களுக்குரிய புள்ளிகளை தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதிந்து எழுத்திலும் எழுதுதல் வேண்டும்.

○○○

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka

அධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2018 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2018 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2018

15.08.2018 / 1300 - 1500

| | | |
|---|---|---|
| දේශපාලන විද්‍යාව I<br>அரசியல் விஞ்ஞானம் I<br>Political Science I | 23 T I | පැය දෙකයි<br>இரண்டு மணித்தியாலம்<br>*Two hours* |

**அறிவுறுத்தல்கள்:**

- ❊ **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
- ❊ விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- ❊ விடைத்தாளில் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
- ❊ 1 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என எண்ணிடப்பட்ட விடைகளில் **சரியான** விடையைத் தெரிந்தெடுத்து, **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய** விடைத்தாளில் புள்ளடி (×) இடுவதன் மூலம் காட்டுக.
- ❊ ஒரு விடைக்கு 02 புள்ளிகள் வீதம் மொத்தம் 100 புள்ளிகள் வழங்கப்படும்.

● 1 தொடக்கம் 15 வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றும் வினாவின் தலைப்புடன் தொடர்பான ஐந்து கூற்றுகளைக் கொண்டுள்ளது. அவற்றுள் **நான்கு** கூற்றுகள் சரியானவையாகும். **சரியான** கூற்றுகளின் தொகுதியைத் தெரிவுசெய்க.

**1.** அரசியல் விஞ்ஞானம் பற்றிய கற்கை பயன்படுவது
A – அரசியல் செயன்முறையையும் அது அரசியல் முறைமையொன்றிலுள்ள பிரசைகள் மீது ஏற்படுத்தும் தாக்கத்தையும் பற்றி அறிவதற்காகும்.
B – நல்லாட்சிக்கும் தீய ஆட்சிக்குமிடையிலான வேறுபாடுகளைப் பற்றி அறிவதற்காகும்.
C – அரசு மற்றும் அரசாங்கத்தின் ஆன்மீகத் தளத்தைப் பற்றி அறிவதற்காகும்.
D – அரசாங்கத்தின் அதிகாரபூர்வமான தீர்மானங்களை எடுத்தலோடு தொடர்பான செயன்முறைகளைப் பற்றி அறிவதற்காகும்.
E – தேசிய, சர்வதேச மட்டங்களில் அதிகாரப் போராட்டத்தை மேற்கொள்ளும் மார்க்கங்களையும் வழிமுறைகளையும் பற்றி அறிவதற்காகும்.
(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE

**2.** அரசியல் என்பது
A – அரசாங்கம் பற்றிய கலையும் விஞ்ஞானமுமாகும்.
B – விழுமியங்களை அதிகாரபூர்வமாகப் பகிர்ந்தளிக்கும் வழிமுறையாகும்.
C – சமூக - பொருளாதார, அரசியல் விவகாரங்களின் மீதான மோதும் நலன்களின் பெறுபேறாகும்.
D – மத விழுமியங்களின் தளத்தையுடைய சமூகமொன்றை உருவாக்குவது தொடர்பான அறம்சார் செயற்பாடாகும்.
E – அரசியல் விஞ்ஞானத்தின் நடைமுறைப் பகுதி எனக் கருதப்படுகிறது.
(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE

**3.** மக்கள் ஏன் அரசாக ஒழுங்கமைந்துள்ளனர் ?
A – சமூகத்திலுள்ள ஏற்றத்தாழ்வுகளைப் பாதுகாத்துப் பேணுவதற்காகும்.
B – சமூகத்தை ஆள்வதற்கான ஆட்சி முறைமையொன்றை ஒழுங்கமைப்பதற்காகும்.
C – தேசியப் பாதுகாப்பைப் பேணிப் பாதுகாப்பதற்காகும்.
D – சமூகத்தின் பொருளாதாரச் செயற்பாடுகளை முறையான பாங்கினில் ஒழுங்கமைப்பதற்காகும்.
E – மக்களின் இறைமையைப் பிரயோகிப்பதற்கான நெறிமுறைத் தன்மையினை வழங்குவதற்காகும்.
(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE

4. அரசியல் ரீதியாக ஒழுங்கமைந்த சமூகமொன்றுக்கு அரசாங்கமொன்று ஏன் அவசியமாகின்றது ?

A – சமூகப் பிணைப்பைப் பாதுகாத்து, மேம்படுத்திப் பேணுவதற்காகும்.

B – சமூகத்தின் வறிய பகுதியினரின் நலன்களை மட்டும் பாதுகாத்து, மேம்படுத்திப் பேணுவதற்காகும்.

C – மக்களின் உரிமைகளைப் பாதுகாத்து, மேம்படுத்திப் பேணுவதற்காகும்.

D – சட்டம், ஒழுங்கு, பாதுகாப்பு, சமூக நீதி ஆகியவற்றை வழங்கிப் பேணுவதற்காகும்.

E – பொருளாதாரச் செயற்றிறனை மேம்படுத்தி வெளியக உறவுகளை நிர்வகிப்பதற்காகும்.

(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE

5. இறைமை என்பது

A – அரசின் அதிகாரத்தோடு தொடர்பான அரசியல் கோட்பாடாகும்.

B – தேசிய, சர்வதேச அரசியலைக் கட்டுப்படுத்தும் பிரதான கோட்பாட்டு ரீதியான எண்ணக்கருவாகும்.

C – சிவில் சமூகத்துக்கும் அதன் ஒழுங்கமைப்புகளுக்கும் அப்பால் அரசைத் தன்னிகரற்றதாக்கும் அரசியல் சித்தாந்தமாகும்.

D – அரசின் விருப்பினை நடைமுறைப்படுத்துவதற்கான நெறிமுறைத் தன்மையை வழங்கும் அரசியல் கோட்பாடாகும்.

E – சமஷ்டி அரசியல் முறைமையொன்றின் கீழ் கூட தன்னிகரற்றதும் பாராதீனப்படுத்த முடியாததுமாகும் எனக் கருதப்படுகிறது.

(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE

6. முதலாளித்துவம் என்பது

A – ஆரம்பத்தில் தலையிடாக் கொள்கையின் அடிப்படையில் தாபிக்கப்பட்டது.

B – நிறை சந்தைப் போட்டியை மேம்படுத்துவதனை இலக்காகக் கொண்டுள்ளது.

C – 'ஒழுங்குபடுத்தப்படாத சந்தைப் பொருளாதாரமானது இயல்பாகவே சமநிலையை நோக்கி நகர்கிறது' என்ற நம்பிக்கையின் அடிப்படையில் தாபிக்கப்பட்டது.

D – இன்றைய உலகில் சுதந்திரமான சந்தை முதலாளித்துவம் மற்றும் அரச முதலாளித்துவம் என்ற வகையில் செயற்படுத்தப்படுகிறது.

E – பொருளாதார வளர்ச்சியோடு மறுபங்கீடு என்ற கொள்கையின் மூலம் சமூக நீதியை ஏற்படுத்துவதில் கரிசனை கொள்கிறது.

(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE

7. சமதர்மம் என்பது

A – சமமான குடியுரிமை, சமமான சந்தர்ப்பங்கள் என்ற மூலக்கொள்கையின் அடிப்படையிலமைந்த சமூக முறைமையொன்றாகும்.

B – உற்பத்திக் கருவிகள் மற்றும் பங்கீட்டின் மீது அரசின் உடமை என்பதனை ,அடிப்படையாகக் கொண்ட ஒரு பொருளாதார முறைமையாகும்.

C – தாராள ஜனநாயகத்துக்கு மாற்றீடாகவுள்ள ஓர் அரசியல் முறைமையாகும்.

D – பல கட்சி முறையின் அடிப்படையில் செயற்படும் ஓர் ஆட்சி முறைமையாகும்.

E – முதலாளித்துவத்தினால் உருவாக்கப்படும் சமூக அசமத்துவத்துக்குத் தீர்வு காண முயலும் ஓர் அரசியல் கருத்தியலாகும்.

(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE

8. சமூக ஜனநாயகம் என்பது

A – சந்தை முதலாளித்துவத்துக்கும் புரட்சிகர சமதர்மத்துக்கும் மாற்றீடான ஒரு பொருளாதார மாதிரியாகும்.

B – சந்தைப் பொருளாதாரத்துக்கும் சமூக நீதிக்குமிடையில் உடன்பாட்டை ஏற்படுத்துவதில் அக்கறை கொள்கிறது.

C – புரட்சியினூடாக சமூக மாற்றம் என்ற கால்மாக்சின் கோட்பாட்டை ஏற்றுக்கொள்ளும் ஓர் அரசியல் கோட்பாடாகும்.

D – சந்தைப் பொருளாதாரம், மலர்ச்சிச் சமதர்மம், நலன்புரி அரசு என்ற மூன்று தூண்களின் மீது தாபிக்கப்பட்டதாகும்.

E – ஜனநாயக வழிமுறைகளினூடாக சமதர்ம சமூகமொன்றைத் தாபிப்பதை இலக்காகக் கொண்டதாகும்.

(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE

**9.** மந்திரி சபை அரசாங்க முறையின் பிரதான பண்புகளாவன:
A – உண்மை மற்றும் பெயரளவு என்ற இரட்டை நிறைவேற்றுத்துறையின் இருப்பு
B – பெயரளவு நிறைவேற்றாளரால் சட்டத்துறை உறுப்பினர்களிலிருந்து உண்மை நிறைவேற்றுத்துறை நியமிக்கப்படுதல்
C – உண்மை நிறைவேற்றுத்துறை சட்டத்துறைக்கு நேரடியாகப் பொறுப்புக்கூறல்
D – நிறைவேற்றுத்துறைக்கும் சட்டத்துறைக்குமிடையில் முறையான வகையில் அதிகாரங்களும் பணிகளும் பிரிக்கப்படாதிருத்தல்
E – பெயரளவு நிறைவேற்றாளர் ஒரு குறிப்பிட்ட பதவிக்காலத்துக்கு மக்களால் நேரடியாகத் தெரிவுசெய்யப்படுதல்
(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE

**10.** ஜனாதிபதி அரசாங்க முறைமையின் பிரதான பண்புகளாவன:
A – இரு வேறுபட்ட தேர்தல்களில் நிறைவேற்று மற்றும் சட்டத் துறைகள் நேரடியாகத் தெரிவுசெய்யப்படுதல்
B – நிறைவேற்றுத்துறைக்கும் சட்டத்துறைக்குமிடையில் அதிகாரங்களின் பிரிப்பு
C – தடைகள், சமன்பாடுகளின் அடிப்படையில் நிறைவேற்று மற்றும் சட்டத் துறை அதிகாரங்கள் நடைமுறைப்படுத்தப்படுதல்
D – நிறைவேற்றுத்துறைக்கும் சட்டத்துறைக்குமிடையில் நெருங்கிய ஒத்துழைப்பு
E – நிறைவேற்றுத்துறை சட்டத்துறைக்கு நேரடியாகப் பொறுப்புக் கூறாமை
(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE

**11.** அரைகுறை ஜனாதிபதி அரசாங்க முறைமையின் பிரதான பண்புகளாவன:
A – ஜனாதிபதி, பிரதம மந்திரியின் தலைமையிலான மந்திரி சபை என்ற இரட்டை நிறைவேற்றுத்துறையின் இருப்பு
B – ஜனாதிபதி மக்களால் தெரிவுசெய்யப்படுதலும் ஜனாதிபதியால் பிரதமரும் மந்திரி சபையும் நியமிக்கப்படுதலும்
C – பிரதமர் மற்றும் மந்திரி சபை சட்டத்துறைக்கு நேரடியாகப் பொறுப்புக்கூறல்
D – ஜனாதிபதிப் பதவி அரசின் நிறைவேற்று அதிகாரத்தைக் கையாளும் ஒரு நிறுவனமாதல்
E – பிரதம மந்திரி அரசாங்கத்தின் தலைவர் என்ற நிலையை வகித்தல்
(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE

**12.** சர்வாதிகார அரசாங்கமொன்றின் பிரதான பண்புகளாவன:
A – ஆட்சியாளர் தன்னிச்சையாக அரச அதிகாரத்தைப் பிரயோகித்தல்
B – ஆட்சியாளர் மக்களின் சமய நம்பிக்கைகளை மீறும்போது மக்களால் அவரைப் பதவியகற்ற முடிதல்
C – மக்களின் சம்மதமின்றி சமூகத்தின் மீது ஆட்சியாளரின் விருப்பை விதித்தல்
D – ஒரு கட்சியின் இருப்பு அல்லது எவ்வகையிலும் அரசியல் கட்சிகள் இல்லாதிருத்தல்
E – அரசுக்கும் சிவில் சமூகத்துக்குமிடையில் வேறுபாடு காணப்படாதிருத்தல்
(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE

**13.** ஒற்றையாட்சி அரசாங்கத்தின் பிரதான பண்புகளாவன:
A – மத்திக்கும் பரிதிக்குமிடையில் அதிகாரப் பகிர்வு முறைமையின் அடிப்படையில் அரச அதிகாரத்தை நடைமுறைப்படுத்துதல்
B – மத்திய அரசாங்கத்தினால் ஒப்படைக்கப்பட்ட அதிகாரத்தைக் கொண்ட உள்ளூராட்சி முறைமையொன்றின் இருப்பு
C – ஒற்றைக் குடியுரிமை முறைமையின் இருப்பு
D – அரச அதிகாரத்தைப் பிரயோகிப்பதில் மத்திய அரசாங்கத்தின் தனியுரிமை
E – சகல துணை - தேசிய அரசாங்கங்கள் மீதும் மத்திய அரசாங்கத்தின் தனிமுதன்மையான ஆதிக்கம்
(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE

**14.** சமஷ்டி அரசாங்கத்தின் பிரதான பண்புகளாவன:
A – தேசிய, துணைத் தேசிய மட்டங்களைக் கொண்டு அரசாங்கம் கட்டமைக்கப்பட்டிருத்தல்
B – மத்திக்கும் பரிதிக்குமிடையில் இறைமை அதிகாரம் பகிரப்பட்டிருத்தல்
C – சமஷ்டி முறைமைக்குச் சட்டத் தளத்தை வழங்கும் எழுதப்பட்ட யாப்பின் இருப்பு
D – சட்டரீதியாக அல்லது அரசியல் ரீதியாக ஒன்றுக்கொன்று கீழ்ப்படாத சமமான பங்காளிகள்
E – அரச அதிகாரத்தைப் பிரயோகிப்பதில் உயர் செயற்றிறன் மிக்க தன்மை காணப்படுதல்
(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE

**15.** தற்கால ஜனநாயக அரசாங்கங்களிலுள்ள அரசியல் நிறைவேற்றுத்துறையானது

A – அரசாங்கத்தின் அத்தியாவசிய அங்கமாக இருப்பதோடு எந்த அரசாங்கமும் அது இன்றிச் செயற்பட முடியாது.

B – வாக்காளர்களால் தெரிவுசெய்யப்படாத ஆட்களினாலும் வகிக்கக்கூடியதாகும்.

C – மந்திரி சபை, ஜனாதிபதி, அரைகுறை ஜனாதிபதி என்ற மூன்று வேறுபட்ட மாதிரிகளைக் கொண்டமைந்ததாகும்.

D – சட்டங்களையும் பொதுக் கொள்கைகளையும் நடைமுறைப்படுத்துவதற்குப் பொறுப்பானதாகும்.

E – ஓர் ஆளையோ அல்லது சில ஆட்களையோ கொண்ட ஒரு சிறிய பகுதியாகும்.

(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE

● **16** தொடக்கம் **25** வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றும் ஐந்து கூற்றுகளைக் கொண்டுள்ளதுடன் அவற்றுள் ஒரு கூற்று பிழையானதாகும். **பிழையான** கூற்றைத் தெரிவுசெய்க.

**16.** தற்கால ஜனநாயக அரசாங்க முறையிலுள்ள சட்டத்துறையானது

(1) பொதுவாக மக்களால் தெரிவுசெய்யப்படும் சமயம் சாரா அரசியல்வாதிகளைக் கொண்டதாகும்.

(2) முழுத் தேசத்தினதும் பிரதிநிதிகளை உள்ளடக்கிய ஒரு பாரிய மன்றமாகும்.

(3) விவாதம் புரியும் பிரதான தேசிய மன்றம் எனக் கருதப்படுகிறது.

(4) அரசாங்கத்தின் செயல்களுக்கு நெறிமுறைத் தன்மையை வழங்கும் பொறுப்பை வகிக்கிறது.

(5) தேசிய பாதீட்டை ஆக்குவதற்கும் அமுலாக்குவதற்கும் பொறுப்பானதாகும்.

**17.** தற்கால அரசியல் முறைமைகளிலுள்ள நீதித்துறையானது

(1) அரசாங்கத்திலிருந்து விடுபட்ட அரச அங்கமொன்றாகும்.

(2) ஒன்றில் யாப்புச் சட்டத்தின் கீழ் அல்லது சட்டத்துறைச் சட்டங்களின் கீழ் தாபிக்கப்படுகிறது.

(3) உயர் நிலை மற்றும் கீழ் நிலை என்ற இரு மட்டங்களின் கீழ் ஒழுங்கமைக்கப்படுகிறது.

(4) சட்டத் தீர்ப்பளிக்கும் அதிகாரத்தைப் பெற்ற அரசாங்கத்தின் ஒரு கிளையாகும்.

(5) நிறைவேற்றுத்துறையின் மேற்பார்வையின் கீழ் அதன் பணிகளை மேற்கொள்வதற்கு வேண்டப்படுகிறது.

**18.** சட்டம் என்பது

(1) அரசினால் ஆக்கப்படும் பொது விதிகளின் தொகுதியாகும்.

(2) மக்களின் ஆன்மீக வாழ்க்கையை ஒழுங்குபடுத்துவதில் கரிசனை காட்டுகிறது.

(3) அனைவருக்கும் சமமாகப் பிரயோகிக்கப்படும் என்று ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

(4) ஓர் அரசியல் முறைமையில் மக்கள் எதனைச் செய்ய முடியும் அல்லது செய்ய முடியாது என உத்தரவிடும் ஒரு பிரதான சுட்டியாகும்.

(5) மக்களது சுதந்திரத்தின் பிரதான பாதுகாவலன் என்று கருதப்படுகிறது.

**19.** அரசியல் யாப்பு என்பது

(1) ஆட்சிக்கான சட்டத் தளத்தை வழங்கும் விதிகளின் தொகுதியைக் கொண்டுள்ள சட்ட ஆவணமாகும்.

(2) ஜனநாயக அரசாங்கத்தின் அத்தியாவசியமான அங்கம் எனக் கருதப்படுகிறது.

(3) அரசியல்வாதிகளின் உரிமைகளையும் கடமைகளையும் பாதுகாக்கும் ஆவணமாகக் கருதப்படுகிறது.

(4) அரசுக்கும் பிரசைகளுக்குமிடையிலான தொடர்பை வெளிப்படுத்தும் பிரதான சட்ட ஆவணமாகும்.

(5) யாப்புறுவாதத்தின் விருத்திக்கான தளத்தை வழங்கும் ஆவணமாகும்.

**20.** சிவில் சமூகம் என்பது

(1) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட வரைவிலக்கணம் இல்லாத எண்ணக்கருவொன்றாகும்.

(2) அரசின் கட்டுப்பாட்டுக்கு வெளியேயான சமூக வாழ்வின் ஒரு பகுதியை விபரிக்கின்றது.

(3) அரசியல் சமூகத்துக்கு ஒப்பானது என அறியப்படுகிறது.

(4) குறிக்கப்பட்டதும் வரையறுக்கப்பட்டதுமான நோக்கங்களுக்காக இருக்கின்ற கூட்டுச் சமூக இணைவு என விபரிக்கப்படுகிறது.

(5) சமூகத்திலுள்ள தன்னார்வ சங்கங்களையும் குழுக்களையும் கொண்டமைந்ததாகும்.

**21.** குடியுரிமை என்பது
(1) ஒரு நாட்டில் வாழும் எல்லோருக்கும் உரித்தாகும் ஒரு சட்ட உரிமையாகும்.
(2) ஓர் அரசியல் ஜனசமூகத்தில் வாழும் பிரஜைகளுக்கு குறிப்பிட்ட தேசியத்துவத்தினை வழங்கும் ஒரு சட்ட விதிமுறையாகும்.
(3) பிறப்பினால் அல்லது பதிவினால் பெற்றுக்கொள்ளப்படும் ஒரு சட்ட அந்தஸ்தாகும்.
(4) ஓர் அரசியல் சமூகத்தில் அதனை அனுபவிப்போருக்கு சமமானதும் முழுமையானதுமான உறுப்புரிமையை உத்தரவாதப்படுத்தும் ஒரு சட்ட அந்தஸ்தாகும்.
(5) அரசுக்கும் பிரஜைகளுக்கும் இடையிலான தொடர்பினை வெளிப்படுத்தும் ஒரு சட்ட நிலையாகும்.

**22.** பிரதிநிதித்துவம் என்பது
(1) ஜனநாயக அரச முறைமையொன்றில் அரசாங்கத்தையும் ஆளப்படுவோரையும் தொடர்புபடுத்தும் பிரதான வழிமுறையாகும்.
(2) தெரிவுசெய்வோருக்கும் தெரிவுசெய்யப்படுவோருக்கும் இடையிலான தொடர்பைக் காட்டும் ஓர் அளவுகோலாகும்.
(3) தேர்தல்களின் ஊடாக மட்டுமே நடைமுறைப்படுத்தப்படுகிறது.
(4) பொறுப்பாண்மை, ஒப்படைப்பு, அங்கீகரித்தல், ஒத்திருத்தல் என்ற நான்கு வகைகளைக் கொண்டுள்ளது.
(5) ஓர் அரசியல் முறைமையிலுள்ள அரசியல், பொருளாதார, சமூகக் குழுக்களுக்கு நியாயமான பிரதிநிதித்துவத்தை உத்தரவாதப்படுத்தும் ஒரே வழிமுறையாகும்.

**23.** சொத்து என்பது
(1) தனியார் சொத்து, பொதுவான சொத்து, அரசச் சொத்து எனப் பல வகையினதாகும்.
(2) சொத்துரிமை அல்லது உரித்துரிமை என்று சட்டரீதியாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது.
(3) அசைபவை, அசையாதவை என இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்படுகின்றது.
(4) உரித்துக்கும் பயன்படுத்துவதற்கும் ஒப்படைப்பதற்கும் நிரவகிப்பதற்கும் வருமானம் ஈட்டலுக்கும் விற்பனை செய்வதற்குமான உரிமைகள் என்ற குணப்பண்புகளைக் கொண்டுள்ளது.
(5) ஓர் அடிப்படை மனித உரிமையாக கம்யூனிச முறைமையில் கூட ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

**24.** உரிமைகள் என்பவை
(1) மனித கௌரவத்தினை உறுதிப்படுத்தும் மனிதர்களுக்கு உரித்தானவையாகும்.
(2) கடப்பாடுகளோடு ஒத்தவை என இனங்காணப்படுகின்றன.
(3) ஒழுக்க மற்றும் சட்ட உரிமைகள் என்ற இரு வகையினதாகும்.
(4) ஆட்களின் தனிப்பட்ட முன்னேற்றத்திற்கும் அவர்களின் கூட்டு இருப்புக்கும் அத்தியாவசியமானவை எனக் கருதப்படுகின்றன.
(5) பொதுவாக நேர்க்கணியமானவை, எதிர்க்கணியமானவை என இரண்டு வகுதிகளாகப் பிரிக்கப்படுகின்றன.

**25.** அரசியல் கட்சிகள் என்பவை
(1) தேர்தல் மூலமோ அல்லது வேறு வழிகளிலோ அரசாங்க அதிகாரத்தை வெற்றிகொள்ளும் நோக்கத்திற்காக ஒழுங்கமைந்த மக்கள் குழுக்களாகும்.
(2) சர்வாதிகாரங்களில் கூட செயற்பாட்டுச் சுதந்திரத்தை அனுபவிக்கின்றன.
(3) வாண்மையாளர்கள், செயற்பாட்டாளர்கள், சாதாரணமானவர்கள் என்ற மூன்று வகையான உறுப்பினர்களைக் கொண்டிருக்கும்.
(4) ஜனநாயக அரசியல் முறைமைகளில் மக்களின் அரசியல் விருப்பைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதான செயற்பாட்டாளர்களாகும்.
(5) பிரமுகர் (காடர்) மற்றும் மகாஜன, பிரதிநிதித்துவ மற்றும் ஒருங்கிணைந்த, யாப்புரீதியான மற்றும் புரட்சிகர வலதுசாரி மற்றும் இடதுசாரிக் கட்சிகள் என்றும் வகைப்படுத்தப்படுகின்றன.

- **26** தொடக்கம் **35** வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றும் வினாவின் தலைப்புடன் தொடர்பான ஐந்து கூற்றுகளைக் கொண்டுள்ளது. அவற்றுள் **நான்கு** கூற்றுகள் சரியானவையாகும். **சரியான** கூற்றுகளின் தொகுதியைத் தெரிவுசெய்க.

**26.** 1833 கோல்புருக் - கமரன் ஆணைக்குழு பரிந்துரைத்தவையாவன:

A – தேசாதிபதிக்கு மேலதிக அதிகாரங்களை வழங்கி அவரது நிலையைப் பலப்படுத்துதல்

B – சட்டவாக்க, நிறைவேற்று விவகாரங்களை நிர்வகிப்பதில் தேசாதிபதிக்கு உதவுவதற்காக சட்டவாக்க, நிறைவேற்று மன்றங்களை நிறுவுதல்

C – சுதந்திரமான ஊழியச் சந்தையொன்றின் அபிவிருத்திக்கு வழியமைக்க இராஜகாரிய முறையை இல்லாதொழித்தல்

D – மலையகத்தையும் கரையோர மாகாணங்களையும் ஒன்றிணைத்து இலங்கையை ஓர் ஐக்கிய ஆட்சியின் கீழ் கொண்டு வருதல்

E – திறந்த சந்தைப் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்கு அரசின் வர்த்தகத் தனியுரிமையை நீக்குதல்

(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE

**27.** 1911 - 1924 காலப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்ட அரசியல் யாப்புச் சீர்திருத்தங்கள்

A – தேர்தல் அரசியலினூடாக ஆட்சியில் மக்கள் பங்கேற்பதற்கு வழியமைத்தன.

B – பாதீட்டு விவகாரங்களுக்கு உதவுவதற்கு நிதிக் குழுவைத் தாபித்தன.

C – சட்டமன்றின் உத்தியோகப் பற்றற்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் குறைத்தன.

D – தேசாதிபதியின் அதிகாரங்களைக் குறைக்காது அவ்வாறே வைத்தன.

E – சட்ட மன்றின் உத்தியோகப்பற்றற்ற உறுப்பினர்களின் அதிகாரங்களைப் படிபடியாக அதிகரித்தன.

(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE

**28.** இலங்கை தேசிய காங்கிரஸ்

A – மேற்கத்தேய கல்வியைக் கற்ற உயர் மத்திய தர வர்க்கக் குழுவொன்றினால் தாபிக்கப்பட்ட ஓர் ஒழுங்கமைப்பாகும்.

B – பிரித்தானியக் காலனித்துவ ஆட்சியின் கீழ் யாப்புச் சீர்திருத்தங்களைப் பெற்றுக்கொள்வதை இலக்காகக் கொண்டிருந்தது.

C – சாதி, இனம், சமயம் போன்ற பல்வேறு உள்வாரியான பிரிவினைகளின் காரணமாக மிகவும் பலவீனமான ஒழுங்கமைப்பாக இருந்தது.

D – பிரித்தானியர் ஆட்சிக்கு எதிராக எழுந்த தொழிலாளர் போராட்டங்களை எதிர்ப்பதற்கு ஒழுங்கமைக்கப்பட்டது.

E – சாதாரண பொதுமக்களினதை விட சமூக உயர்குழாமினரின் நலன்களில் கரிசனை கொண்ட ஓர் ஒழுங்கமைப்பாகும்.

(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE

**29.** டொனமூர் அரசாங்கமுறையின் தனித்துவமான பண்புகளாவன:

A – அமைச்சரவையானது தேசிய மற்றும் காலனித்துவப் பிரதிநிதிகளைக் கொண்டிருந்தமை

B – சட்டத்துறையானது சட்டவாக்க, நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்டிருந்தமை

C – தேசாதிபதி சாதாரண நேரங்களில் நாம நிறைவேற்றாளராகச் செயற்பட எதிர்பார்க்கப்பட்டமை

D – ஏழு நிறைவேற்றுக் குழுக்களும் அரசாங்க சபையின் சகல உறுப்பினர்களையும் உள்ளடக்கியிருந்தமை

E – ஏகாதிபத்திய நலன்களை உறுதிப்படுத்தும் 'காவல் நாய்கள்' என்று அழைக்கப்பட்ட மூன்று அரச உத்தியோகத்தர்கள் காணப்பட்டமை

(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE

**30.** 1931 இல் சர்வஜன வாக்குரிமையை வழங்குவதில் டொனமூர் ஆணைக்குழுவின் மீது செல்வாக்குச் செலுத்திய காரணிகளாவன:
A – சலுகை குறைந்த சமூகப் பகுதியினரைப் பலப்படுத்துவதற்கான தேவை
B – சமூக உயர்குழாமினரின் சில்லோராட்சி ஆதிக்கத்தை ஆட்சியில் பலவீனப்படுத்துவதற்கான தேவை
C – அரசியல்வாதிகளை வாக்காளர்களுக்கு அதிகளவு பொறுப்புக்கூறுவோராக ஆக்குவதற்கான தேவை
D – சாதாரண மக்கள் அரசியலில் செயற்றிறனாகப் பங்கேற்பதற்கான வழியைத் திறந்துவிடுவதற்கான தேவை
E – மக்களை அரசியல் ரீதியாகப் பலப்படுத்துவதன் மூலம் அவர்களின் காலனித்துவ எதிர்ப்பு உணர்வுகளை வலுப்படுத்துவதற்கான தேவை
(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE

**31.** சோல்பரி அரசியல் யாப்பின் பிரதான பண்புகளாவன:
A – நாம நிர்வாகம், உண்மை நிர்வாகம் என்பவற்றைக் கொண்ட இரட்டை நிறைவேற்றுத்துறை
B – இலங்கை வேண்டி நிற்கும்போது இலங்கை தொடர்பாகச் சட்டவாக்கம் செய்வதற்கு பிரித்தானியப் பாரளுமன்றம் அதிகாரம் பெற்றமை
C – கீழ் மன்றிலிருந்து மட்டும் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட உண்மை நிறைவேற்றுத்துறை
D – மக்கள் பிரதிநிதிகள் சபையையும் செனேட் சபையையும் கொண்ட இரு மன்றச் சட்டத்துறை
E – பிரித்தானியக் கோமறைக் கழகத்தை உச்ச நீதிமன்றமாகக் கொண்ட நீதித்துறை முறைமை
(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE

**32.** சோல்பரி அரசியல் யாப்பின் கீழ் தாபிக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் சபையானது
A – தெரிவுசெய்யப்பட்டதும் நியமிக்கப்பட்டதுமான இரு வகையான உறுப்பினர்களைக் கொண்டிருந்தது.
B – சட்டவாக்கத்தில் வரையறுக்கப்பட்ட அதிகாரத்தை மாத்திரமே கொண்டிருந்தது.
C – மகாதேசாதிபதியால் மேற்கொள்ளப்பட்ட கூட்டுதல், ஒத்திவைத்தல், கலைத்தல் என்ற அதிகாரங்களுக்குட்பட்டுச் செயலாற்றியது.
D – பிரித்தானிய முடியின் விருப்புடன் நாம நிறைவேற்றாளரைப் பதவியிலிருந்து அகற்றும் அதிகாரத்தைப் பெற்றிருந்தது.
E – தனது பதவிக்காலம் முடிவுற முன்னர் கலைக்கப்பட்டாலன்றி ஐந்து வருடப் பதவிக்காலத்தை அனுபவித்தது.
(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE

**33.** 1972 முதலாம் குடியரசு யாப்பானது
A – இலங்கையைச் சுதந்திரமும் இறைமையும் தன்னாதிக்கமும் கொண்ட ஒரு குடியரசாக ஆக்கியது.
B – ஜனாதிபதி அரசாங்க முறையைத் தாபித்தது.
C – பிரித்தானிய முடியை அரசின் தலைவராக அங்கீகரிப்பதனைக் கைவிட்டது.
D – சட்டவாக்க, நிறைவேற்று, நீதி அதிகாரங்கள் அனைத்தையும் கொண்ட ஒரு தனிமன்றச் சட்டத்துறையைத் தாபித்தது.
E – நீதி முன்-புனராய்வு அதிகாரத்தைக் கொண்ட ஓர் அரசியல் யாப்பு நீதிமன்றைத் தாபித்தது.
(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE

**34.** 1972 முதலாம் குடியரசு யாப்பின் கீழிருந்த நாம நிறைவேற்றாளர்
A – உத்தியோகபூர்வமாக ஜனாதிபதி எனப் பெயர் குறிக்கப்பட்டார்.
B – நான்கு வருட காலத்துக்குப் பிரதமரால் நியமிக்கப்பட்டார்.
C – பதவிக்காலத்தில் குடியியல், குற்றவியல் சட்ட முன்னெடுப்புகளிலிருந்து விடுபாட்டுரிமை பெற்றிருந்தார்.
D – மசோதாக்களை அங்கீகரிக்கும் அதிகாரத்தைப் பெற்றிருந்தார்.
E – தமது பணிகளையும் பொறுப்புகளையும் நிறைவேற்றும்போது பிரதமரினதும் மந்திரி சபையினதும் மதியுரையைப் பின்பற்ற வேண்டும்.
(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE

**35.** 1978 இரண்டாம் குடியரசு மூல அரசியல் யாப்பானது
A – கலப்பு ஜனாதிபதித்துவ அரசாங்க முறைமையைத் தாபித்தது.
B – அரைகுறை சட்டவாக்க அதிகாரங்களையுடைய ஒரு சட்டத்துறையைத் தாபித்தது.
C – உயர் நீதிமன்றம் இறுதி உச்ச நீதிமன்றமாக அமையும் வகையில் நீதித்துறை முறைமையை மறுசீரமைத்தது.
D – சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளைத் தேசிய மொழிகளாக்கியது.
E – அரசியல் யாப்பில் உள்ளடக்கப்பட்ட அரச கொள்கைக் கோட்பாடுகளை நீதித் தீர்ப்புக்குட்பட்டதாக ஆக்கியது.

(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE

● **36** தொடக்கம் **44** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றும் ஐந்து கூற்றுகளைக் கொண்டுள்ளது. அவற்றுள் ஒரு கூற்று **பிழையானதாகும். பிழையான** கூற்றைத் தெரிவுசெய்க.

**36.** 1978 அரசியல் யாப்பின் கீழ் இலங்கை அரசானது
(1) சுதந்திரமும் இறைமையும் தன்னாதிக்கமும் கொண்ட ஜனநாயக சோசலிசக் குடியரசாகும்.
(2) ஒற்றையாட்சி அரசாகும்.
(3) இறைமை அதிகாரம் மக்களின் கரங்களிலுள்ள ஒரு குடியரசாகும்.
(4) தன்னாதிக்கமும் இறைமையும் உடைய ஒன்பது மாகாணங்களைக் கொண்ட ஒரு குடியரசாகும்.
(5) பௌத்த மதத்துக்கு முதன்மைத் தானத்தை வழங்கும் ஒரு குடியரசாகும்.

**37.** 1978 யாப்பின் கீழ் பிரசைகளால் நிறைவேற்றப்பட வேண்டிய சில அடிப்படைக் கடமைகளும் கடப்பாடுகளுமாவன:
(1) அரசியல் யாப்பையும் சட்டத்தையும் பாதுகாத்துப் பின்பற்றுதல்
(2) தேசிய நலனை மேம்படுத்தலும் தேசிய ஐக்கியத்தை வளர்த்தலும்
(3) தனது சொந்த மதத்தையும் மொழியையும் பேணிப் பாதுகாத்து முன்னெடுத்துச் செல்லல்
(4) அரசாங்கச் சொத்தைப் பேணிப் பாதுகாத்தலும் அரசாங்கச் சொத்தின் துஷ்பிரயோகம், வீண்விரயம் ஆகியவற்றைத் தடுத்தலும்
(5) மற்றையவர்களின் உரிமைகளையும் சுதந்திரங்களையும் மதித்தல்

**38.** 1978 அரசியல் யாப்பின் உறுப்புரை 3 இன் பிரகாரம் குடியரசின் இறைமை மக்களுக்குரியதாகும். அதன் உறுப்புரை 4 இன்படி இறைமையானது மக்களால் பிரயோகிக்கக்கூடிய வழிமுறைகளாவன:
(1) சட்டவாக்க அதிகாரம் பாராளுமன்றின் மூலமும் மக்கள் தீர்ப்பின் மூலமும்
(2) தேசிய பாதுகாப்பு உள்ளிட்ட நிறைவேற்று அதிகாரம் மக்களால் தெரிவுசெய்யப்படும் ஜனாதிபதியின் மூலம்
(3) நீதிமுறை அதிகாரம் யாப்பினால் தாபிக்கப்படும் நீதிமன்றங்களின் மூலம் பாராளுமன்றினால்
(4) தேர்தல்களிலும் மக்கள் தீர்ப்புகளிலும் வாக்குரிமையின் மூலம்
(5) அடிப்படை உரிமைகள் சட்டமா அதிபரின் மூலம்

**39.** 1978 அரசியல் யாப்பின் கீழ் வழங்கப்பட்ட அடிப்படை உரிமைகள்
(1) எல்லா ஆட்களாலும் அனுபவிக்கக்கூடியவை, பிரசைகளால் மட்டும் அனுபவிக்கக்கூடியவை என இரு வகைப்படும்.
(2) நிறைவேற்று அல்லது நிர்வாகச் செயற்பாடுகளால் மீறப்படும்போது உறுப்புரை 126 இன் கீழ் நீதி விசாரணைக்கு உட்படுபவையாகும்.
(3) அரசியல் யாப்பின் உறுப்புரை 15 இன் கீழ் விதிக்கப்பட்டுள்ள மட்டுப்பாடுகளுக்கு உட்பட்டே அனுபவிக்கப்பட வேண்டும்.
(4) அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனத்தில் இடம்பெறும் அனைத்து உரிமைகளையும் ஒத்தனவாகும்.
(5) அரசாங்கத்தின் எல்லா நிறுவனங்களாலும் அங்கீகரிக்கப்படவும், போற்றப்படவும், பேணப்படவும், ஏற்றமளிக்கப்படவும் வேண்டும்.

**40.** 1978 அரசியல் யாப்பின் உறுப்புரை 30(1) இற்கு ஏற்ப ஜனாதிபதி அரசாங்கத்தின் தலைவராவார். அதன்படி ஜனாதிபதி
(1) கபினட் உறுப்பினர்களை நியமித்து அவர்களுக்கு அமைச்சுப் பொறுப்புகளைப் பங்கிட்டளிக்கின்றார்.
(2) கபினட் கூட்டங்களுக்குத் தலைமை தாங்குகிறார்.
(3) பொதுக் கொள்கைகளுக்கு இறுதி அங்கீகாரம் வழங்குகிறார்.
(4) அமைச்சுகளுக்கான செயலாளர்களை நியமிக்கின்றார்.
(5) பாராளுமன்றின் சபாநாயகரை நியமிக்கின்றார்.

**41.** 1978 யாப்பின் கீழுள்ள மந்திரி சபை
(1) பாராளுமன்ற உறுப்பினர்களிலிருந்து நியமிக்கப்படுவோரையும் ஜனாதிபதியையும் கொண்டுள்ளது.
(2) அரசாங்கத்தை வழிப்படுத்திக் கட்டுப்படுத்தும் பொறுப்பைப் பெற்றுள்ளது.
(3) பாராளுமன்றுக்குக் கூட்டாகப் பொறுப்புக்கூற வேண்டும்.
(4) பாராளுமன்றினால் நிறைவேற்றப்படும் நம்பிக்கையில்லாப் பிரேரணையின் மூலம் கலைக்கப்பட முடியும்.
(5) குறைந்தபட்சம் மாதம் ஒரு தடவையேனும் கூட்டம் ஒன்றினைக் கூட்டுதல் வேண்டும்.

**42.** 1978 யாப்பின் கீழ் தாபிக்கப்பட்ட பாராளுமன்றமானது
(1) பாராளுமன்ற இறைமை என்ற மூலக்கொள்கையின் அடிப்படையில் தாபிக்கப்பட்டுள்ளது.
(2) 225 உறுப்பினர்களைக் கொண்டிருப்பதோடு, அவர்களுள் தெரிவுசெய்யப்படும் 196 பேரையும் நியமிக்கப்படும் எஞ்சியோரையும் கொண்டுள்ளது.
(3) 19ஆம் திருத்தத்தின் மூலம் அதன் பதவிக்காலம் ஐந்து வருடங்களுக்கு வரையறுக்கப்பட்டுள்ளது.
(4) ஒவ்வொரு ஆண்டும் குறைந்தது ஒரு தடவையாவது கூட வேண்டும்.
(5) தனது சட்டவாக்க அதிகாரத்தைத் துறக்க அல்லது எவ்வகையிலும் பாராதீனப்படுத்த முடியாது.

**43.** 1978 யாப்பின் கீழ் தாபிக்கப்பட்ட நீதித்துறை முறைமையானது
(1) மக்களின் நீதிமுறை அதிகாரத்தைப் பாராளுமன்றம் பிரயோகிக்கும் கரமாகும்.
(2) உயர்நிலை, கீழ்நிலை என்ற இரு மட்ட நீதிமன்றங்களின் முறைமையைக் கொண்டுள்ளது.
(3) நீதிச் சேவை ஆணைக்குழுவின் வழிகாட்டல் மற்றும் கட்டுப்பாட்டின் பிரகாரம் செயற்பட வேண்டும்.
(4) இரண்டு மேனிலை நீதிமன்றங்களையும் பல கீழ்நிலை நீதிமன்றங்களையும் கொண்டுள்ளது.
(5) மிக மேலானதும் முடிவானதுமான மேனிலை நீதிமன்றமான உயர் நீதிமன்றின் தலைமையின் கீழ் கட்டமைக்கப்பட்டுள்ளது.

**44.** 1978 அரசியல் யாப்புக்கான 19ஆம் திருத்தத்தின் கீழ் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்ட சில புதிய கடமைகளும் பொறுப்புக்களுமானவன:
(1) அரசியல் யாப்பு மதிக்கப்பட்டுப் போற்றப்படுதலை உறுதிப்படுத்துதல்
(2) தேசிய நல்லிணக்கத்தையும் ஒருமைப்பாட்டையும் மேம்படுத்துதல்
(3) பகிரங்க சேவையில் நிலவும் ஊழலையும் இலஞ்சத்தையும் ஒழிப்பதற்குப் புதிய சட்டங்களை ஆக்குதல்
(4) அரசியலமைப்புப் பேரவை மற்றும் யாப்பின் VII அ எனும் அத்தியாயத்தில் குறிப்பிடப்படும் நிறுவனங்களின் முறையான செயற்பாட்டை உறுதிப்படுத்தலும் வசதியளித்தலும்
(5) சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தல்களும் மக்கள் தீர்ப்பும் நடைபெறுவதற்கு உகந்த நிபந்தனைகள் உருவாக்கப்படுதலை உறுதிசெய்தல்

● **45** தொடக்கம் **50** வரையிலான ஒவ்வொரு வினாவும் இரண்டு கூற்றுகளைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு வினாவுக்குமுரிய சோடிக் கூற்றுக்கு பின்வரும் அட்டவணை 1 இற்கான வழிகாட்டியிலுள்ள (1), (2), (3), (4), (5) என்பவற்றுள் எந்த விடை பொருந்துகிறது என்பதைக் குறிப்பிடுக.

**அட்டவணை 1 இற்கான வழிகாட்டி**

| இலக்கம் | கூற்று I | கூற்று II |
|---|---|---|
| (1) | உண்மை | உண்மை |
| (2) | உண்மை | பொய் |
| (3) | பொய் | உண்மை |
| (4) | பொய் | பொய் |
| (5) | உண்மை | உண்மை என்பதுடன், முதலாவது கூற்றைத் தெளிவாக விளக்குகிறது. |

**அட்டவணை 1**

| | கூற்று I | கூற்று II |
|---|---|---|
| **45.** | ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதி 536 பிரதிநிதிகளைக் கொண்டதொரு தேர்வாளர் கழகத்தினால் தெரிவுசெய்யப்படுகிறார். | வொஷிங்டன் DC ஐத் தவிர ஏனைய மாகாண அரசுகள் அனைத்தும் அவற்றின் நிலத்தின் அளவையும் சனத்தொகையையும் கருத்திற் கொள்ளாது தேர்வாளர் கழகத்துக்குச் சமமான பிரதிநிதிகளை அனுப்புவதற்கு உரித்துடையன. |
| **46.** | பிரித்தானிய அரசியல் யாப்பு எழுதப்படாதது எனப் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது. அதன் பெறுபேறாக பிரித்தானிய யாப்பு நெகிழக்கூடியது என்றும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது. | அதனால் பிரித்தானிய யாப்புத் திருத்தத்துக்கு விஷேட ஏற்பாடுகள் வேண்டப்படாததோடு அது பாராளுமன்றின் சாதாரண பெரும்பான்மையின் மூலம் திருத்தப்பட முடியும். |
| **47.** | இந்தியாவில் மத்திய அரசாங்கப் பாராளுமன்றின் சகல உறுப்பினர்களையும் உள்ளடக்கிய தேர்வாளர் கழகம் ஒன்றின் மூலம் நான்கு வருடப் பதவிக்காலத்துக்கு மத்திய அரசாங்கத்தின் ஜனாதிபதி தெரிவுசெய்யப்படுகிறார். | ஐக்கிய அமெரிக்காவில் போன்று, இந்திய யாப்பில் ஜனாதிபதிப் பதவிக்கு ஒரு நபர் தெரிவு செய்யப்படக்கூடிய தவணைகள் வரையறுக்கப்படாததோடு ஒரு நபர் எத்தனை தடவையும் தெரிவுசெய்யப்பட முடியும். |
| **48.** | பிரான்சில் அரசாங்கத்தின் சகல உறுப்பினர்களும் பிரதமரின் சுய விருப்பின் பேரில் நியமிக்கப்படுகின்றனர். | பிரான்சிய அரசாங்கம் தனது செயற்பாடுகள் குறித்து தேசிய அசெம்பிளிக்குப் பொறுப்புக்கூறுவதோடு அப்பொறுப்புக்கூறல் மீறப்படின் தேசிய அசெம்பிளியின் நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்றின் மூலம் அரசாங்கத்தைப் பதவி விலக்கலாம். |
| **49.** | அரசில் வாழும் மக்களின் சமூக நலன்களை மேம்படுத்துவதற்காக அரசாங்கங்கள் மேற்கொள்ளும் செயல்களே பொதுக் கொள்கைகளாகும் என வரைவிலக்கணப்படுத்த முடியும். | இச்செயல்களை பங்கீடு, வரி அறவிடல், ஒழுங்குபடுத்தல், அடையாளப்படுத்தல் என நான்கு வகுதிகளாக வகைப்படுத்த முடியும். |
| **50.** | சர்வதேச அரசியல் என்பது தேசிய நலன்களை மேம்படுத்துவதனை இலக்காகக் கொண்டு தேசங்களுக்கு மத்தியில் நிலவும் அரசியலாகும் எனப் பொதுவாகக் கருதப்படுகிறது. | அரச சார்பு மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் சர்வதேச அரசியலின் பிரதான செயற்பாட்டாளர்களாவர். |

* * *

## ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
## இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

### අ.පො.ස. (උ.පෙළ) විභාගය/ க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை - 2018

විෂයය අංකය / பாட இலக்கம்: **23**

විෂයය / பாடம்: **அரசியல் விஞ்ஞானம்**

### ලකුණු දීමේ පටිපාටිය/புள்ளி வழங்கும் திட்டம்

### I පත්‍රය/பத்திரம் I

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01. | 3 | 11. | 1 | 21. | 1 | 31. | 3 | 41. | 5 |
| 02. | 2 | 12. | 4 | 22. | 3 | 32. | 2 | 42. | 1 |
| 03. | 5 | 13. | 5 | 23. | 5 | 33. | 4 | 43. | 3 |
| 04. | 4 | 14. | 1 | 24. | 2 | 34. | 2 | 44. | 3 |
| 05. | 1 | 15. | 4 | 25. | 2 | 35. | 1 | 45. | 4 |
| 06. | 1 | 16. | 5 | 26. | 5 | 36. | 4 | 46. | 5 |
| 07. | 2 | 17. | 5 | 27. | 3 | 37. | 3 | 47. | 3 |
| 08. | 3 | 18. | 2 | 28. | 2 | 38. | 5 | 48. | 3 |
| 09. | 1 | 19. | 3 | 29. | 2 | 39. | 4 | 49. | 5 |
| 10. | 2 | 20. | 3 | 30. | 1 | 40. | 5 | 50. | 2 |

✪ විශේෂ උපදෙස්/ விசேட அறிவுறுத்தல் :

එක් පිළිතුරකට/ ஒரு சரியான விடைக்கு 02 ලකුණු බැගින්/புள்ளி வீதம்

මුළු ලකුණු/மொத்தப் புள்ளிகள் 2 × 50 = 100

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2018 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2018 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2018

දේශපාලන විද්‍යාව II
அரசியல் விஞ்ஞானம் II
Political Science II

23 T II

17.08.2018 / 1400 - 1710

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

சுட்டெண்: ..................................

| பகுதி A | |
|---|---|
| மொத்தப் புள்ளிகள் | 20 |

**அறிவுறுத்தல்கள்:**

* இவ்வினாப்பத்திரம் **A, B, C** என்ற **மூன்று** பகுதிகளைக் கொண்டதாகும்.
* பகுதி **A** ஆனது **20** குறு வினாக்களைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு பூரண விடைக்கும் **01** புள்ளியும் அரைகுறை விடைக்கு **1/2** புள்ளியும் வழங்கப்படும். சகல வினாக்களுக்குமான குறு விடைகளை **இவ்வினாத்தாளிலேயே** எழுதி, அதனைப் பகுதி **B, C** ஆகியவற்றின் விடைத்தாள்களுடன் இணைத்துக் கையளிக்குக.
* பகுதி **B** யிலிருந்தும் **C** யிலிருந்தும் **இவ்விரண்டு** வினாக்களைத் தெரிவுசெய்து, எல்லாமாக **நான்கு** வினாக்களுக்கு விடை தருக.

## பகுதி A

**1.** கீழே தரப்பட்டுள்ள கூற்றுகளால் விபரிக்கப்படும் **இரண்டு** அரசியல் ஒழுங்கமைப்புகளை இனங்கண்டு பெயர் குறிப்பிடுக.

(i) எல்லா சமூக அமைப்புகளையும் விட உயர்ந்த சர்வ வல்லமை மிக்க அரசியல் ஒழுங்கமைப்பு.

(ii) அரசின் விருப்பை நிறைவேற்றும் அரசியல் நிறுவனம்.

(1) ......................................................................................................

(2) ......................................................................................................

**2.** கீழே தரப்பட்டுள்ள கூற்றுகளின் மூலம் நவீன உலகில் செயற்பாட்டிலுள்ள ஓர் அரசாங்க முறையும் ஓர் அரசு முறையும் விபரிக்கப்படுகின்றன. அவற்றை இனங்கண்டு பெயர் குறிப்பிடுக.

(i) மக்களினால் மக்களுக்காகவுள்ள மக்களின் அரசாங்கம்.

(ii) அதன் பிரசைகளுக்குச் சமூக சேவைகளையும் சமூகப் பாதுகாப்பையும் வழங்கும் அரசு.

(1) ......................................................................................................

(2) ......................................................................................................

**3.** கீழே தரப்பட்டுள்ள கூற்று (i) மற்றும் கூற்று (ii) ஆகியவற்றினால் தெளிவுபடுத்தப்படும் நேரடி ஜனநாயகத்தின் **இரு** வழிமுறைகளை இனங்கண்டு பெயர் குறிப்பிடுக.

(i) "இது 'கருத்து கோரப்பட வேண்டும்' என்ற பொருளைத் தரும் ஒரு பிரான்சியச் சொல்லாகும். இதன் பொருள் என்னவெனில் அவர்களின் தீர்ப்புக்காக ஒரு சட்ட மசோதா மக்களுக்கு அல்லது வாக்காளர்களுக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதாகும். அது ஒரு சட்டவாக்கச் செயன்முறையாக இருப்பதுடன் சட்டத்துறையால் நிறைவேற்றப்படும் ஒரு சட்ட மசோதா வாக்காளர்களுள் பெரும்பான்மையினரால் ஏற்றுக்கொள்ளப்பட்டு அங்கீகரிக்கப்படும் வரை சட்டமாகமாட்டாது."

(ii) "இந்த வழிமுறையின் கீழ் யாப்பில் குறிப்பிடப்படும் மக்கள் தொகையினரால் ஒரு சட்ட மசோதா முன்மொழியப்பட்டு சட்டத்துறையின் பரிசீலனைக்காகச் சமர்ப்பிக்கப்படும்போது சட்டத்துறை அதனைச் செய்வதற்கான கடப்பாட்டைக் கொண்டிருக்கின்றது. அதன் பின்னர் சட்டத்துறை அம்மசோதாவை மக்களின் அனுமதிக்காக அல்லது நிராகரிப்புக்காகச் சமர்ப்பிக்க வேண்டும். இந்த வழிமுறையின் நோக்கம் சட்டவாக்கத்தை முன்மொழிவதற்கான அதிகாரத்தை மக்களுக்கு வழங்குவதாகும்."

(1) ........................................................................................................

(2) ........................................................................................................

**4.** கீழே தரப்பட்டுள்ள கூற்று (i) மற்றும் கூற்று (ii) ஆகியவற்றினால் விபரிக்கப்படுவனவற்றின் பெயர்களைக் குறிப்பிடுக.

(i) இது மானிட ஜனசமூகத்தை விபரிப்பதற்குப் பயன்படுத்தப்படும் ஒரு சொல்லாக இருப்பதுடன் அரசானது வரலாற்றுரீதியாக அதிலிருந்தே தோன்றியுள்ளது.

(ii) பொதுவான பிணைப்புகள் அதாவது மொழி, சமயம், இனம், ஆள்புலம் மற்றும் வரலாறு ஆகிய அடையாளங்களின் மீது கட்டியெழுப்பப்பட்ட பொதுக் கலாசாரம் பற்றிய உணர்வைப் பகிர்ந்து கொள்ளும் ஒரு மக்கள் குழுவாகும்.

(1) ........................................................................................................

(2) ........................................................................................................

**5.** பின்வரும் இரு கூற்றுகளினாலும் விபரிக்கப்படும் அரசியல் கோட்பாடுகள் **இரண்டினையும்** குறிப்பிடுக.

(i) அதிகளவு அதிகாரக் குவிப்புக்கு எதிரான முன்னெச்சரிக்கையாக, அரசியல் அதிகாரமானது அரசினது பல நிறுவனங்களுக்கிடையில் பிரித்தளிக்கப்பட வேண்டும் என்ற சித்தாந்தமாகும்.

(ii) சகலரும் சட்டத்தின் முன் சமமானவர்கள் என்றும் சட்டத்தின் சமமான பாதுகாப்புக்குரியவர்கள் என்றும் வலியுறுத்தும் அரசியல் யாப்பின் ஒரு மூலக் கொள்கையாகும்.

(1) ........................................................................................................

(2) ........................................................................................................

**6.** மாக்சீயக் கோட்பாடானது அரசின் தோற்றம், படிமுறை வளர்ச்சி, முடிவு என்பன தொடர்பான ஐந்து கட்டங்களைக் குறிப்பிடுகிறது. அதன் இறுதி **இரண்டு** கட்டங்களைக் குறிப்பிடுக.

(1) ........................................................................................................

(2) ........................................................................................................

**7.** சமூக ஒப்பந்தக் கோட்பாடானது அரசின் தோற்றம் பற்றிய ஓர் அரசியல் கோட்பாடாகும். இக்கோட்பாட்டின் ஒரு மூலகர்த்தா தனிமுதன்மையான முடியாட்சியை முன்மொழிந்ததோடு மற்றையவர் பிரதிநிதித்துவ அரசாங்கத்தை ஆதரித்தார். அவ் **இருவரினதும்** பெயர்களைக் குறிப்பிடுக.

(1) தனி முதன்மையான முடியாட்சி : ........................................................................

(2) பிரதிநிதித்துவ அரசாங்கம் : ........................................................................

**8.** பின்வரும் இரு கூற்றுகளினால் விபரிக்கப்படுவனவற்றை இனங்கண்டு அவை **இரண்டையும்** குறிப்பிடுக.

(i) "அரசாங்கத்தின் குறிப்பிட்ட கொள்கைகள் மீது செல்வாக்குச் செலுத்துவதற்கு அல்லது கட்டுப்படுத்துவதற்கு முயற்சிக்கின்ற, ஆனால் அரசாங்க அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கோ அல்லது அரசாங்கத்தின் சகல கொள்கைகளையும் கட்டுப்படுத்துவதற்கோ முயற்சிக்காத தனியார் மற்றும் தன்னார்வ அமைப்புகளாகும்."

(ii) "இந்தச் சொல் ஜனசமூகத்தைப் பாதிக்கின்ற அல்லது அதன் ஆர்வத்தை ஏற்படுத்துகின்ற விடயங்கள் பற்றி மனிதர் கொண்டுள்ள கருத்துகளின் திரட்டினைக் குறிப்பதற்கே பொதுவாகப் பயன்படுத்தப்படுகிறது. அதன்படி அது பல்வேறு கருத்துகள், நம்பிக்கைகள், மூடநம்பிக்கைகள், பாரபட்சங்கள், எதிர்பார்க்கைகள் என்பவற்றின் ஒரு கலவையாகும்."

(1) ........................................................................................................

(2) ........................................................................................................

9. இறைமை என்பது அரசுகளின் ஆணையதிகாரத்தின் மூலாதாரமாகக் கருதப்படுகிறது. நவீன உலகில் இறைமை அதிகாரத்தின் நடைமுறையானது இரு அரசாங்க மாதிரிகளின் கீழ் ஒழுங்குபடுத்தப்படுகிறது. அவ்விரு அரசாங்க மாதிரிகளையும் குறிப்பிடுக.

(1) ..............................................................................................................

(2) ..............................................................................................................

10. தாராள ஜனநாயகமானது பிரதிநிதித்துவத்தின் அடிப்படையில் தொழிற்படுகின்றது. பிரதிநிதித்துவத்தை வெற்றிகரமாகச் செயற்படுத்துவதற்கு அவசியமான இரு நிபந்தனைகள் காணப்படுகின்றன. அவ்விரு நிபந்தனைகளையும் குறிப்பிடுக.

(1) ..............................................................................................................

(2) ..............................................................................................................

11. (i) இலங்கையில் எந்த அரசியல் யாப்புச் சீர்திருத்தத்தின் கீழ் முதலாவது சட்டமன்றம் தாபிக்கப்பட்டது ?

(ii) இலங்கையில் எந்த அரசியல் யாப்புச் சீர்திருத்தத்தின் கீழ் அரசாங்க சபை தாபிக்கப்பட்டது ?

(1) ..............................................................................................................

(2) ..............................................................................................................

12. இலங்கையில் (i) மட்டுப்படுத்தப்பட்ட வாக்குரிமை

(ii) சர்வஜன வாக்குரிமை

என்பவற்றை அறிமுகம் செய்த அரசியல் யாப்புச் சீர்திருத்தங்களைக் குறிப்பிடுக.

(1) ..............................................................................................................

(2) ..............................................................................................................

13. இலங்கையில் (i) இனவாரிப் பிரதிநிதித்துவ முறையை அறிமுகம் செய்ததும்

(ii) இனவாரிப் பிரதிநிதித்துவ முறையை இல்லாதொழித்ததுமான

அரசியல் யாப்புச் சீர்திருத்தங்களைப் பெயர் குறிப்பிடுக.

(1) ..............................................................................................................

(2) ..............................................................................................................

14. (i) இலங்கையில் எந்த அரசியல் யாப்பின் கீழ் முதன்முதலாகப் பகிரங்க சேவை ஆணைக்குழு தாபிக்கப்பட்டது ?

(ii) இலங்கையில் எந்த அரசியல் யாப்பின் கீழ் பகிரங்க சேவையை அரசியல் நிறைவேற்றுப் பகுதியின் கீழ் கொண்டு வருவதற்காகப் பகிரங்க சேவை ஆணைக்குழு இல்லாதொழிக்கப்பட்டது ?

(1) ..............................................................................................................

(2) ..............................................................................................................

15. (i) இலங்கையின் தற்போதைய நீதித்துறை முறைமையானது அரசியல் யாப்புச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இரு உயர்நிலை நீதிமன்றங்களைக் கொண்டுள்ளது. அவ்விரு உயர்நிலை நீதிமன்றங்களையும் குறிப்பிடுக.

(ii) மேற்குறித்த இரு உயர்நிலை நீதிமன்றங்களினதும் நீதிபதிகளின் நியமனம் தொடர்பான செயல்முறை யாது ?

(1) ..............................................................................................................

(2) ..............................................................................................................

16. (i) 1978 அரசியல் யாப்புக்கான ஒரு திருத்தத்தின் மூலம் இலங்கையில் மாகாண சபைகள் தாபிக்கப்பட்டுள்ளன. அந்தத் திருத்தத்தையும் அது அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டையும் குறிப்பிடுக.

(ii) இலங்கையின் தற்போதைய உள்ளூராட்சி அரசாங்க முறைமையானது மூன்று வகையான உள்ளூராட்சி மன்றுகளைக் கொண்டுள்ளது. அவற்றினைப் பெயர் குறிப்பிடுக.

(1) ..................................................

(2) ..................................................

17. (i) ஐக்கிய நாடுகள் தாபனத்தில் தீர்மானங்களை எடுக்கும் உயர் அமைப்பு எது ?

(ii) ஐக்கிய நாடுகள் தாபனத்தின் செயலாளர் நாயகம் நியமிக்கப்படும் செயல்முறை யாது ?

(1) ..................................................

(2) ..................................................

18. (i) பிராந்திய ஒத்துழைப்பினை மேம்படுத்துவதற்காகத் தென்னாசிய நாடுகளால் தாபிக்கப்பட்டுள்ள பிராந்திய நிறுவனம் எது ?

(ii) இவ்வமைப்பின் ஆரம்பப் பிரகடனத்துக்கு ஏற்ப அதன் கூட்டக் கலந்துரையாடல்களில் இரண்டு விடயங்கள் தவிர்க்கப்பட வேண்டும். அவை யாவை ?

(1) ..................................................

(2) ..................................................

19. (i) சர்வதேச மற்றும் உள்நாட்டு மோதல்களின் போது பாதிக்கப்பட்டவர்களின் உயிர் மற்றும் சுய கௌரவத்தினைப் பாதுகாப்பதற்காக சர்வதேச மனிதாபிமான சட்டத்துடன் தொடர்புபட்டுச் செயற்படும் அரச சார்பற்ற செயற்பாட்டாளர் யாது ?

(ii) அதன் தலைமையகம் எந்த நகரில் தாபிக்கப்பட்டுள்ளது ?

(1) ..................................................

(2) ..................................................

20. (i) ஐரோப்பியத் தேசங்களுக்கிடையில் ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவதற்காகச் செயற்படும் அமைப்பு யாது ?

(ii) தற்போது அந்த அமைப்பிலிருந்து வெளியேறுவதற்குத் தீர்மானித்துள்ள நாடு யாது ?

(1) ..................................................

(2) ..................................................

* *

# பகுதி A

## 01 - 20 வரையுள்ள ஒவ்வொரு குறு வினாவுக்குமுரிய விடைகள்

**வினா இல : 01**

1. அரசு
2. அரசாங்கம்

**வினா இல : 02**

1. ஜனநாயக அரசாங்க முறை
2. நலன்பேண் அரசு / பொதுநல அரசு / சேமநல அரசு

**வினா இல : 03**

1. ஒப்பங்கோடல் / குடியொப்பம் / மக்கள் தீர்ப்பு
2. தொடக்கி வைத்தல் / ஆரம்பித்து வைத்தல் /தொடக்க உரிமை / குடி முனைப்பு

**வினா இல : 04**

1. சமூகம்
2. தேசம்

**வினா இல : 05**

1. அதிகார வேறாக்கம் / வலு வேறாக்கம் / அதிகாரப் பிரிவினை
2. சட்டத்தின் ஆட்சி / சட்டவாட்சி

**வினா இல : 06**

1. சோசலிச / சமதர்மக் கட்டம்
2. கொமியூனிஸ / பொதுவுடமைச் சமுகம்

**வினா இல : 07**

1. தோமஸ் ஹொப்ஸ்
2. ஜோன் லொக்

**வினா இல : 08**

1. அழுக்கக் குழுக்கள் / நலன் பேண் குழுக்கள்
2. பொதுசன அபிப்பிராயம்

**வினா இல : 09**

1. சமஸ்டியாட்சி அரசாங்கம் / கூட்டாட்சி
2. ஒற்றையாட்சி அரசாங்கம்

**வினா இல : 10**

1. சர்வஜன வாக்குரிமை
2. காலகாலத் தேர்தல்கள்

**வினா இல : 11**

1. 1833 கோல்புரூக் - கமரன் சீர்திருத்தம் / கோல்புறுக்
2. 1931 டொனமூர் சீர்த்திருத்தம்

**வினா இல : 12**

1. 1911 குறு - மக்கலம் சீர்திருத்தம்
2. 1931 டொனமூர் சீர்திருத்தம்

**வினா இல : 13**

1. 1833 கோல்புரூக் - கமரன் சீர்திருத்தம்
2. 1931 டொனமூர் சீர்திருத்தம்

**வினா இல : 14**

1. 1931 டொனமூர் சீர்திருத்தம்
2. 1972 முதலாம் குடியரசு அரசியல் யாப்பு

**வினா இல : 15**

1. உயர் நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றம்
2. அரசியல் அமைப்புப் பேரவையின் அங்கீகாரத்துடன் ஜனாதிபதியால்

**வினா இல : 16**

1. 13 ஆம் யாப்புத் திருத்தம், 1987
2. மாநகர சபைகள், நகர சபைகள், பிரதேச சபைகள்

**வினா இல : 17**

1. பொதுச் சபை
2. பாதுகாப்புச் சபையின் சிபார்சின் பேரில் பொதுச் சபையினால்

**வினா இல : 18**

1. பிராந்திய ஒத்துழைப்புக்கான தெற்காசிய சங்கம் / சார்க்
2. இரு தரப்பு பிரச்சினைகள் மற்றும் சர்ச்சைக்குரிய விடயங்கள்

**வினா இல : 19**

1. சர்வதேச செஞ்சிலுவைக் குழு / ICRC
2. சுவிற்சர்லாந்தின் ஜெனீவா

**வினா இல : 20**

1. ஐரோப்பிய ஒன்றியம் / ஐரோப்பிய யூனியன் / EU
2. பெரிய பிரித்தானியா

# அரசியல் விஞ்ஞானம் II

## பகுதி B

**வினா இலக்கம் 01 :**

**அரசானது சமூகத்திலுள்ள உயர் நிறுவனமாக ஏன் கருதப்படுகிறது? (20 புள்ளிகள்)**

**நோக்கம்**

மனித சமூகத்தில் மனிதர்களால் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள சமூக அமைப்புக்களின் இயல்புகளை அடையாளம் காண்பதற்கும் அந்த அமைப்புகளுக்கிடையில் அரசு ஏன் உயர் நிறுவனமாக கருதப்படுகின்றது என்பதும் குறித்த பரீட்சார்த்திகளின் அறிவையும் புரிதலையும் பரிசோதிப்பதாகும்.

**விடையில் உள்ளடக்கப்பட வேண்டிய அடிப்படை விடயங்கள்**

- அரசை அடையாளம் காணுதல் 05 புள்ளிகள்
- அரசை உயர் சமூக நிறுவனமாக அடையாளம் காணுதல் 10 புள்ளிகள்
- முடிவுரை: விடையின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ள விடயங்கள் உண்மையானவையா? இல்லையா எனக் கூறுதல். 05 புள்ளிகள்

**மாதிரி விடை**

- நிச்சயமான ஒரு ஆள்புலப் பிரதேசத்தில் வாழும் மக்களின் பொது நன்மைகளை பாதுகாத்து விருத்தி செய்வதனை நோக்கமாகக் கொண்டு ஆணையதிகாரத்தை நடைமுறைப்படுத்துவதற்காக விசேடமாக ஒழுங்கமைக்கப்பட்டுள்ள அரசியல் நிறுவன முறைமையைக் கொண்ட ஒரு மனித சமூகமே அரசு எனக் கருதப்படுகிறது.

- இதன் பிரகாரம் அரசியல் ரீதியாக ஒழுங்கமைந்த ஒரு மனித ஜனக்குழுவை அரசு என அடையாளம் காண்பதற்கு துணை புரியும் பல காரணிகள் காணப்படுகின்றன. ஒரு நிச்சயமான ஆள்புலப் பிரதேசம் இருத்தல், அப்பிரதேசத்தில் நிரந்தரமாக வதியும் ஒரு மனித ஜனக்குழு இருத்தல், அந்த மனித ஜனக்குழுவின் அரசியல், பொருளாதார, சமூக நோக்கங்களை நிறுவேற்றுவதற்காக செயற்படும் ஒரு ஆட்சி நிறுவன முறைமை காணப்படுதல், அவ்வாறு செயற்படுவதற்கான தளத்தை வழங்கும் ஆணையதிகாரம் இருத்தல் என்பனவே அக்காரணிகளாகும்.

- சமூக ரீதியாக ஒழுங்கமைந்த ஒரு மனித ஜனக்குழுவை கவனத்தில் கொள்ளும் போது அதில் மனிதர்களால் பல்வேறு நோக்கங்களுக்காக தாபிக்கப்பட்டுள்ள சமூக நிறுவனங்கள் ஆயிரக்கணக்கில் காணப்படுகின்றன. இந்த நிறுவனங்களுள் சிறிய சமூக நிறுவனம் என்பது ஓர் ஆணும் பெண்ணும் இணைந்து தாபித்துள்ள குடும்பமாகும். உயர் சமூக நிறுவனம் யாதேனில் மனித ஜனக்குழுவின் சகலரும் ஒன்றிணைந்து தாபித்துள்ள அரசு என்னும் ஒழுங்கமைப்பாகும்.

- இதன் பிரகாரம் அரசு என்பதும் மனிதர்களால் தாபிக்கப்பட்டுள்ள சமூக நிறுவனங்களுள் ஒரு சமூக ஒழுங்கமைப்பே ஆகும். எனினும் ஏனைய சமூக ஒழுங்கமைப்புகளோடு ஒப்பிடும் போது அரசானது அந்த சகல சமூக ஒழுங்கமைப்புகளையும் விட உயர்ந்த சமூக நிறுவனமாக கருதப்படுகின்றது. இது தொடர்பாக 2 காரணிகள் பாதிப்பு செலுத்துவதைக் காணலாம்.

- அவற்றுள் ஒன்று மனித சமூகத்தில் வாழும் சகல மனிதர்களினதும் பங்களிப்பின் மூலம் தாபிக்கப்பட்டுள்ள ஒரே சமூக நிறுவனம் அரசாக இருப்பதாகும். ஏனைய எந்தவொரு சமூக நிறுவனமும் அவ்வாறு பொது மனித பங்கேற்பு தளத்தை கொண்டிருப்பதில்லை. அந்த சகல சமூக நிறுவனங்களும் மனித சமூகத்தின் ஒரு பகுதியினரின் பங்கேற்புடன் மட்டுமே ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

- அரசு பெற்றுள்ள ஆணையதிகாரம் இரண்டாவது காரணியாகும். ஆணையதிகாரம் என்பது அதிகாரத்தை பிரயோகிப்பதற்கும்நடைமுறைப்படுத்துவதற்கும்உள்ளதிறனாகும். இவ்வதிகாரம் அரசியல்விஞ்ஞானத்தில் மரபு ரீதியாக இறைமை என்று அழைக்கப்படுகின்றது. அது தன்னிகரற்றதும் உயர்ந்ததுமான அதிகார மென அழைக்கப்படுகிறது. அரசு ஏனைய சமூக நிறுவனங்களை விட வேறுபடுவதற்கும், அவற்றை விட அது உயர்ந்ததாக கருதப்படுவதற்கும் காரணம் அரசு பெற்றுள்ள இந்த ஆணையதிகாரம் ஆகும்.

- அரசின் மூலம் அரசினில் வாழும் மனித ஜனக்குழுவை கட்டுப்படுத்துவதற்காக சட்டங்களை பிறப்பிப்பதும் சட்டங்களை நடைமுறைப்படுத்துவதும் சட்டங்களை மீறினால் தண்டனை வழங்குவதும் இந்த அதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டேயாகும். இவ்வாறு விதிக்கப்படும் தண்டனைகள் எளிமையான அறிவுறுத்தல்களிலிருந்து மரண தண்டனை வரை மாற்றமுற முடியும். இதன் மூலம் ஒரு விடயம் தெளிவாவது என்னவெனில் தண்டனை வழங்குவதன் மூலம் ஒருவரின் வாழ்க்கையைக் கூட இல்லாதொழிப்பதற்கான சட்ட ரீதியான அதிகாரத்தை அரசு பெற்றுள்ளது என்பதாகும்.

- இவ்வாறான ஆணையதிகாரம் வேறு எந்தவொரு சமூக நிறுவனத்திற்கும் உரித்தாக்கப்படவில்லை. ஏனைய சமூக நிறுவனங்கள் தமது உறுப்பினர்கள் மீது பிரயோகிக்கக்கூடிய ஓர் அதிகாரம் இருக்குமாயினும் அது அரசுக்குரிய ஆணையதிகாரத்தை எவ்விதத்திலும் ஒத்ததன்று. ஏனைய சமூக நிறுவனங்களின் அதிகார மானது அரசின் ஆணையதிகாரத்தோடு முரண்படுமாயின் அங்கு கட்டாயமாக சமூக நிறுவனங்களின் அதிகாரம் கீழ்ப்பட்டு அரசின் ஆணையதிகாரமே நடைமுறைப்படுத்தப்படும். சிலவேளை அந்த முரண்பாட்டின் விளைவாக சமூக நிறுவனமும் முழுமையாக அழிந்துவிடலாம்.

- மேலே குறிப்பிட்டது போன்று அரசானது ஏனைய சமூக நிறுவனங்களை விட உயர்ந்ததாக இருப்பதில் பாதிப்புச் செலுத்தும் முக்கியமான விடயம் பொதுத் தன்மையும் தனிப்பட்ட தன்மையும் ஆகும். இதன் பொருள் என்னவெனில் அரசு ஒரு பொது சமூக நிறுவனமாகவும் ஏனைய சகல சமூக நிறுவனங்களும் தனிப்பட்ட நிறுவனங்களாக இருப்பதும் ஆகும்.

- மனித சமூகத்தினில் வாழும் சகல மனிதர்களினதும் பங்கேற்போடு தாபிக்கப்பட்டுள்ள ஒரே சமூநிறுவனம் அரசு ஆகும். ஏனைய சகல சமூக நிறுவனங்களும் சமூகத்தில் வாழும் மனிதர்களுள் ஒரு பகுதியி-னரின் பங்கேற்போடு மட்டுமே தாபிக்கப்பட்டுள்ளன. இதன் பிரகாரம் அரசினில் வாழும் முழு மனித ஜனக்குழுவுக்காகவுமே அரசு செயற்படுகின்றது. அரசு முழு மனித ஜனக்குழுவினதும் அதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டே செயற்படுகின்றது. அத்துடன் அரசானது நிலையானதும் தொடர்ச்சியானதுமாக நிலவும் ஒரு சமூக நிறுவனமாகும். இத்தகைய எந்தவொரு பண்பும் ஏனைய எந்தவொரு சமூக நிறுவனத்திற்கும் இருப்பதில்லை. இதன் காரணமாகவும் அரசு ஏனைய சமூக நிறுவனங்களை விட உயர்ந்ததாக கருதப்படுகிறது.

- சர்வதேச அரசியலில் கவனம் செலுத்தும்போது கூட அரசின் உயர் தன்மையைக் காணலாம். சர்வதேசஅரசியல் தொடர்பாக பல செயற்பாட்டாளர்கள் இருப்பினும் அரசைத் தவிர ஏனைய சகல செயற்பாட்டாளர்களும் தனிப்பட்டவர்களே எனக் கருதப்படுகின்றன. சர்வதேச சமூகத்தின் இருப்பு அல்லது அழிவு தொடர்பாக பாதிப்புச் செலுத்தும் நிர்ணயமான செயற்பாட்டாளர் அரசு ஆகும். எனவே தான் சர்வதேச அரசியல் என்பது அரசுகளுக்கிடையிலான அரசியலாகும் என கூறப்படுகிறது.

**வினா இலக்கம் 02 :**

**பின்வரும் தலைப்புகளில் எவையேனும் இரண்டு பற்றி ஆராய்க.**

**(i) அரசாங்கத்தின் இயல்பு**

**(ii) அரசாங்கத்தின் தொழிற்பாடு**

**(iii) அரசாங்கங்களை வகைப்படுத்தல்** **(10 × 2 = 20 புள்ளிகள்)**

(i) அரசாங்கத்தின் இயல்பு

நோக்கம்

அரசாங்கம் என்பது மனிதர்களால் தாபிக்கப்பட்டுள்ள பிறிதொரு தனித்துவமான அரசியல் நிறுவனமாகும். ஏனைய சமூக நிறுவனங்களோடு கவனத்தில் எடுக்கும் போது அரசாங்கம் என்ற நிறுவனமானது தனித்துவமான நிறுவனமாக கருதப்படுகிறது. அதற்குக் காரணம் அரசின் ஆணையதிகாரத்தை நடைமுறைப்படுத்துவதற்கான அதிகாரத்தைப் பெற்ற ஒரே நிறுவனமாக அரசாங்கம் இருப்பதனால் ஆகும். எனவே ஏனைய சகல சமூக நிறுவனங்களும் அரசுக்கு கீழ்ப்படிவதோடு அரசாங்கத்தின் கட்டளைக்கும் வழிப்படுத்தலுக்கும் உட்பட்டே அவை செயற்பட வேண்டும். அரசாங்கத்திற்குரிய இந்த தனித்துவமான நிலையினைப் பற்றி பரீட்சார்த்திகளின் அறிவையும் புரிதலையும் பரிசோதிப்பதே இவ்வினாவின் நோக்கமாகும்.

விடையில் உள்ளடக்கப்பட வேண்டிய அடிப்படை விடயங்கள்

| | | |
|---|---|---|
| (அ) | அரசாங்கத்தை அடையாளம் காணுதல் | 04 புள்ளிகள் |
| (ஆ) | அரசாங்கம் ஒரு தனித்துவமான நிறுவனமாக ஏன் உள்ளது | 04 புள்ளிகள் |
| (இ) | முடிவுரை | 02 புள்ளிகள் |

மாதிரி விடை

- அரசின் விருப்பினை நடைமுறையில் நிறைவேற்றுவதற்காக அரசில் வாழும் மக்களினால் தாபிக்கப்பட்டுள்ள அரசியல் நிறுவனமே அரசாங்கமாகும் என அடையாளம் காண முடியும்.

- இதன் பிரகாரம் அரசின் இருப்புக்காக கட்டாயமாக இருக்கவேண்டிய ஓர் அமைவுக்காரணி அரசாங்கமாகும் எனக் கருதப்படுகின்றது. இவ்வாறாயினும் அரசோடு ஒப்பிடும் போது அரசாங்கம் என்பது ஒரு சிறிய நிறுவனமாகிறது. அதேபோன்று கோட்பாட்டு ரீதியாக கவனத்தில் கொள்ளும் போது அரசின் ஆள்புலப் பிரதேசத்தினில் வாழும் சகல மனிதர்களும் அரசாங்கத்தின் உறுப்பினர்களாக இருப்பதில்லை இதே போன்று அரசின் இருப்பிற்காக அவசியமானது என கருதப்படும் நிச்சயமான ஆள்புலப் பிரதேசம் ஒன்று கட்டாயம் அரசாங்கத்துக்கும் இருக்க வேண்டும் என்பது அவசியமில்லை. அதற்குக் காரணம் அரசுக்குரிய ஆள்புல எல்லைகள் இன்றியும், அந்த அரசுக்காக அரசாங்கம் செயற்படக்கூடியதாக இருத்தலுமாகும்.

- அரசின் இயல்பானது அரசாங்கத்தின் இயல்பின்படியே தீர்மானமாகின்றது. அதன் மீது அரசாங்கம் பின்பற்றும் அரசியல் பொருளாதார சமூக தத்துவங்களே பாதிப்புச் செலுத்துகின்றன. அந்த தத்துவங்கள் நிர்ணயமாவதில் 4 முக்கிய விடயங்கள் காணப்படுகின்றன.
  (1) அரசின் ஆணையதிகாரம் எவரது கையில் தங்கியுள்ளது.
  (2) அந்த ஆணையதிகாரம் எந்தளவு பயன்படுத்தப்படுகின்றது.
  (3) இவ்வாறான அதிகார நிறுவனங்கள் எதற்காக பயன்படுத்தப்படுகின்றது.
  (4) அதற்காக எவ்வாறான சட்டத்திட்டங்களும் வழிமுறைகளும் பயன்படுத்தப்படுகின்றன என்பனவாகும்.

இந்த 4 விடயங்களினதும் இணைவின் விளைவாகவே அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் அரசக் கொள்கைகளின் இயல்பு தீர்மானிக்கப்படுகிறது.

- அரசாங்கம் பற்றி ஒரு பொதுவான பொருள் விளக்கம் காணப்படுவதில்லை. சிலர் குறிப்பிடுவதன் பிரகாரம் அரசாங்கம் என்பது மனித சமூகத்தில் உள்ள மக்களின் இருப்பு தொடர்பான பணிகளை ஆணையதிகாரத்தின் அடிப்படையில் நடைமுறைப்படுத்தும் நிறுவனமே அரசாங்கமாகும். சிலர் மனித சமூகத்தை ஆட்சி புரியும் மற்றும் நிர்வகிக்கும் நிறுவனம் என்று அரசாங்கத்தை அறிமுகப்படுத்துகின்றனர். வேறும் சிலர் மனித சமூகத்தைக் கட்டுப்படுத்தும் மனிதக் குழுவே அரசாங்கமாகும் என பொருள் விளக்கம் செய்கின்றனர். அரச ஆட்சியை நடைமுறைப்படுத்தும் விதி முறையே அரசாங்கமாகும் என்றும் பொருள் கூறப்படுகிறது.

- இந்த சகல பொருள் விளக்கங்களும் ஒரே கருத்தையே வெளிப்படுத்துகின்றன. அதாவது அரசியல் ரீதியாக ஒழுங்கமைந்த மனித சமூகத்தை கட்டுப்படுத்தும் அரசியல் பொறிமுறையே அரசாங்கம் என்பதாகும்.

- அரசாங்கம் என்பது மனிதர்களால் தாபிக்கப்பட்டுள்ள சமூக நிறுவனங்களுள் ஒன்றாக இருப்பினும் அது ஏனைய சமூக நிறுவனங்களையும் விட தனித்துவமான சமூக நிறுவனமாக கருதப்படுகின்றது. அது தொடர்பாக பாதிப்புச் செலுத்தும் நான்கு காரணிகளைக் குறிப்பிடலாம்.
  1. உறுப்பினர்களாயினும் உறுப்பினர்கள் அல்லாதவர்களாயினும் அரசில் வாழும் சகல மனிதர்கள் மீதும் ஆணையதிகாரத்தை பயன்படுத்தும் ஒரே நிறுவனமாக இருத்தல்.
  2. ஆணையதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டு தனியான சட்டங்களை பிறப்பிக்கும் திறனைக் கொண்ட ஒரே நிறுவனமாக இருத்தல்.
  3. பிரஜைகளின் வாழ்வு மற்றும் இறப்பு தொடர்பான இறுதி தீர்மானங்களை எடுக்கும் சட்ட ரீதியான தனியுரிமை அதிகாரத்தைப் பெற்ற ஒரே நிறுவனமாக இருத்தல்.
  4. உயர் அதிகாரத்தை பிரயோகிக்கும் ஒரே சமூக நிறுவனமாக இருத்தல்.

முடிவுரை

மேற்குறிப்பிட்ட விடயங்களிலிருந்து அரசாங்கம் என்பது மனிதர்களால் தாபிக்கப்பட்டுள்ள சமூக நிறுவனங்களுள் ஒன்றாகும் என தென்படுகின்றது. அவ்வாறாயினும் அது ஓர் அரசியல் நிறுவனமாக இருப்பதோடு அரசின் சார்பாக அரசின் ஆணையதிகாரத்தை நடைமுறைப்படுத்தும் ஒரே நிறுவனமாகும். எனவே அரசாங்கம் என்பது ஏனைய சமூக நிறுவனங்களை விட தனித்துவமான நிறுவனமாக மாறியுள்ளது. மேற்குறிப்பிட்ட விடயங்களிலிருந்து தென்படும் பிறிதொரு விடயம் யாதேனில் அரசாங்கத்தின் இயல்பின் அடிப்படையிலேயே அரசின் இயல்பு நிர்ணயிக்கப்படுகின்றது. அரசாங்கத்தின் இயல்பானது அது பின்பற்றும் அரசியல், பொருளாதார, சமூக தத்துவங்கள் மற்றும் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு பயன்படுத்தப்படும் அரசாங்கப் பொறிமுறையின் இயல்பு என்பவற்றினாலேயே நிர்ணயிக்கப்படுகின்றது.

## (ii) அரசாங்கத்தின் தொழிற்பாடுகள்

### நோக்கம்

மனிதர் மகிழ்ச்சிகரமானதும் திருப்திகரமானதுமான வாழ்க்கையை கொண்டு நடத்துவதற்கே அரசை ஒழுங்கமைத்துள்ளனர் என்று அரிஸ்டோட்டில் குறிப்பிட்டார். அரசினுள் இந்த வகிபங்கு அரசாங்கத்திடமே பொறுப்பாக்கப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் அரசாங்கத்தினால் மேற்கொள்ள வேண்டிய வகிபங்கானது மிகவும் பரந்ததாகும். இவ்வினாவின் நோக்கம் அரசில் வாழும் மக்களுக்கு மகிழ்ச்சிகரமானதும் திருப்திகரமானதுமான வாழ்க்கையை மேற்கொள்வதற்கு அரசாங்கத்தினால் செய்ய வேண்டியவை யாவை என்பன பற்றி பரீட்சார்த்திகளின் அறிவையும் புரிதலையும் பரிசோதிப்பதாகும்.

### விடையில் உள்ளடக்கப்பட வேண்டிய அடிப்படை விடயங்கள்

| | | |
|---|---|---|
| (அ) | அரசாங்கத்தின் தொழிற்பாடுகளை அடையாளம் காணுதல் | 06 புள்ளிகள் |
| (ஆ) | தொழிற்பாடுகளை நடைமுறைப்படுத்தும் விதம் | 02 புள்ளிகள் |
| (இ) | முடிவுரை | 02 புள்ளிகள் |

### மாதிரி விடை

- அரசாங்கம் என்பது அரசின் எதிர்பார்க்கைகளை நடைமுறைப்படுத்தும் அதன் நடைமுறைப்பகுதி என கருதப்படுகிறது. இதன் பிரகாரம் அரசை தோற்றுவித்ததன் மூலம் மனிதர் எதிர்பார்த்த தொழிற்பாடுகளை நிறைவேற்றி வைப்பது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

- அரசாங்கத்தின் தொழிற்பாடுகளை பிரதானமாக இரண்டு பகுதிகளாகப் பிரிக்க முடியும்.
  1. உள்வாரியான தொழிற்பாடுகள்
  2. வெளிவாரியான தொழிற்பாடுகள்

### உள்வாரியான தொழிற்பாடுகள்

**(அ) சமூகத்தின் உறுதிப்பாட்டை பாதுகாத்துப் பேணுதல்**

இதன் பொருள் நாட்டினுள் சட்டத்தையும் அமைதியையும் பேணுவதாகும். இதற்காக அரசாங்கம் இராணுவம், பொலிஸ், நீதிமன்றம், சிறைச்சாலை மற்றும் பகிரங்க சேவை கருவிகளை பயன்படுத்திச் செயற்படுகின்றது.

**(ஆ) பொருளாதாரத்தை முகாமைப்படுத்துதல்**

பொருளாதார செயற்பாட்டின் மீது பரிசீலனையோடு இருத்தல், பொருளாதார விருத்தியை துரிதப்படுவதற்காக செயற்படுதல், பொருளாதாரத்தின் போக்குகளை உறுதிப்படுத்துதல், பொருளாதாரத்தின் முக்கியமான துறைகளை கட்டுப்படுத்துதல், கீழ்க் கட்டமைவுகளை வழங்குதல், ஏற்றுமதி இறக்குமதிகளை கட்டுப்படுத்துதல், அரச முயற்சிகளை ஒழுங்கமைத்தல் மற்றும் முகாமைப்படுத்தல் ஆகிய தொழிற்பாடுகள் இதில் அடங்குகின்றன.

**(இ) சமூக நலன்புரித் தொழிற்பாடுகள்**

அரசாங்கத்தின் பிறிதொரு முக்கிய தொழிற்பாடு சமூக நலன்புரி தொடர்பானவையாகும். தலையிடாக் கொள்கை வீழ்ச்சியுற்று சமூக நலன்புரி வாதம் விருத்தியடைந்த போது சமூக நலன்புரிவாதம் அரசின் பொறுப்பாக மாறியது. ஊனமுற்ற ஆட்கள், வேலையில்லாதோர், நாதியற்றோர் போன்ற சலுகைகள் குறைந்த மக்கள் குழுவினருக்கு உதவி புரிதல், சுகாதார காப்புறுதி முறைமையை கொண்டு நடாத்துதல், வீடு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், சமூக காப்புறுதி வேலை வாய்ப்புக்களை வழங்குதல் மற்றும்

விசேட சமூகப் பகுதியினர் அதாவது போரில் ஊனமுற்றோர், அனாதைகள் போன்றோருக்கு உதவி புரிதல், போதைப் பொருள்களை கட்டுப்படுத்துதல் போன்ற தொழிற்பாடுகள் இதில் அடங்குகின்றன.

**(ஈ) உரிமைகளைப் பாதுகாத்தல்**

பிரஜைகளின் சிவில், அரசியல் மற்றும் சமூக உரிமைகளைப் பாதுகாக்கும் பொறுப்பு அரசாங்கத்திற்கு உரியதாகும். மேலும் உரிமைகளை பாதுகாப்பதற்கான பொறிமுறையினை உருவாக்குதல் மற்றும் உரிமைகளை அனுபவிப்பதற்கு உரிய அமைதியான சூழலை ஏற்படுத்துதல் என்பன அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

**(உ) சமூக முகாமைத்துவம்**

மோதல்களை முகாமைத்துவப்படுத்துதல், மோதல்களைத் தீர்த்து வைத்தல், தொழிலாளர் பிணக்குகளை தீர்த்து வைத்தல், அவசர அனர்த்த உதவிகளை வழங்குதல் போன்ற தொழிற்பாடுகள் இதில் அடங்குகின்றன.

**(ஊ) சூழலை முகாமைப்படுத்துதல்**

இயற்கை வளங்களைப் பாதுகாத்தல், தேசிய பூங்காக்களையும், அரச நிலங்களையும் முகாமை படுத்துதல், சூழல் மாசடைவதைத் தடுத்தல், சுகாதாரத்துக்கு ஊறு விளைவிக்கும் கழிவுப்பொருட்களை அகற்றுதல் மற்றும் முகாமைப்படுத்துதல் போன்ற தொழிற்பாடுகள் இதில் அடங்குகின்றன.

**(எ) கல்வி மற்றும் கலாசார தொழிற்பாடுகள்**

கல்வியைக் கொண்டு நடாத்துதல், தேசிய சின்னங்களை பாதுகாத்துப் பேணுதல் மற்றும் கலாசார பணிகள் என்பன இதில் அடங்கும்.

**வெளிவாரியான தொழிற்பாடுகள்**

வெளிநாட்டு கொள்கையை முகாமைப்படுத்துதல் அரசாங்கத்தின் பிரதான வெளிவாரியான தொழிற்பாடு என கருதப்படுகின்றது. வெளிநாட்டுக் கொள்கையின் பிரதான நோக்கம் தேசிய நலன்களைப் பாதுகாத்து, அவற்றை பேணி விருத்தி செய்தலாகும்.

பிரதான தேசிய நலன்கள் பின்வருமாறு

**1. தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தி கொண்டு நடாத்துதல்**

இதன் பொருள் என்னவெனில் தேசிய சுதந்திரம், ஆள்புல எல்லை ஒருமைப்பாடு மற்றும் ஆள்புலத்தின் தொடர்ச்சியான இருப்பு என்பவற்றினைப் பாதுகாத்து பேணுதலாகும்.

**2. தேசிய பொருளாதாரத்தை பாதுகாத்து விருத்தி செய்தல்**

சர்வதேச வர்த்தகம், சர்வதேச முதலீடுகளைப் பெற்றுக்கொள்ளுதல் மற்றும் முகாமைப்படுத்துதல், கடன் மற்றும் வேறும் உதவிகளைப் பெற்றுக்கொள்ளுதல் போன்றவை இதில் அடங்கும்.

**3. தேசிய கருத்தியலை பாதுகாத்து பேணுதல்**

இதன் பொருள் அரசு நம்பிக்கை கொண்டுள்ள பொருளாதார அரசியல் தத்துவத்தினை பாதுகாத்து கொண்டு நடாத்துதலாகும்.

**4. தேசிய கௌரவத்தை பாதுகாத்து பேணுதல்**

நாட்டின் கௌரவத்தையும் அபிமானத்தையும் சர்வதேச ரீதியாகப் பாதுகாத்து கொண்டு நடாத்துதலாகும்.

**முடிவுரை**

மேற்குறிப்பிடப்பட்டவை அரசாங்கம் ஒன்றினால் மேற்கொள்ளப்படும் தொழிற்பாடுகள் பற்றிய சுருக்கமான குறிப்பாகும்.அவற்றைப் பார்க்கும் போது அரசாங்கம் ஒன்றினால் மேற்கொள்ளப்படும் தொழிற்பாடுகள் பற்றி நிச்சயமான வரையறைகளை குறிப்பிட முடியாது எனத் தெரிகிறது. சங்கத்தின் தொழிற்பாடுகளை ஆராயும் போது இரண்டு முக்கிய பண்புகள் காணப்படுகின்றன. அவற்றுள் ஒன்று அரசாங்கத்தின் தொழிற்பாடுகள் காலத்துக்குக் காலம் மாற்றமுறுகின்றன என்பதாகும். மற்றையது அவை நாட்டுக்கு நாடு வேறுபடுகின்றது என்பதாகும். இறுதியாக அரசாங்கம் பின்பற்றும் அரசியல் பொருளாதார தத்துவங்களின் பிரகாரம் அரசாங்கத்தின் தொழிற்பாடுகளின் இயல்பு மாற்றமுறுகின்றன எனக் கூற முடியும்.

## (iii) அரசாங்கங்களை வகைப்படுத்தல்

**நோக்கம்**

அரசாங்கம் தொடர்பாக தற்காலத்தைப் போன்று கடந்த காலத்திலும் தென்படும் பண்பு என்னவெனில் பல்வேறு அரசாங்க முறைகள் உலக அரச முறைமையில் செயற்படுகின்றன என்பதாகும். பிறிதொரு பண்பு அவ்வரசாங்கங்கள் பல்வேறு அளவுகோல்களை பயன்படுத்தி வகைப்படுத்தப்பட்டுள்ளன என்பதாகும். இவ்வாறு இந்த வகைப்படுத்தலானது அரசியல் விஞ்ஞான பாடம் ஒரு கற்கை துறையாக ஆரம்பமாகிய தினத்திலிருந்து தென்பட்டு வருகின்றது. இவ்வினாவின் நோக்கம் மேற்குறிப்பிட்டவாறு அரசாங்க முறைகளை வகைப்படுத்தியிருக்கும் விதம் மற்றும் அவ்வகைப்படுத்தலுக்காக பயன்படுத்தப்பட்டுள்ள அளவுகோல்களைப் பற்றியும் பரீட்சார்த்திகளின் அறிவையும் புரிதலையும் பரிசோதிப்பதாகும்.

**விடையின் உள்ளடக்கத்தில் இடம்பெற வேண்டிய பிரதான விடயங்கள்**

| | | |
|---|---|---|
| (அ) | அரசாங்க முறைகளை வகைப்படுத்தியதன் வரலாற்றுப் பின்னணி | 02 புள்ளிகள் |
| (ஆ) | தற்காலத்தில் அரசாங்க முறைகளை வகைப்படுத்தும் விதம் | 06 புள்ளிகள் |
| (இ) | முடிவுரை | 02 புள்ளிகள் |

**மாதிரி விடை**

- அரசாங்க முறைகளை வகைப்படுத்துதல் அரசறிவியல் கற்கை ஆரம்பிக்கப்பட்ட கிரேக்க காலத்திலிருந்து நிலவி வருகின்றது. உலகில் முதன் முதலாக அரசாங்க முறைகளை பற்றிய வகைப்படுத்தலை முன்வைத்தவர் கிரேக்க காலத்தில் வாழ்ந்த அரசியல் தத்துவஞானியான பிளேட்டோ ஆவார். அவர் சமகாலத்தில் நிலவிய அரசாங்க முறைகளை
    1. இலட்சிய அரசாங்கம்
    2. முடியாட்சி
    3. கடுமையான சர்வதிகார அரசாங்கம்
    4. பிரபுக்களின் அரசாங்கம்
    5. சில்லோராட்சி அரசாங்கம்
    6. ஜனநாயக அரசாங்கம்
    7. ஊழல் மிக்க ஜனநாயக அரசாங்கம்

    என ஏழு வகைகளாக வகைப்படுத்தினார்.

- இவற்றுள் முதல் நான்கு அரசாங்க முறைகளை சிறந்தவை என்றும், எஞ்சிய மூன்றையும் மோசமான அரசாங்க முறைகள் என்றும் மீண்டும் இரண்டு பகுதிகளாக வகைப்படுத்தினார்.

- பின்னர் அரிஸ்டோடில்

  அ. அரசாங்க முறைகளை நடைமுறைப்படுத்துவதில் ஈடுபடும் ஆட்களின் எண்ணிக்கை

  ஆ. அதன் இயல்பு ஆகிய இரு அளவுகோல்களின் அடிப்படையில் அரசாங்க முறைகளை ஆறு வகைகளாக வகைப்படுத்தினார்.


  1. முடியாட்சி
  2. கொடூரமான சர்வதிகார அரசாங்கம்
  3. பிரபுக்களின் அரசாங்கம்
  4. சில்லோராட்சி அரசாங்கம்
  5. ஜனநாயக அரசாங்கம்
  6. ஊழல் மிக்க ஜனநாயக அரசாங்கம்

- பின்னர் உரோம கால மற்றும் மத்திய கால அரசியல் சிந்தனையாளர்களால் அரசாங்கங்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளன. இது தொடர்பாக அவர்கள் கூடிக் குறைந்த வகையில் பிளேட்டோவினதும் அரிஸ்டோட்டலினதும் வகைப்படுத்தல் தொடர்பான அளவுகோல்களையே பயன்படுத்தினர். அக்காலப் பகுதிகளில் அரசாங்கங்கள் பிரதானமாக முடியாட்சி, பிரபுக்களின் ஆட்சி, குடியாட்சி என்ற வகையிலேயே வகைப்படுத்தப்பட்டன.

- நவீன காலத்தில் மொன்டஸ்கியூ என்பவர் அரசாங்கங்கள் குடியாட்சி, முடியாட்சி, சர்வதிகார ஆட்சி என மூன்று வகைகளாக வகைப்படுத்தினார். ரூசோ என்பவர் முடியாட்சி, பிரபுக்களின் அரசாங்கம், ஜனநாயக அரசாங்கம் என வகைப்படுத்தினார். பிளன்ச்லி ரூசோவின் வகைப்படுத்தலோடு தெய்வீக அரசாங்கம் என்ற ஒரு புதிய வகையினைச் சேர்த்தார்.

- அண்மைக்காலத்தில் அரசாங்கங்களை வகைப்படுத்திய அரசறிவியலாளர்களுள் முக்கியமானவர் ஜே.ஏ.ஆர். மரியட். அவர் அரசாங்கங்களை சமஸ்டி மற்றும் ஒற்றையாட்சி அரசாங்கங்கள் ( அதிகாரத்தை பன்முகப்படுத்தல் மற்றும் ஒருமுகப்படுத்தலின் பிரகாரம் ), நெகிழ்ச்சியான மற்றும் நெகிழ்ச்சியற்ற அரசாங்கங்கள் (அரசியல் யாப்புக்களை திருத்தும் முறையின் பிரகாரம்) மற்றும் பாராளுமன்ற, ஜனாதிபதி அரசாங்கங்கள் ( நிறைவேற்று மற்றும் சட்டத்துறை தொடர்புகளின் பிரகாரம் ) என மூன்று வகைகளாக வகைப்படுத்தினார். இவற்றை விட அவர் சர்வாதிகார அரசாங்க.ம் என்ற பிறிதொரு அரசாங்க முறையையும் முன்வைத்தார். இதற்காக அவர் நிறைவேற்றுத் துறையினதும், சட்டத்துறையினதும் அதிகாரங்களின் அளவினையே பயன்படுத்தினார். சட்டத்துறையையும் தாண்டிய அதிக அதிகாரத்தை நிறைவேற்றுத்துறை அனுபவிக்குமாயின் அதனையே சர்வாதிகார அரசாங்கம் என குறிப்பிட்டார்.

- அண்மைக் காலத்தில் அரசாங்கங்களை வகைப்படுத்தல் தொடர்பான முக்கிய திட்டத்தினை முன்வைத்த அரசறிவியலாளர் ஸ்டீவன் லீகொக் என்பவராவார். அவர் முன்வைத்த திட்டம் பின்வருமாறு ;




- தற்காலத்தில் அரசாங்க முறைகளை வகைப்படுத்துவதற்கு மூன்று பிரதான அளவுகோல்கள் பயன்படுத்தப்படுகின்றன. அவையாவன
  1. அரசாங்கங்கள் ஏற்றுக்கொண்டுள்ள அரசியல், பொருளாதார கருத்தியல்களின் அடிப்படையில்
  2. அதிகாரங்கள் பன்முகப்படுத்தப்படுதல் மற்றும் ஒருமுகப்படுத்தல் என்பவற்றின் அடிப்படையில்
  3. அரசாங்கத்தின் நிறைவேற்று அதிகாரத்தை நடைமுறைப்படுத்தும் விதத்தின் அடிப்படையில்

1. அரசியல் தத்துவங்களின் பிரகாரம் அரசாங்கங்களை வகைப்படுத்தல்
   இதன் கீழ் பின்வரும் அரசாங்க முறைகளை அடையாளம் காணலாம்.
   i. தாராள ஜனநாயக அரசாங்கங்கள்
   ii. சோசலிச அரசாங்கங்கள்
   iii. சமூக ஜனநாயக அரசாங்கங்கள்

2. அதிகாரங்களை பன்முகப்படுத்தல் மற்றும் ஒருமுகப்படுத்தலின் பிரகாரம் வகைப்படுத்தல்
   i. ஒற்றையாட்சி அரசாங்கங்கள்
   ii. சமஸ்டியாட்சி அரசாங்கங்கள்
   iii. கூட்டாண்மை அரசாங்கங்கள்

3. நிறைவேற்று அதிகாரத்தை நடைமுறைப்படுத்தும் விதத்தின் அடிப்படையில் வகைப்படுத்தல்.
   i. கபினட் / பாராளுமன்ற முறை அரசாங்கங்கள்
   ii. ஜனாதிபதி முறை அரசாங்கங்கள்
   iii. அரைகுறை ஜனாதிபதி முறை அரசாங்கங்கள்
   iv. அனைத்தாண்மை அரசாங்கங்கள்

முடிவுரை

மேற்குறிப்பிடப்பட்ட அரசாங்க வகைப்படுத்தல் வரலாற்று ரீதியாக ஆரம்பித்து இன்று வரை முன்னெடுக்கப்பட்டுள்ள விதமாகும். அந்த பயணத்தினைப் பார்க்கும் போது காலத்துக்குக் காலம் அரசாங்க முறைகள் மாற்றமுற்ற விதத்தையும் அதன் பிரகாரம் வகைப்படுத்தல் முறையும் மாற்றமுற்றுள்ள விதத்தையும் காண முடிகிறது.

**வினா இலக்கம் 03 :**

**பின்வரும் எண்ணக்கருக்களில் எவையேனும் இரண்டு பற்றி ஆராய்க.**

**(i) சட்டத்தின் ஆட்சி**

**(ii) அதிகார வேறாக்கம்**

**(iii) அரசியல் யாப்புறுவாதம்** **(10 × 2 = 20 புள்ளிகள்)**

**(i) சட்டத்தின் ஆட்சி**

**நோக்கம்**

சட்டத்தின் ஆட்சி என்பது அரசியல் விஞ்ஞானத்தின் பழைமையான எண்ணக்கருக்களுள் ஒன்றாகும். அதன் மூலம் சட்டத்தின் உயர் தன்மையே வலியுறுத்தப்படுகின்றது. ஜனநாயக ஆட்சியின் அத்தியாவசியமான ஓர் அங்கமென சட்டத்தின் ஆட்சி கருதப்படுகிறது. சட்டத்தின் ஆட்சியின்றி நிலவும் ஆட்சியானது அராஜக ஆட்சி எனக் கருதப்படுகிறது. சட்டத்தின் ஆட்சி பற்றிய எண்ணக்கருவின் பிரதான பண்பு சட்டமானது அனைவருக்கும், அனைத்திற்கும் மேலாக இருக்கின்றது என்பதும் சட்டத்தின் முன்னால் சகலரும் சமமானவர்கள் என்பதும் ஆகும். இவ்வினாவின் நோக்கம் இவ்விடயங்கள் தொடர்பாக பரீட்சார்த்திகளின் அறிவையும் புரிதலையும் பரிசோதிப்பதாகும்.

**விடையில் உள்ளடக்கப்பட வேண்டிய பிரதான விடயங்கள்**

| | | |
|---|---|---|
| (அ) | சட்டத்தின் ஆட்சி பற்றிய எண்ணக்கருவின் பிரதான பண்பினை அடையாளம் காணல். | 05 புள்ளிகள் |
| (ஆ) | எண்ணக்கருவின் நடைமுறைத் தன்மை | 03 புள்ளிகள் |
| (இ) | முடிவுரை | 02 புள்ளிகள் |

மாதிரி விடை

- சட்டத்தின் ஆட்சி என்ற எண்ணக்கரு அரசியல் விஞ்ஞானத்தில் உள்ள பழைமையான எண்ணக்கருவாகும். பிளேட்டோ தமது குடியரசு என்ற நூலில் முன்வைத்த இலட்சிய ஆட்சி சட்டத்தின் ஆட்சிற்கு உட்படாத தத்துவஞானி ஆட்சியாளனின் ஆட்சிக்கு எதிராக அரிஸ்டோட்டில் முன்வைத்த சட்டத்தின் ஆட்சியின் பொருத்தப்பாடு பற்றிய கருத்தினை முன்வைத்தார். கிரேக்க காலத்தின் பின்னர் வந்த உரோம காலத்தில் சிசரோவும் சட்டத்தின் ஆட்சி பற்றிய கருத்தை முன்வைத்தார்.

- சட்டத்தின் ஆட்சி பற்றிய நவீன கருத்து 17 ஆம் நூற்றாண்டின் ஆரம்பப் பகுதியில் பிரித்தானிய அரசாங்க முறையின் கீழ் முடியாட்சிக்கும் பாராளுமன்றத்திற்கும் இடையில் உருவான அதிகார போட்டியை மையமாகக் கொண்டு முன்வைக்கப்பட்டது. அங்கு ஆட்சியாளர் நாட்டின் பொது சட்டத்திற்கு கீழ்ப்பட்டு ஆட்சியை வழிப்படுத்த வேண்டும் என்று பாராளுமன்றவாதிகள் குறிப்பிட்டனர்.

- நவீன யுகத்தில் சட்டத்தின் ஆட்சி தொடர்பான முறையான அரசியலமைப்புச் சட்டங்கள் தொடர்பான கருத்தை முன்வைத்தவர் பிரித்தானிய சட்டவியலாளரான டைசி ஆவார். அவர் 1885 இல் வெளியிட்ட அரசியலமைப்புச் சட்டங்கள் (Law of the Constitution) என்ற நூலின் மூலம் இவ்வெண்ணக்கரு முன்வைக்கப்பட்டது.

- டைசி சட்டத்தின் ஆட்சி தொடர்பான மூன்று மூலக் கொள்கைகளை முன்வைத்தார்.
  - I. அரசாட்சியில் சாதாரண சட்டமே உயர்தன்மையானது எனக் கருதுதல்.
  - II. சட்டத்தின் முன்னால் சகலரும் சமமானவர்கள் எனக் கருதுதல்.
  - III. மனித உரிமைகளை பாதுகாத்துப் பேணுதல்.

- டைசி முன்வைத்த சட்டவாட்சி பற்றிய எண்ணக்கருவின் சாரம் என்னவெனில் ஆட்சியானது சட்டத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதாகும். இதன் பிரகாரம் சகல ஆட்களும் ( ஆட்சியாளரும், ஆளப்படுவோரும் ) சட்டத்திற்கு கீழ்ப்பட்டவர்களாக இருப்பதுடன் அவர்கள் சட்டத்தின் முன்னால் சமமானவர்கள் ஆவர். சட்டத்திற்கு அப்பாற்பட்டவர் எவரும் இல்லாதிருப்பதோடு சட்டத்தின் முன்னால் எவரும் விசேட சலுகைகளை பெற்றுக்கொள்ள மாட்டார்.

- சட்ட ஆட்சியின் பிரகாரம் ஒரு நாட்டினுள் ஒரு சட்ட முறை மட்டுமே நிலவவேண்டும். இதன் பொருள் யாப்புச்சட்டம், சட்டத்துறையால் நிறைவேற்றப்படும் சட்டம் மற்றும் நீதித் தீர்ப்புக்கள் ஆகிய மூன்று பகுதிகள் இணைந்து தோன்றியுள்ள பொதுச் சட்டமாகும். அப்பொதுச் சட்டத்தை மீறினால் மட்டுமே பிரஜைகள் தண்டிக்கப்படுவர்.

- நாட்டில் நிலவும் சாதாரண நீதிமன்றுகளின் மூலம் அச்சந்தர்ப்பத்தில் நிலவும் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டே குற்றங்களுக்கு தீர்ப்பளிக்கப்பட வேண்டும். குற்றவாளியாக்கப்பட்டால் சட்டத்தினால் விதிக்கப்பட்ட தண்டனை மட்டுமே விதிக்கப்பட வேண்டும். மேலும் குற்றங்களை தீர்ப்பதற்கு உரிய சட்டங்களை உருவாக்கவோ புதிய நீதிமன்றங்களை தாபிக்கவோ முடியாது.

- உரிமைகள் என்பவை சட்டத்தினால் கிடைக்கப்பெற்றவையன்று. அவை சட்டத்தினால் பாதுகாக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்படுகின்றது.

- டைசி சட்டத்தின் ஆட்சி பற்றிய எண்ணக்கருவை சமகால இங்கிலாந்தில் நிலவிய சாதாரண சட்டத்தினை அடிப்படையாகக் கொண்டே முன்வைத்துள்ளார். எனவே அவ்வெண்ணக்கரு பல குறைகளைக் கொண்டுள்ளது என அறிஞர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

- டைசி தமது கருத்தை கட்டியெழுப்பும் போது சமகால ஐரோப்பாவில் சாதாரண சட்டத்திற்கு மேலதிகமாக நிலவிய ஏனைய சட்டங்களை கவனத்தில் கொள்ளாமை ஒரு குறைபாடாகும். அக்காலத்தில் நிர்வாகச் சட்டங்களும் நிர்வாக நீதிமன்றங்களும் பிரான்ஸ் போன்ற நாடுகளில் செயற்பட்டன. எனினும் அவற்றின் செயற்பாடு பற்றி டைசி கவனம் செலுத்தவில்லை. சாதாரண சட்டத்திற்கு மேலதிகமாக நிலவும் ஏனைய எந்தவொரு சட்டத்தின் மூலமும் மனித உரிமைகள் வரையறுக்கப்படுவதில் பாதிப்பு செலுத்துகின்றது என அவர் நம்பினார். இக்கருத்து பிழையானது என்று அறிஞர்கள் சுட்டிகாட்டியுள்ளனர்.

- சட்டத்தின் முன்னால் சகலரும் சமமானவர்கள் என்ற டைசியின் இரண்டாவது கருத்தும் பிழையானது என அறிஞர்கள் கூறுகின்றனர். இக்கருத்தை முன்வைக்கும் பொழுது பொருளாதார ஏற்றத் தாழ்வுகளின் பிரகாரம் சமூகத்தில் நிலவும் சமூக ஏற்றத்தாழ்வுகளை டைசி கவனத்தில் கொள்ளவில்லை என்று அறிஞர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

- "மனிதர்களுக்கு உரிமைகள் உரித்தாவது பிறப்பின் மூலமன்றி சட்டத்தின் மூலமே" என டைசி முன்வைக்கும் மூன்றாவது கருத்தும் பிழையானது என சுட்டிக்காட்டும் அறிஞர்கள் போராட்டங்களின் மூலம் மனித உரிமைகள் வெற்றி கொள்ளப்படும் நிலையினை டைசி கவனத்தில் கொள்ளவில்லை என்றும் மேலும் குறிப்பிடுகின்றனர்.

- பிற்காலத்தின் டைசியின் எண்ணக்கருவை அரசறிவியலாளர்கள் மட்டுமன்றி சட்டவியலாளர்களும் மேலும் அபிவிருத்தி செய்திருப்பதைக் காணலாம். இன்று சட்டத்தின் ஆட்சியின் மூலம் பல விடயங்கள் பொருள் கொள்ளப்படுகின்றன. சட்டத்தின் பிரகாரம் அரச ஆட்சியை வழிப்படுத்துதல் அல்லது அரசியல் யாப்பினை அடிப்படையாகக் கொண்டு அரச ஆட்சியை வழிப்படுத்துதல், சட்டமானது சகலருக்கும் சமமானதா- கவும் சட்டத்தின் சமமான பாதுகாப்பு சகலருக்கும் சமமான முறையில் கிடைக்கப் பெறுதல், மனிதர்களின் தனிப்பட்ட பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுதல், அடிப்படை மனித உரிமைகளை பாதுகாத்துப் பேணுதல், ஊடகச் சுதந்திரத்தை பாதுகாத்தல், சமய சுதந்திரத்தைப் பாதுகாத்தல், பிரஜைகளுக்கு கல்வியினைப் பெற்றுக் கொள்ளும் உரிமையினை உறுதிப்படுத்துதல், சுதந்திரமாக தாம் விரும்பும் அரசியல் கட்சி ஒன்றோடு இணைந்து அரசியலில் ஈடுபடும் உரிமையை உறுதிப்படுத்துதல், நிரபராதித் தன்மையின் முன் முடிவை நீதியை நிர்வகிக்கும் அடிப்படையாகப் பயன்படுத்துதல் மற்றும் வழக்கு விசாரணைகளை பகிரங்கமாகவும் சிறந்த முறையிலும் மேற்கொள்ளுதல், இறந்த காலத்தை கட்டுப்படுத்தும் வகையில் சட்டங்களை பிறப்பிக்காமை மற்றும் நீதித்துறையின் சுதந்திரம் என்பன அவற்றுள் பிரதான இடத்தை பெறுகின்றன.

முடிவுரை

மேற்குறிப்பிட்ட விடயங்களை முழுமையாக கவனத்தில் கொள்ளும் போது சட்டத்தின் ஆட்சி என்பது ஜனநாயக ஆட்சியின் அடிப்படையாகும் என தெரிகின்றது. வேறு வகையில் கூறின் சட்டவாட்சி என்பது யாப்புறு ஆட்சியில் அன்றி சர்வாதிகார ஆட்சியில் நிலவமாட்டாது என்பதாகும். சர்வாதிகார ஆட்சியும் சட்டத்தின் ஆட்சியும் ஒன்றாக செல்லக்கூடியவை அன்று. எனவே தான் சட்டத்தின் ஆட்சி பற்றிய எண்ணக்கருவானது அரசாங்க அதிகாரத்தை கட்டுப்படுத்தும் சிறந்த கருவியாகும் என கருதப்படுகிறது.

## (ii) அதிகார வேறாக்கம்

### நோக்கம்

அரசாங்கத்தின் செயற்பாடு தொடர்பாக தென்படும் நிச்சயமான ஓர் உண்மை என்னவெனில் அரசாங்க அதிகாரத்தை நடைமுறைப்படுத்துவதில் ஈடுபடும் ஆட்சியாளர் வகுப்பினர் மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்களாயினும் அல்லது பரம்பரையாக இடம்பெறுபவர்களாயினும் அல்லது வேறு வகையில் நியமிக்கப்பட்டவர்களாயினும் அதிகாரத்தை பெற்றதன் பின்னர் அவ்வதிகாரத்தை முறையற்ற வகையில் பிரயோகிப்பதற்கு முற்படுகின்றனர் என்பதைக் காணமுடிகிறது. இந்நிலையினை தடுத்து அரசாங்க அதிகாரத்தை சட்டத்திற்கு இசைவான வகையில் எவ்வாறு நடைமுறைப்படுத்தலாம்? இது தொடர்பாக உள்ள ஒரு வழிமுறை அரசாங்கத்தின் அதிகாரத்தை கட்டுப்படுத்துவதாகும். இது தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள அரசியல் கோட்பாடுகளில் ஒன்றே அதிகார வேறாக்கம் ஆகும். இவ்வினாவின் நோக்கம் வலுவேறாக்கம் என்பதன் பொருள் யாது? அரசாங்கத்தை கட்டுப்படுத்தும் ஒரு வழிமுறை என்ற வகையில் அதனை எவ்வாறு பயன்படுத்தலாம்? மற்றும் அக்கோட்பாட்டின் நடைமுறைத் தன்மை பற்றிய பிரச்சினைகள் யாவை? ஆகியன பற்றி பரீட்சார்த்திகளின் அறிவையும் புரிதலையும் பரிசோதிப்பதாகும்.

### விடையில் உள்ளடக்கப்பட வேண்டிய பிரதான விடயங்கள்

| | | |
|---|---|---|
| (அ) | அரசாங்கத்தின் அதிகாரத்தை ஏன் பிரித்து வேறுபடுத்த வேண்டும். | 02 புள்ளிகள் |
| (ஆ) | அதிகார வேறாக்க கோட்பாட்டின் உள்ளடக்கம் | 04 புள்ளிகள் |
| (இ) | அதிகார வேறாக்கக் கோட்பாட்டின் நிறைகளும் குறைகளும் | 02 புள்ளிகள் |
| (ஈ) | முடிவுரை | 02 புள்ளிகள் |

### மாதிரி விடை

- தடைகளும் கட்டுப்பாடுகளும் இல்லாத அரசாங்க அதிகாரமானது நிச்சயமாக சர்வதிகாரம் தோன்றுவதில் பாதிப்புச் செலுத்தும். அதனால் அரசாங்கம் சர்வாதிகாரமாகுவதை தவிர்ப்பதற்கும் மக்களின் சுதந்திரத்தை பாதுகாப்பதற்கும் அரசாங்கத்தின் அதிகாரத்தை வரையறைகளுக்கு உட்படுத்த வேண்டும் என்று ஜனநாயக அரசாங்க மூலக் கொள்கைகள் வலியுறுத்துகின்றன. இது தொடர்பாக பயன்படுத்தக்கூடிய மிகச் சிறந்த கருவி அதிகார வேறாக்கமாகும் எனக் கருதப்படுகின்றது.

- அரசாங்கத்தின் அதிகாரமானது சட்டவாக்க, நிறைவேற்று, நீதி அதிகாரங்கள் என பிரிக்கப்பட்டு பிரத்தியேகமான மூன்று நிறுவனங்களினால் நடைமுறைப்படுத்தப்படுவதே அரசியல் விஞ்ஞானத்தில் அதிகார வேறாக்கம் என அழைக்கப்படுகின்றது.

- அதிகார வேறாக்க கோட்பாடு அரசறிவியலில் பிறிதொரு பழைமையான கோட்பாடாகும். இது தொடர்பான ஒரு சுருக்கமான கருத்தை முதலில் முன்வைத்தவர் அரிஸ்டோட்டில் ஆவார். அவர் அரசாங்கத்தின் பணிகளை, விடயங்களை கலந்துரையாடல், பொது வேலைகளை நிர்வகித்தல், நீதியை நிர்வகித்தல் ஆகிய மூன்று பகுதிகளைக் கொண்டதாகும் என்றும் அப்பணிகளை புறம்பான நிறுவனங்களின் மூலமே நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

- உரோம யுகத்தில் வாழ்ந்த பொலிபியஸ், சிசரோ போன்றோரும் அரசாங்க அதிகாரங்களுக்கிடையில் சமநிலை என்ற கருத்தை முன்வைத்தனர். இது தவிர போடின் என்பவரும் நிறைவேற்று அதிகாரமும், நீதி அதிகாரமும் புறம்பான ஆட்களினால் அல்லது நிறுவனங்களினால் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று சுட்டிக்காட்டினார். மேலும் ஆங்கிலேயரான குறொம்வெல் மற்றும் ஜோன் லொக் என்போரும் அரசாங்கத்தின் அதிகாரங்கள் வேறுபடுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை சுட்டிக் காட்டினர்.

- அதிகார வேறாக்கத்தை ஒரு கருத்தாக முன்வைத்தவர் பிரான்சியரான சாள்ஸ் மொண்டேஸ்கியூ என்பவராவார். அவர் 1748 இல் எழுதிய சட்டத்தின் சாரம் என்ற நூலின் மூலம் இவ்வெண்ணக்கருவை முன்வைத்தார்.

- அதிகார வேறாக்கம் பற்றிய கோட்பாட்டை முன்வைத்த மொண்டெஸ்கியூ தொடர்ச்சியான அனுபவங்களின் மூலம் நாம் பெற்றுக்கொள்ளும் ஓர் உண்மை என்னவெனில் அதிகாரத்தை பெற்றோர் அவ்வதிகாரத்தை முறையற்ற வகையில் பயன்படுத்துவதற்கு முற்பட்டுள்ளனர் என கூறுகிறார். மேலும் அவர் "அதிகாரம் ஓரிடத்தில் குவிவடைதல் நிச்சயமாக அபாயகரமானதாக இருப்பதோடு அது நிச்சயமாக சர்வதிகாரத்துக்கு வழிவகுக்கும். அரசாங்கத்தின் அதிகாரத்தை நிறைவேற்று, சட்டவாக்க, நீதி என பிரித்து வேறுபட்ட வகையில் நடைமுறைப்படுத்தினால் மட்டுமே இதனை தடுக்க முடியும். அதிகாரத்தை பிறிதொரு அதிகாரத்தினால் கட்டுப்படுத்த வேண்டும்" எனக் குறிப்பிடுகின்றார்.

- மொண்டஸ்கியூ மேலும் குறிப்பிடுகையில் "வரையறைகளுக்கு உட்படுத்தப்படாத அதிகாரத்தை யார் பெறுகின்றாரோ அவர் நிச்சயமாக அதிகாரத்தை முறையற்ற வகையில் பிரயோகிக்க முற்படுவார். ஒரு குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் சட்டவாக்க மற்றும் நிறைவேற்று அதிகாரங்கள் ஒரு நபரிடமோ அல்லது சில நபர்களைக் கொண்ட நிறுவனத்திடமோ குவிக்கப்படின் அங்கு சட்டவாக்குனரும் சட்டத்தை நடைமுறைப்படுத்துபவரும் ஒரு நபராகவோ ஒரு நிறுவனமாகவோ இருப்பதனால் சர்வதிகார இயல்பினைக் கொண்ட சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதன் காரணமாக மனித சுதந்திரங்கள் இல்லாதொழியும். அதேபோன்று ஒரு குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் நீதியதிகாரம் சட்டவாக்க அதிகாரத்தோடு இணைந்து காணப்படின் அங்கு சட்டவாக்குநர் நீதிபதியாக ஆவதுடன் அது தன்னிச்சையான ஆட்சிக்கு வழிவகுக்கும். மேலும் நீதித்துறையானது நிறைவேற்றுத் துறையோடு இணைந்திருப்பின் அங்கு நிறைவேற்றுத்துறை நிச்சயமாக பலவந்த நிறுவனமாக மாறிவிடும். ஒரு குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் சட்டவாக்க, நிறைவேற்று, நீதி ஆகிய முத்துறை அதிகாரங்களும் ஒரு தனி நபரிடமோ அல்லது ஆட்களின் குழுவிடமோ குவிந்திருப்பின் அது மனித சுதந்திரத்தின் முடிவாக அமைந்து விடும்.

- மொண்டஸ்கியூ அதிகாரத்தை பிரயோகிக்கும் அரசாங்கமானது ஏதேனும் வரையறைகளுக்கு உட்படுத்தப்படாவிடின் தன்னிச்சையானதும் சர்வாதிகாரமானதுமான ஆட்சி உருவாகிவிடும் என்றும் அதனால் அரசாங்கத்தின் சட்டவாக்க, நிறைவேற்று, நீதி ஆகிய முத்துறை அதிகாரங்களும் ஒன்றுக்கொன்று வேறுபட்ட சுயாதீனமான நிறுவனங்களின் மூலம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். இந்த மூன்று நிறுவனங்களினதும் செயற்பாடுகளும் அந்தந்த துறைகளின் தனிப்பட்ட செயற்பாடுகளின் மூலம் கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்றும் கூறுகிறார்.

- மொண்டேஸ்கியூவின் கோட்பாடு அரசாங்கத்தின் அதிகாரத்தை கட்டுப்படுத்துவதில் பயன்படுத்தக்கூடிய மிகச் சிறந்ததும் வினைத்திறன் மிக்கதுமான கருவியாகும் என்று பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டாலும் அதன் நடைமுறைத் தன்மை பற்றி பல பிரச்சினைகள் காணப்படுகின்றன என அறிஞர்கள் கூறுகின்றனர்.

- ஒரு பிரச்சினை என்னவெனில் நிரந்தரமான எல்லை நிர்ணயத்தின் மூலம் மூன்று அதிகாரங்களையும் ஒன்றிலிருந்து மற்றையதை பிரிக்க முடியாமையாகும். இரண்டாவதாக பூரணமான அதிகார வேறாக்கத்தினை மேற்கொள்வதனால் ஏற்படும் நிறுவன தனிமைப்படுத்தலின் காரணமாக அரசாங்கப் பொறிமுறை வினைத்திறன் குன்றியதாகிவிடும். மூன்றாவதாக சட்டவாக்க, நிறைவேற்று, நீதி ஆகிய பணிகளை நிச்சயமான முறையில் ஒன்றிலிருந்து மற்றையதை வேறுபடுத்துவது கடினமானதாகும். நான்காவதாக அதிகார வேறாக்கத்தின் மூலம் மட்டும் மனித சுதந்திரத்தை பாதுகாக்க முடியாமையாகும்.

- இந்த பிரச்சினைகளுக்கு காரணம் பிழையான தளத்தில் இருந்து கொண்டு அதிகார வேறாக்க கோட்பாட்டை முன்வைத்தமையாகும் என்று அறிஞர்கள் கூறுகின்றனர். மொண்டேஸ்கியூ அதிகார வேறாக்க கோட்பாட்டை தாம் பிரித்தானியாவில் மேற்கொண்ட சுற்றுப்பயணத்தின் போது பெற்றுக்கொண்ட அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டே முன்வைத்தார். அந்த சுற்றுப்பயணத்தின் போது கண்ட ஐரோப்பிய மக்களை விட சார்பு ரீதியாக பிரித்தானிய மக்கள் சுதந்திரத்தை அனுபவிக்கின்றனர் என்றும் அதற்குக் காரணம் பிரித்தானிய அரசாங்க முறையில் நடைமுறைப்படுத்தப்படும் அதிகார வேறாக்கமாகும் எனக் கண்டுக்கொண்டார். ஆனால் மொண்டெஸ்கியூ இவ்வாறு புரிந்துகொண்டமை பிழையானதாகும் என அறிஞர்கள் கூறுகின்றனர்.

**கோட்பாட்டின் நடைமுறை**

- அதிகார வேறாக்கக் கோட்பாட்டினை அமெரிக்க யாப்பு வரைஞர்களினால் தமது அரசாங்க முறையின் அடிப்படை தளமாக பயன்படுத்தினர். அதன்படி சட்டவாக்க, நிறைவேற்று, நீதி, அதிகாரங்கள் என பிரிக்கப்பட்டு அவற்றை நடைமுறைப்படுத்தும் பொறுப்பை காங்கிரஸ், ஜனாதிபதி, உயர் நீதிமன்றம் ஆகிய நிறுவனங்களிடம் ஒப்படைத்தனர். அதற்கு மேலதிகமாக நிறுவனங்கள் தமது அதிகாரங்களை துஸ்பிரயோகம் செய்வதனை தடுப்பதற்காக மிகவும் பலமான தடைகள் சமன்பாடுகள் பொறிமுறை ஒன்றையும் அரசாங்க முறையுடன் இணைத்தனர்.

- அதன் பின்னர் உலகின் பெரும்பாலான அரசுகள் தமது யாப்பாக்கங்களின் போது அதிகார வேறாக்க கோட்பாட்டை கூடி குறைந்த வகையில் சேர்த்துக் கொண்டன.

**முடிவுரை**

எவ்வாறான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டாலும் அரசாங்கத்தின் சர்வாதிகார ஆட்சியிலிருந்து மக்களின் சுதந்திரங்களையும் உரிமைகளையும் பாதுகாப்பதற்கு பயன்படுத்தக்கூடிய ஓர் வழிமுறை என்ற வகையில் அதிகார வேறாக்கக் கோட்பாடு சமகால உலக அரசியலில் ஏற்றுக்கொள்ளுதலுக்கு உட்பட்டுள்ளது.

## (iii) அரசியல் யாப்புறுவாதம்

**நோக்கம்**

சாதாரண நடைமுறையில் யாப்புறுவாதம் என்பதன் பொருள் அரசியல் யாப்பொன்றின் அடிப்படையில் அரச ஆட்சியைநடைமுறைப்படுத்துவதாகும்.ஆனால்யாப்புறுவாதத்திலிருந்துஅதுமட்டும்பொருள்படுவதில்லை. இதற்கு மேலதிகமாக அரசியல் யாப்பு காலாகாலமாக அரசியல் முறைமையில் சட்டத்தளமாக நிலவுதல், மக்களின் கௌரவத்திற்கும் பக்திக்கும் உட்படுதல், இறுதியில் மக்கள் பின்பற்றுகின்றதும் நம்பிக்கை கொள்கின்றது. சிவில் சமூகம் என்ற நிலையை அடைதல் என்ற விடயங்களையும் யாப்புறு வாதத்திலிருந்து பொருள் கொள்ளப்படுகின்றது. இவ்வினாவின் நோக்கம் மேற்குறிப்பிட்ட விடயங்களையும் வேரூன்றியுள்ள யாப்புறுவாதத்தின் பயன்பாடு பற்றியும் பரீட்சார்த்திகளின் அறிவையும் புரிதலையும் பரிசோதிப்பதாகும்.

**விடையில் உள்ளடக்கப்படவேண்டிய பிரதான விடயங்கள்**

| | | |
|---|---|---|
| (அ) | யாப்புறுவாதத்தின் பிரதான பண்புகள் | 06 புள்ளிகள் |
| (ஆ) | யாப்புறுவாதத்தின் பயன்பாடு | 02 புள்ளிகள் |
| (இ) | முடிவுரை | 02 புள்ளிகள் |

**மாதிரி விடை**

- சாதாரண நடைமுறையில் யாப்புறுவாதம் என்பதன் பொருள் அரசியல் யாப்பினை அடிப்படையாகக் கொண்டு அரச ஆட்சியை மேற்கொள்வதாகும். அவ்வாறான ஆட்சி முறையில் யாப்புறு சட்டமானது உயர்தன்மையினதாக இருப்பதுடன் அதன் காரணமாக அரசியல் முறையில் சட்டத்தின் ஆதிக்கம் நடை முறையில் இருக்கும். அதனால் யாப்புறுவாதம் என்பது ஜனநாயக ஆட்சி முறை ஒன்றுக்கு அத்தியாவசியமாக இருக்க வேண்டிய ஒரு நிபந்தனையாகும் என ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.

- யாப்புறு ஆட்சி யாப்புறுவாதத்தின் அத்தியாவசிய பண்பாகும் ஆயினும், அரசியல் யாப்பொன்று இருப்பதனால் மட்டும் ஒரு நாட்டில் நிரந்தரமான யாப்புறுவாதம் நிலவுகின்றது என ஒரேயடியாக முடிவுக்கு வருவது கடினமாகும்.

- ஒரு நாட்டில் நிரந்தரமான யாப்புறுவாதம் நிறுவனமயப்படுத்தப்படுவதில் பாதிப்புச் செலுத்தும் பல காரணங்கள் காணப்படுகின்றன. அவையாவன
  - அ. அரசியல் யாப்பொன்றின் இருப்பும் யாப்புறு சட்டமும் அரச ஆட்சியின் உயர் தன்மை பொருந்தியதாக கருதப்படுதல்.
  - ஆ. யாப்பானது காலத்தின் தேவைகளின் பிரகாரம் மாற்றமுற்று தொடர்ச்சியாக மக்களோடு முன்செல்லுதல்
  - இ. யாப்பின் மூலம் அடித்தளத்தைப் பெறும் அரசாங்கம் மக்கள் விருப்புக்குரியதாக அமைதல்.
  - ஈ. யாப்பின் மூலம் ஒரு நிச்சயமான யாப்புறு தத்துவம் வழங்கப்படுதல் அதாவது சமூக முன்னேற்றத்திற்கு ஊன்றுகோலாக அமையும் அரசியல், பொருளாதார, சமூக தத்துவம் வழங்கப்படுதல்.
  - உ. அரசியல் யாப்பினை நிதமும் மாற்றத்திற்குட்படுத்தாமை குறிப்பாக அரசியல் வாதிகளின் தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களின் பிரகாரம் யாப்பு மாற்றத்திற்குட்படுத்தப்படாமை.
  - ஊ. நீதிப் புனராய்வு அதிகாரம் நடைமுறைப்படுத்தப்படுதல் அதாவது அரசியல் யாப்பினை பொருள் விளக்கம் செய்யும் அதிகாரம் நீதித்துறைக்கு வழங்கப்படுதல்.
  - எ. ஆளப்படுவோர் மட்டுமன்றி ஆள்வோரும் அரசியல் யாப்பினை மதித்து பின்பற்றுதல்.

- ஒரு நாட்டில் யாப்புறுவாதம் நிலையானதாக வேரூன்றினால் தென்படக்கூடிய பண்பு என்னவெனில் யாப்பின் மீது மக்களிடத்தில் விருத்தியுறும் நம்பிக்கையின் காரணமாக யாப்பினை மதிப்பதற்கு முற்படுவதாகும். அவ்வாறு மதிப்பதன் மூலம் மக்களிடத்தில் யாப்புறு பக்தி உருவாகும். அந்த பக்தியின் காரணமாக யாப்பை பூஜிக்கும் ஒன்றாக கருதுவதற்கு மக்கள் தூண்டப்படுவதோடு அதன் இறுதி விளைவாக யாப்புறுவாதத்தின் மீதான பக்தி ஒரு சிவில் சமூக சமய நிலைவரை விருத்தியுறும். இது தொடர்பான சிறந்த எடுத்துக்காட்டு அமெரிக்க அரசியல் யாப்பாகும்.

- ஒரு நிரந்தர யாப்புறுவாதத்தின் மூலம் பல நன்மைகள் ஏற்படும். அவற்றுள் ஒன்று நிரந்தரமான அரசியல் முறைமை ஒன்றினை கட்டியெழுப்பி பேண முடிவதாகும். இரண்டாவதாக நாட்டின் அரசியல் முறைமைக்கு நெறிமுறைத் தன்மையும் நிரந்தரத் தன்மையும் ஏற்படுகிறது. மூன்றாவதாக அரசியல் விளையாட்டினை அதற்கேயுரிய சட்டத்திட்டங்களின் பிரகாரம் மேற்கொள்வதற்கான பயிற்சி அரசியல் விளையாட்டில் ஈடுபடுவோருக்கு கிடைக்கப் பெறுகிறது. நான்காவதாக புரட்சியோ கிளர்ச்சிகளோ இன்றி அரசியல் அதிகாரத்தை மாற்ற முடிகிறது. ஐந்தாவதாக மக்களின் சுதந்திரமும் உரிமைகளும் சிறப்பாக பாதுகாக்கப்படுகிறது.

**முடிவுரை**

மேற்குறிப்பிட்ட விடயங்களின் மூலம் ஜனநாயக ஆட்சியின் தளம் யாப்புறுவாதம் ஆகும் என தெரியவருகிறது. மேலும் அதன் மூலம் அடையக்கூடிய பல நன்மைகளும் காணப்படுகின்றன. எனினும் ஒரு நாடு நிரந்தரமான யாப்புறுவாதத்தை கட்டியெழுப்புதல் எளிதானதன்று. அது தொடர்பாக பாதிப்புச் செலுத்தும் ஒரு காரணி என்னவெனில் யாப்பினை கவனத்தில் கொள்ளாது அதிகாரத்தை பிரயோகிப்பதற்கு ஆட்சியாளர்கள் முயல்வதாகும். இரண்டாவது காரணி அரசியல் யாப்பினுள் சில வேளை நிலவும் அபூர்வத் தன்மையாகும். மூன்றாவது காரணி சிலவேளை விசேட தேவைகளுக்காகவாயினும் யாப்பினை மாற்ற முடியாதிருத்தலாகும்.

## வினா இலக்கம் 04 :

**பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினை விபரிக்குக.**

**(i) அரசு - பிரஜை தொடர்பு**

**(ii) சிவில் சமூகம்**

**(iii) நல்லாட்சி** **(10 × 2 = 20 புள்ளிகள் )**

**நோக்கம்**

இவ்வினாவில் சமகால அரசியல் கலந்துரையாடலில் பேசப்படும் பிரதான தலைப்புகள் மூன்று இடம்பெறுகின்றன. வினாவின் நோக்கம் இம்மூன்று தலைப்புகளையும் பற்றி மாணவர்களின் அறிவை பரீட்சித்துப் பார்ப்பதாகும். மூன்று விடைகளையும் மதிப்பீடு செய்யும் போது பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்துக.

**விடைகளில் உள்ளடக்கப்பட வேண்டிய பிரதான பகுதிகள்**

| | | |
|---|---|---|
| (அ) | தலைப்புகள் பற்றி பரீட்சார்த்தி வெளிப்படுத்தும் பொருள் கூறலின் போதுமான தன்மை | 02 புள்ளிகள் |
| (ஆ) | தலைப்புகள் பற்றிய கோட்பாட்டு ரீதியான அறிவு | 03 புள்ளிகள் |
| (இ) | அரசியல் விஞ்ஞான ரீதியான முக்கியத்துவம் | 03 புள்ளிகள் |
| (ஈ) | விடைகளிலுள்ள சாரத்தின் முக்கியத்துவம் | 02 புள்ளிகள் |

**(i) அரசு - பிரஜை தொடர்பு**

**மாதிரி விடை**

- அரசு மற்றும் பிரஜை என்பவை அன்னியோன்யமான முறையில் ஒன்றிலொன்று தங்கியிருக்கும் இரண்டு அரசியல் கருப்பொருள்களாகும். தற்கால அரசானது பிரஜைகளின் தொகுதியைக் கொண்ட அரசியல் ஜனக்குழுவினாலேயே தாபனமாகின்றது. மேலும் பிரஜைகள் அரசினுள் ஒழுங்கமைந்திருக்கும் போதே பிரஜைகளின் தொகுதி ஒன்று அரசியல் ஜன சமூகமாக நிலவும்.

- அதன்படி மனிதர்கள் அரசினுள் அரசோடு தொடர்பு கொள்ளும் பொழுதே பிரஜைகளாகின்றனர். அரசானது அரசியல் ரீதியாக ஒழுங்கமைந்த பிரஜைகளின் தொகுதியின் அரசியல் இலக்கினை ஒன்றிணைத்துக் கொள்ளும் போதே அரசாகின்றது.

- பிரஜாவுரிமை பற்றிய பொருள் விளக்கத்தின் மூலமும் அரசுக்கும் பிரஜைக்கும் இடையிலான தொடர்பினைக் கண்டு கொள்ளலாம். பிரஜாவுரிமை என்பது அரசின் உறுப்புரிமையாகும். அரசின் உறுப்புரிமையை பெற்றுக்கொள்வதினாலேயே ஒரு தனிமனிதன் பிரஜையாகின்றான்.

- அரசுக்கும் பிரஜைக்குமிடையிலான தொடர்பு அரசியல் தொடர்பாகவும் இடம்பெறுகிறது. அந்த அரசியல் தொடர்பின் பண்பு என்னவெனில் உரிமைகள் மற்றும் கடமைகள் தொகுதியை மையமாகக் கொண்டு அரசும் பிரஜைகளும் ஒருவருக்கொருவர் தொடர்பு கொள்வதாகும். அரசின் பிரஜாவுரிமையைப் பெற்றுக்கொள்ளும் அதன் உறுப்பினர்களுக்கு பாதுகாப்பை வழங்குதல், அவர்களின் பொருளாதார செயற்பாடுகளுக்கு தேவையான அவகாசங்களையும் நிறுவனங்களையும் வழங்குதல், பிரஜைகளுக்கிடையில் உள்ள மோதல்களை தீர்த்தல் மற்றும் நியாயமான முறையில் அவற்றை முடிவுக்கு கொண்டு வருதல் என்பன அரசின் கடமைகளாகும். அதற்கு பிரதியுபகாரமாக பிரஜைகள் தமது சார்புத் தன்மையினை அரசுக்கு வழங்குகின்றனர்; வரிகளைச் செலுத்துகின்றனர்; நற்பிரஜைளாக செயற்படுகின்றனர், இவை அரசு மற்றும் பிரஜைகள் பற்றிய அரசியல் கோட்பாட்டின் மூலம் வலியுறுத்தப்படுகின்றன.

- தற்கால ஜனநாயக அரசுகளில் அரசுக்கும் பிரஜைக்குமிடையிலான தொடர்பினை நிர்ணயிக்கும் போது அடிப்படை உரிமைகளின் மூலம் பிறிதொரு முக்கிய பணியும் நிறைவேற்றப்படுகின்றது. அரசானது பிரஜைகளின் அரசியல் சார்பு தன்மையினையும் அரசுக்கு கீழ்ப்படிவதனையும் எதிர்பார்க்கும் அதே வேளை பிரஜைகளின் சுதந்திரத்தை உறுதிப்படுத்துவதும் அரசின் கடமையாகும். அதனால்தான் நவீன அரசியல் யாப்புக்களில் அடிப்படை உரிமைகள் பிரகடனம் ஒன்று இடம்பெற வேண்டும் எனக் கருதப்படுகிறது. அது ஜனநாயக அரசியல் யாப்புக்கள் பற்றிய அரசியல் கோட்பாட்டிலும் வலியுறுத்தப்படுகிறது.

- இறுதியாக அரசுக்கும் பிரஜைக்கும் இடையிலான தொடர்பினை நிர்ணயிக்கும் அடிப்படை ஆவணம் அரசியல் யாப்பாகும் எனக் கூற முடியும். அதன் மூலம் சமூகம் தொடர்பாக அரசுக்குள்ள கடமைகள் மற்றும் பொறுப்புகளும் பிரஜைகள் அரசோடு கொள்ளும் பிணைப்பின் சட்டரீதியானதும் மூலக்கொள்கை ரீதியா-னதுமான அடித்தளமும் வெளிப்படுத்தப்படுகின்றன.

## (ii) சிவில் சமூகம்

**மாதிரி விடை**

- தற்கால அரசியல் கோட்பாட்டோடு சேர்ந்துள்ள இவ்வெண்ணக்கருவின் மூலம் அரசிலிருந்து விடுபட்டு தமது பொதுத் தேவைகளுக்காக கூட்டாகவோ அல்லது குழுவாகவோ செயற்படுவதற்கு பிரஜைகளுக்குள்ள வாய்ப்பு என பொருள் கொள்ளப்படுகின்றது. இது தற்கால முதலாளித்துவ சமூகத்திலும் ஜனநாயகத்திலும் உள்ள விசேட பண்பாகும் என்றும் கருதப்படுகின்றது.

- சிவில் சமூகம் பற்றி அரசியல் கோட்பாட்டில் உடன்பாடு காணப்படுவதில்லை. ஹெகல் மற்றும் கால் மாக்ஸ் முன்வைத்த சிவில் சமூகம் பற்றிய பழமை அணுகுமுறையில் "சிவில் சமூகம்" என்ற எண்ணக்கருவை "முதலாளித்துவ சந்தை" என்ற பொருளில் பயன்படுத்தினர். அங்கு ஹெகல் "சிவில் சமூகத்தை மனித சுதந்திரத்தின் வாய்ப்பு" என்றே கண்ணுற்றார் அதற்கு முரண்பட்ட வகையில் மாக்ஸ் "சிவில் சமூகத்தை தனி மனித சுயநலத் தன்மையின் வாய்ப்பு" என்றே கண்ணுற்றார்.

- ஆனால் பிற்பட்ட காலத்தில் "சிவில் சமூகம்" என்பதற்கு முற்றிலும் வேறுபட்ட பொருள் விளக்கம் முன்வைக்கப்பட்டது. தமது பொது நலன்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு அரசாங்கத்திலிருந்தும் அரசியல் கட்சிகளிலிருந்தும் விடுபட்டு பிரஜைகள் தாபித்துக்கொள்ளும் ஒழுங்கமைப்புகளையும்

அவ்வொழுங்கமைப்புகளை தாபிப்பதற்கு பிரஜைகளுக்குள்ள சமூக வாய்ப்புக்களையும் குறிப்பிடுவதற்கே இவ்வெண்ணக்கரு பயன்படுத்தப்படுகின்றது. **அமெரிக்காவில் ஜனநாயகம்** என்ற நூலை எழுதிய அலெக்சிஸ் டி டொக்வில் என்ற அரசியல் சிந்தனையாளர் இப்பொருள் விளக்கத்தின் முன்னோடி ஆவார். "சிவில்" என்ற சொல்லில் உள்ள பிரஜை என்ற பொருள் இப்புதிய பொருள் விளக்கத்திலிருந்து வலியுறுத்தப்படுகிறது. பிரஜைகள் பங்கேற்பானது ஜனநாயக ஆட்சிக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாகும் என்ற கருத்து இதன் மூலம் வலியுறுத்தப்படுகின்றது.

- சிவில் சமூக இயக்கங்கள் அரசியல் கட்சிகளுக்கு சமாந்தரமாக அரசியல் நிறுவன வெளியீடு என்ற வகையிலும் நவீன ஜனநாயக கோட்பாடுகளில் கருதப்படுகின்றது. அரசியல் கட்சிகளின் நிகழ்ச்சி நிரல்களில் உள்ளடக்கப்படாத பொது மக்களின் கோரிக்கைகள் மற்றும் கொள்கைகள் ஆகிய விடயங்கள் சிவில் சமூக இயக்கங்களின் நிகழ்ச்சி நிரல்களின் மூலம் வலியுறுத்தப்படுவது இதற்கு காரணமாகும்.

- நவீன ஜனநாயகத்தில் சிவில் சமூகத்திற்கு விசேட முக்கியத்துவம் உண்டு. பிரஜைகள் தமது பொது நோக்கங்களுக்காக பல்வேறு அமைப்புக்களை தாபித்துக்கொள்கின்றனர். அதேபோன்று தமது நோக்கங்களை பெற்றுக்கொள்வதற்காக சமூக இயக்கங்களை கட்டியெழுப்பிக் கொள்கின்றனர். தன்னார்வச் சங்கங்கள், தொழிற் சங்கங்கள், தொழிலாளர் இயக்கங்கள், விவசாய இயக்கங்கள், பெண்களின் இயக்கங்கள், மாணவர் இயக்கங்கள் என்பவை இதற்கு எடுத்துக்காட்டுதலாகும். இவ்வாறான சிவில் சமூக இயக்கங்கள் காணப்படுதலும் அவை செயற்பாட்டுத் தன்மை பொருந்தியவையாக இருத்தலும் பிரஜை அரசியல் பங்கேற்பின் ஊடகங்களாகின்றன.எனவே "சிவில் சமூகம்" என்பது நவீன ஜனநாயகத்திற்கும் ஜனநாயக கோட்பாட்டுக்கும் முக்கியம் பெறுகின்றது.

### (iii) நல்லாட்சி

**மாதிரி விடை**

- இது சமகால இலங்கையின் அரசியல் கலந்துரையாடலோடு சேர்ந்துள்ள ஒரு புதிய எண்ணக்கருவாகும். 2015 ஜனாதிபதி மற்றும் பாராளுமன்ற தேர்தல்களில் இவ்வெண்ணக்கருவானது பிரதான அரசியல் சுலோகமாக முன்வைக்கப்பட்டது.

- "நல்லாட்சி" என்ற எண்ணக்கருவில் ஆட்சி பற்றிய சில கருத்துக்கள் பொதிந்துள்ளன. அவை யாவன ஊழலற்ற ஆட்சி, அடக்குமுறையும் அச்சமும் அற்ற ஆட்சி, சட்டவாட்சிக்கும் ஜனநாயக மூலக்கொள்கைகளுக்கும் ஏற்ப நிகழும் ஆட்சி, திறந்த தன்மையுடன் கூடிய மக்களுக்கு பொறுப்புக் கூறும் ஆட்சி என்பவையே அவையாகும்.

- இலங்கை போன்ற நாடுகளில் கடந்த காலங்களில் இடம்பெற்ற "ஜனநாயகத்தின் வீழ்ச்சி" பற்றிய பின்னணியினூடாகவே அரசியல் எண்ணக்கரு என்ற வகையில் "நல்லாட்சி" தோற்றம் பெற்றது. அரசாங்க அதிகாரமும் ஊழலும் ஒன்றாக இணைந்து காணப்படுதல், அரசாங்கம் அடக்குமுறையானதாகக் காணப்படுதல், சட்டத்தின் ஆட்சி வீழ்ச்சியடைந்தமை ஆகிய காரணிகளினால் ஜனநாயக ஆட்சி வீழ்ச்சியுறுதல், ஜனநாயக ஆட்சி நிறுவனங்கள் பலவீனமடைதல், பிரஜைகள் மத்தியில் அரசியல் அதிருப்தி பரவலடைதல் என்பன ஏற்பட்டன. இந்த பின்னணியினூடாக "ஜனநாயகத்தை மீண்டும் பலப்படுத்துதல்" என்ற இலக்கு "நல்லாட்சி" என்ற எண்ணக்கருவில் காணப்பட்டது.

- ஊழல், அதிகார துஸ்பிரயோகம் அரசியல்வாதிகள் மக்களுக்கு பதில் கூறாமை, தற்கால ஜனநாயக அரசாங்கங்களின் வீழ்ச்சியின் பண்புகளாகும். இந்த வீழ்ச்சியானது ஆட்சியோடு ஒன்றிணைந்திருக்கும் பின்னணியில் ஜனநாயக ஆட்சி விழுமியங்களுக்கு உரிய அணுகுமுறை ஒன்று அவசியமாகியது. "நல்லாட்சி" பற்றிய எண்ணக்கரு இப்பின்னணியினூடாகவே இலங்கையில் தோற்றம் பெற்றது. அதன-ால் இவ்வெண்ணக்கரு தேசிய ரீதியாக தோற்றம் பெற்ற ஓர் எண்ணக்கருவாகவும் கருதமுடியும். அதனால் தான் அது நவ தாராளவாத பொருளிலிருந்து வேறுபடுகின்றது.

- "நல்லாட்சி" என்பதன் நவ தாராளவாத பொருள் என்னவெனில் திறந்த தன்மை, வெளிப்படையான தன்மை மற்றும் பதில் கூறுதல் என்ற பண்புகளைக் கொண்ட ஆட்சியாகும். அதற்கு மாறுபட்ட வகையில் இலங்கை அரசியல் கலந்துரையாடலில் "நல்லாட்சி" என்பது ஆட்சி ஜனநாயக மயமாகுதல் பற்றிய இலக்கோடு நேரடியாக தொடர்புபடுகின்றது.

- "நல்லாட்சி" பற்றிய தலைப்பு தற்பொழுது இலங்கையில் பலவீனமடைந்துள்ளது. அதற்குப் பிரதான காரணம், நல்லாட்சி பற்றிய மூலக்கொள்கையை நடைமுறைப்படுத்துவதில் அரசாங்கம் தோல்வியுற்றிருப்பதாகும். ஓர் அரசியல் வாக்குறுதி என்ற வகையில் "நல்லாட்சி" என்ற கருத்து எந்தளவு முக்கியத்துவம் வாய்ந்ததாகினும் அரசியல் பிரயோகித்தில் அது கடினமான இலக்காக உள்ளது என்பதனைக் காணமுடிகிறது.

## வினா இலக்கம் 05 :

**இலங்கையின் அரசியல், பொருளாதார, சமூக மாற்றங்களில் கோல்புறூக் - கமரன் சீர்த்திருத்தங்களின் பங்களிப்பை ஆராய்க.** **( 20 புள்ளிகள் )**

**நோக்கம்**

1833 கோல்புறூக் - கமரன் சீர்த்திருத்தங்கள் இலங்கையானது அரசியல் ரீதியாக மன்னராட்சி முறைமையிலிருந்து நவீன ஜனநாயக ஆட்சி முறையினைக் கொண்ட அரசுக்கும் பொருளாதார ரீதியாக மானிய அரசு முறையிலிருந்து முதலாளித்துவ அரசு முறைக்கும் சமூக ரீதியாக நவீனத்துமடையாத பின்தங்கிய நிலையிலிருந்த அரசு நவீனத்துவம் அடைந்த நவீன அரசாகவும் மாற்றமுறுவதற்கு தேவையான ஆரம்ப தளத்தினை வழங்கிய முக்கியமான அரசியல் பொருளாதார சமூக சீர்த்திருத்தங்களாக கருதப்படுகின்றன. இவ்வினாவின் நோக்கம் இவ்விடயங்கள் தொடர்பான பரீட்சார்த்தியின் அறிவையும் புரிதலையும் பரீட்சிப்பதாகும்.

**விடையில் உள்ளடக்கப்பட வேண்டிய பிரதான விடயங்கள்**

| | | |
|---|---|---|
| (அ) | கோல்புறூக் - கமரன் சீர்த்திருத்த யோசனைகளை அடையாளம் காணல் | 06 புள்ளிகள் |
| (ஆ) | அந்த யோசனைகளின் விளைவுகள் | 12 புள்ளிகள் |
| (இ) | முடிவுரை | 02 புள்ளிகள் |

**மாதிரி விடை**

- 1829 இல் பிரித்தானிய குடியேற்ற நாட்டு அலுவலகம் W.M.G. கோல்புறூக் மற்றும் C.H. கமரன் ஆகிய இருவரையும் உள்ளடக்கிய ஓர் ஆணைக்குழுவினை குடியேற்ற நாட்டின் நிலையினை பரிசீலனை செய்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக நியமித்தது.

- ஆணைக்குழுவானது தனது அறிக்கையை 1833 இல் சமர்ப்பித்தது. அவ்வறிக்கையின் மூலம் இலங்கையை மரபுத்துவத்திலிருந்து விடுபடுத்தி புதிய அரசாக படிப்படியாக மாற்றுவதனை இலக்காகக் கொண்ட பல்வேறு யோசனைகள் முன்வைக்கப்பட்டன. அந்த நோக்கங்களும் யோசனைகளும் பின்வருமாறு

**1. ஆட்சியை சீர்த்திருத்தும் நோக்கங்களும் அதனை அடிப்படையாகக் கொண்ட யோசனைகளும்**

அ) தேசாதிபதிக்கிருந்த தன்னிச்சையான அதிகாரங்களை அகற்றுதல்.

ஆ) தேசாதிபதிக்கு உதவுவதற்கு நிறைவேற்று மற்றும் சட்ட மன்றுகளை தாபித்தமை.

**2. நிர்வாக முறைமையை மறுசீரமைக்கும் நோக்கங்களும் அதனோடு தொடர்பான யோசனைகளும்**

அ) கரைநாட்டு மற்றும் மலைநாட்டு மாகாணங்களை ஒன்றிணைத்தல்.

ஆ) மக்களினது வேலைகளையும் வர்த்தக மற்றும் தொழில்கள் தொடர்பான கொடுக்கல் வாங்கல்களை எளிமைப்படுத்துவதற்கு 16 ஆக இருந்த மாகாணங்களை 05 ஆகக் குறைத்தமை.

இ) சிவில் சேவையாளர்களின் சம்பளத்தை குறிப்பிடத்தக்களவு குறைத்தமை அவர்களின் உத்தியோகப் பணிகளை குறைத்தமை, அதன் காரணமாக சிவில் சேவையாளர்களுக்கு ஏற்படும் நட்டத்தை ஈடுசெய்வதற்கு அவர்களுக்கு காணிகளை வழங்கி வர்த்தக பயிர்ச்செய்கையில் ஈடுபடத் தூண்டியமை.

ஈ) ஆங்கிலக் கல்வியை ஆரம்பித்ததன் மூலம் இலங்கையர்களும் சிவில் சேவையில் நுழைவதற்கு கதவு திறந்துவிடப்பட்டமை.

**3. பொருளாதார முறைமையை சீர்த்திருத்தும் நோக்கங்களும் அவை தொடர்பான யோசனைகளும்**

அ) அரசின் வர்த்தக ஏகபோக உரிமையை இல்லாதொழித்தமை.

ஆ) மானிய முறைமையில் அமைந்த இராஜகாரிய முறைமையை இல்லாதொழித்தமை.

இ) உள்நாட்டவர்களுக்கும் வெளிநாட்டவர்களும் முதலீட்டுக்கான வாய்ப்புக்களை பரவலாக்குவதற்கு சேமிப்பு வங்கி ஒன்றை ஆரம்பித்தமை.

ஈ) பாரிய வகையிலான வர்த்தக பயிர்ச்செய்கைக்கான தளமிடப்பட்டமை.

உ) ஐரோப்பியர்கள் கொழும்புக்கு வெளியே காணிகளை பெற்றுக்கொள்வதன் மீது விதிக்கப்பட்டிருந்த தடைகளை அகற்றியமை.

**4. நீதி முறைமையை சீர்த்திருத்தும் யோசனைகள்**

அ) கரையோர மாகாணங்களிலும் மலைநாட்டு மாகாணங்களிலும் அமைக்கப்பட்டுள்ள பல்வேறு நீதிமன்றுகளை அகற்றி முழு இலங்கைக்கும் தனி நீதிமன்ற முறைமையைத் தாபித்தமை.

ஆ) சிவில் நீதிமன்றங்களை தேசாதிபதியின் கட்டுப்பாட்டிலிருந்து விடுவித்தமை மூலம் நீதித்துறை நிறைவேற்றுத் துறையிலிருந்து வேறுபடுத்தியமை.

இ) நீதியை நிர்வகிப்பதற்கு பிரதம நீதியரசரையும் இரண்டு கனிஸ்ட நீதியரசர்களையும் கொண்ட உயர் நீதிமன்றம் தாபிக்கப்பட்டமை, சகல நீதித்துறை பணிகளும் உயர் நீதிமன்றின் மேற்பார்வையின் கீழ் நடைமுறைப்படுத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டமை ஐரோப்பியர்களுக்காக உயர் நீதிமன்றினால் புறம்பாக மேற்கொள்ளப்பட்ட சிவில் வழக்கு விசாரணை முறைமையை இல்லாதொழித்தல், சிவில் மற்றும் குற்றவியல் வழக்கு விசாரணைகளை மேற்கொள்ளும் அதிகாரம் உயர் நீதிமன்றுக்கு வழங்குதல்.

ஈ) சகல மாவட்டங்களினதும் பிரதான நகரங்களில் சிவில் மற்றும் குற்றவியல் நீதியதிகாரத்தைப் பெற்ற மாவட்ட நீதிமன்றங்கள் தாபிக்கப்பட்டமை.

உ) வழக்குகளை தீர்க்கும் போது இலங்கை மதிப்பீட்டாளர்களின் உதவியைப் பெற்றுக்கொள்ளுதல்.

**கோல்புறூக் - கமரன் சீர்த்திருத்த யோசனைகளினால் பிற்காலத்தில் ஏற்பட்ட நன்மையான விளைவுகள்**

1. ஜனநாயக மூலக்கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட ஆட்சியை இலங்கையில் விருத்தியுறுவதற்கான தளமிடப்பட்டமை.
2. சுயாதீனமான ஊழியச் சந்தை உருவாகியமை.
3. பாரிய வர்த்தக பெருந்தோட்டங்கள் ஆரம்பமாகியமை.
4. சுயாதீனமான சந்தைப் பொருளாதாரம் தோன்றுவதற்கான தளம் இடப்பட்டமை.
5. தனியார் முயற்சியாளர் வர்க்கமொன்று தோன்றுவதற்கான தளம் இடப்பட்டமை.
6. ஏற்றுமதி – இறக்குமதி பொருளாதார முறைமையின் விருத்திக்கான தளம் இடப்பட்டமை.
7. மேற்கத்திய கல்வி முறை ஆரம்பமாவதற்கான தளம் இடப்பட்டமை.
8. சமூகத்தின் நேரடி செயன்முறை ஆரம்பமாகியதன் காரணமாக மனிதர்களின் தனியாள் தன்மை விருத்தியடைந்தமை.
9. மானிய முறை வீழ்ச்சியுற்றமையால் அதனோடு இணைந்திருந்த சாதி முறைமை பலவீனமடைந்தமை.
10. சுயாதீனமான சிவில் சேவையின் வளர்ச்சி மீதான ஆரம்பத் தளம் இடப்பட்டமை.
11. சுயாதீனமான நீதி சேவை விருத்தியுறுவதற்கான ஆரம்பத் தளம் இடப்பட்டமை.
12. ஒற்றையாட்சி முறை தோன்றியதன் காரணமாக பிரதேச பிரபுத்துவத் தலைவர்கள் அனுபவித்த சமூக அதிகாரங்கள் இல்லாதொழிந்தமை.

**கோல்புறூக் - கமரன் சீர்த்திருத்த யோசனைகளினால் பிற்காலத்தில் ஏற்பட்ட தீமையான விளைவுகள்**

1. உள்நாட்டு விசாயம் வீழ்ச்சியுற்றமை.
2. பிரிவேனாக் கல்வி வீழ்ச்சியுற்றமை.
3. பெருந்தோட்டப் பயிர்ச்செய்கைக்காக காணிகள் சுவீகரிக்கப்பட்டமையால் மலைநாட்டில் காணிப்பிரச்சினை ஏற்பட்டமை.
4. பெருந்தோட்டப் பயிர்ச்செய்கைக்காக இந்தியாவிலிருந்து ஊழியர்கள் இறக்குமதி செய்யப்பட்டமையால் நாடற்றோர் பிரச்சினை உருவாகியமை.
5. ஆங்கிலக் கல்வியை கற்றவர்கள் மற்றும் கற்காதவர்கள் என சமூகம் இரு வர்க்கங்களாக பிளவுற்றமையும் ஆங்கிலம் கற்ற வகுப்பினர் சமூகத்தில் புதிய சலுகைகளைப் பெற்ற சமூக வர்க்கமாக வேறூன்றியமை.
6. இனவாரிப் பிரதிநிதித்துவம் அறிமுகம் செய்யப்பட்டமையினால் மக்கள் இனரீதியாக பிளவுற்றமை.

**முடிவுரை**

மேற்குறிப்பிட்டவாறு குறைபாடுகள் காணப்பட்டாலும் முழுமையாக எடுப்பின் இலங்கை சமூகமானது சர்வாதிகார, தன்னிச்சையான மன்னராட்சி முறைமையிலிருந்து ஜனநாயக ஆட்சி முறைக்கு மானிய பொருளாதார முறைமையிலிருந்து முதலாளித்துவ பொருளாதார முறைமைக்கும் பின்தங்கிய சமூக முறைமையிலிருந்து நவீனத்துவ சமூக முறைமைக்கும் மாற்றமுறுவதற்கான தளமானது கோல்புறூக் - கமரன் சீர்த்திருத்தங்களின் மூலம் இடப்பட்டன என்று இறுதியாக கோர முடியும்.

**வினா இலக்கம் 06 :**

**"இலங்கை ஜனநாயக ஆட்சியில் ஒரு புதிய சகாப்தத்தின் தொடக்கத்தினை டொனமூர் சீர்த்திருத்தங்கள் குறித்து நின்றன." ஆராய்க.**
**( 20 புள்ளிகள் )**

**நோக்கம்**

இலங்கைக்கு தாராள ஜனநாயக மூலக்கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட ஆட்சி முறைமையை பிரித்தானிய குடியேற்ற நாட்டு ஆட்சியாளர்களே அறிமுகம் செய்தனர். இதன் ஆரம்ப சந்தர்ப்பத்தை 1833 கோல்புறூக் - கமரன் சீர்த்திருத்தங்கள் குறித்து நின்றன. பின்னர் அறிமுகம் செய்யப்பட்ட 1911 மற்றும் 1924 சீர்த்திருத்தங்களின் மூலம் ஜனநாயக ஆட்சி மேலும் பலப்படுத்தப்பட்டது. இச்செயன்முறையின் முக்கிய மைல்கல்லாக 1931 இல் நடைமுறைக்கு வந்த டொனமூர் அரசியல் சீர்த்திருத்தங்களாகும். இந்த அரசியல் சீர்த்திருத்தங்களினால் முதன் முதலாக இலங்கையர்களுக்கு சர்வஜன வாக்குரிமை உரித்தாக்கப்பட்டது. மேலும் இலங்கையர்களுக்கு பரந்த அடிப்படையிலான நிறைவேற்று மற்றும் சட்டவாக்க பணிகளில் பங்கேற்பதற்கான வாய்ப்பும் இச்சீர்த்திருத்தங்களினாலேயே கிடைக்கப்பெற்றன. இவ்வினாவின் நோக்கம் டொனமூர் அரசியல் சீர்த்திருத்தங்களின் மூலம் மேற்குறிப்பிட்ட செயன்முறையானது போசிக்கப்படுவதற்கு பங்காற்றியமை பற்றி பரீட்சார்த்திகளின் அறிவையும் புரிதலையும் பரிசோதிப்பதாகும்.

**விடையில் உள்ளடக்கப்பட வேண்டிய பிரதான விடயங்கள்**

| | | |
|---|---|---|
| (அ) | டொனமூர் சீர்த்திருத்தங்கள் | 06 புள்ளிகள் |
| (ஆ) | ஜனநாயக ஆட்சியில் டொனமூர் சீர்திருத்தங்கள் ஏற்படுத்திய தாக்கங்கள் | 12 புள்ளிகள் |
| (இ) | முடிவுரை | 02 புள்ளிகள் |

**மாதிரி விடை**

- ஜனநாயக ஆட்சியானது இலங்கையில் வேரூன்றுவதில் பாதிப்பு செலுத்திய குடியேற்ற நாட்டாட்சி அரசியல், சீர்த்திருத்த யோசனைகளுள் டொனமூர் சீர்த்திருத்தங்களுக்கு அதி விசேட ஸ்தானம் கிடைக்கப்பெறுகிறது என திட்டவட்டமாக கூறலாம்.

- இதனை விளங்கிக் கொள்வதற்கு முதலாவதாக மேற்குறித்த தலைப்பின் மீது பாதிப்பு செலுத்திய டொனமூர் சீர்த்திருத்த யோசனைகள் யாவை என்பதில் கவனம் செலுத்த வேண்டும்.
  அவை பின்வருமாறு
  1. சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட்டமை.
  2. இனவாரிப் பிரதிநிதித்துவம் ஒழிக்கப்பட்டமை.
  3. பிரதேசவாரி பிரதிநிதித்துவம் பரவலாக்கப்பட்டமை.
  4. 7/10 பங்கு நிறைவேற்று அதிகாரம் வழங்கப்பட்டமை.
  5. நிறைவேற்றுக்குழு முறை அறிமுகம் செய்யப்பட்டமை.
  6. அமைச்சரவை அறிமுகம் செய்யப்பட்டமை.
  7. அரசாங்க சபை அறிமுகம் செய்யப்பட்டமை.

- ஜனநாயக ஆட்சி என்பதன் பொருள் மக்களினால் மக்களின் நன்மையை நோக்காகக் கொண்டு நடைமுறைப்படுத்தப்படும் ஆட்சியாகும். அவ்வாறான அரசாங்க முறை ஆரம்பமாவதில் மேற்குறிப்பிட்ட சீர்திருத்த யோசனைகள் அதிகளவு பாதிப்பு செலுத்தின என்று திட்டவட்டமாக கூறலாம்.

- இந்த யோசனைகளின் மூலம் ஜனநாயக ஆட்சியின் வளர்ச்சிக்கு பங்காற்றிய விதம் பின்வருமாறு
  - அ. தேர்தல் செயன்முறையின் மூலம் ஆட்சியாளர்களை தெரிவு செய்வதற்கும் மாற்றுவதற்கு மக்கள் பழக்கப்பட்டமை.
  - ஆ. அரசியல்வாதிகள் மக்களுக்கு பொறுப்பு கூற பழக்கப்பட்டமை
  - இ. மக்களின் அரசியல் பங்கேற்பு விருத்தியுற்றமை.
  - ஈ. மக்கள் அரசியல் சமுதாயப்படுத்தல் செயன்முறை வேகமடைந்தமை, அதன் காரணமாக மக்கள் அரசியல் ரீதியாகப் பலம்பெறுதல் விருத்தியடைந்தமை மற்றும் அதன் விளைவாக மக்கள் அரசியல்வாதிகள் மீது பாதிப்புச் செலுத்தும் அளவு அதிகரித்தமை.
  - உ. ஆட்சி தொடர்பான பொறுப்புக் கூறுவதற்கு அரசியல்வாதிகள் பழக்கப்பட்டமை.
  - ஊ. நிறைவேற்று மற்றும் சட்டவாக்கப் பணிகளை நடைமுறைப்படுத்துவதில் இலங்கை அரசியல்வாதிகள் பயிற்சி பெற்றமை.
  - எ. கபினட் அரசாங்க முறைக்கு அரசியல்வாதிகள் பழக்கப்பட்டமை.
  - ஏ. அரசியல் கட்சிகளின் தோற்றத்திற்கான தளம் இடப்பட்டமை.
  - ஐ. இனவாத மனப்பாங்கு குறைவதில் பாதிப்புச் செலுத்தியமை.

- ஜனநாயக ஆட்சியின் விருத்தியின் மீது டொனமூர் சீர்த்திருத்தங்களினால் தீமையான விளைவுகளும் ஏற்பட்டன. அவற்றுள் ஒன்று நிறைவேற்று மற்றும் சட்டவாக்க பூரண அதிகாரம் இலங்கையர்களுக்கு வழங்கப்படாமை. இரண்டாவது குறைபாடு சில சந்தர்ப்பங்களில் தேசாதிபதியினதும் அரச செயலா-ளர் மூவரினதும் தேவையற்ற தலையீடுகளின் காரணமாக சில ஜனநாயக ஆட்சி மரபுகளின் வளர்ச்சி பலவீனமடைந்தது. மூன்றாவதாக கூட்டு பொறுப்பு முறைக்கு இலங்கை அரசியல்வாதிகள் பழக்கப்படுதலும் பழவீனமடைந்தது.

முடிவுரை

மேற்குறிப்பிட்டவாறு சில குறைபாடுகள் காணப்பட்டாலும் இந்நாட்டில் ஜனநாயக ஆட்சி வளர்ச்சியுறுவதிலும் வேரூன்றுவதிலும் டொனமூர் சீர்திருத்தங்களினால் ஏற்பட்ட பங்களிப்பானது மிக உயர்ந்ததாகும் என இறுதியாகக் கூறலாம்.

**வினா இலக்கம் 07 :**

**பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டு நிறுவனங்களைப் பற்றி ஆராய்க.**

**(i) சோல்பரி யாப்பின் கீழ் நாம நிறைவேற்றாளர்**

**(ii) 1972 யாப்பின் கீழ் உண்மை நிறைவேற்றாளர்**

**(iii) சோல்பரி யாப்பு மற்றும் 1972 யாப்பின் கீழ் சட்டத்துறை**

**(10 × 2 = 20 புள்ளிகள் )**

**(i) சோல்பரி யாப்பின் கீழ் நாம நிறைவேற்றாளர்**

**நோக்கம்**

கபினட் அரசாங்க முறையின் ஒரு பிரதான பண்புயாதெனில் நிறைவேற்றுத்துறை நாம நிறைவேற்றுப் பகுதி, உண்மை நிறைவேற்றுப் பகுதி என இரு பகுதிகளைக் கொண்டிருத்தலாகும். இதன் பிரகாரம் 1947 யாப்பின் கீழ் தாபிக்கப்பட்ட நிறைவேற்றுத் துறையானது நாம நிறைவேற்றுப் பகுதி, உண்மை நிறைவேற்றுப் பகுதி என்ற இரு பகுதிகளை கொண்டிருந்ததோடு நாம நிறைவேற்றுப்பகுதி மகா தேசாதிபதி என்ற பெயரால் அழைக்கப்பட்டார். இவ்வினாவின் நோக்கம் நாம நிறைவேற்றாளர் நியமிக்கப்பட்ட விதம், பதவி அகற்றப்பட்ட விதம், பதவிக்குரிய அதிகாரங்கள், பணிகள் மற்றும் நிலை என்பன பற்றி பரீட்சார்த்திகளின் அறிவையும் புரிதலையும் பரிசோதிப்பதாகும்.

**விடையில் உள்ளடக்கப்பட வேண்டிய பிரதான பகுதிகள்**

| | | |
|---|---|---|
| (அ) | நியமிக்கப்படும் விதமும் பதவி அகற்றப்படும் விதமும் | 02 புள்ளிகள் |
| (ஆ) | அதிகாரங்கள், பணிகள் மற்றும் நிலை | 05 புள்ளிகள் |
| (இ) | இலங்கையின் அனுபவங்கள் | 01 புள்ளி |
| (ஈ) | முடிவுரை | 02 புள்ளிகள் |

**மாதிரி விடை**

- கபினட் அரசாங்க முறையின் ஒரு பிரதான பண்பு அரசியல் நிறைவேற்றுத் துறையானது நாம நிறைவேற்றுப் பகுதி, உண்மை நிறைவேற்றுப் பகுதி என்ற இரு பகுதிகளை கொண்டிருத்தலாகும். 1947 இல் பிரித்தானிய குடியேற்ற நாட்டாட்சியாளர்கள் இலங்கைக்கு கபினட் அரசாங்க முறையை அறிமுகம் செய்ததோடு அவ் அரசாங்க முறையில் நாம நிறைவேற்று பகுதி பிரித்தானிய முடிக்கே உரித்தாக்கப்பட்டது. அதற்குக் காரணம் இலங்கைக்கு டொமீனியன் அந்தஸ்தினை உடைய சுதந்திரம் மட்டுமே கிடைக்கப் பெற்றமையும் அதன் பிரகாரம் பிரித்தானிய முடி இலங்கை அரசாங்க முறைமையில் உத்தியோகப் பூர்வமான தலைமைத்துவத்தை வகித்தமையுமாகும்.

- எனினும் முடியை தரிப்பவர் இலங்கையில் வாழாததனாலும் இலங்கைக்கும் பிரித்தானியாவுக்கும் இடையில் நிலவும் தூரத்தின் காரணமாகவும் இலங்கை அரசாங்க முறைமையை பிரித்தானிய முடியை பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக ஒரு பிரதிநிதி நியமிக்கப்பட்டதோடு சோல்பரி யாப்பில் அவர் நாம நிறைவேற்றாளர் என அழைக்கப்பட்டார்.

- நாம நிறைவேற்றாளர் தொடர்பாக அரசியல் யாப்பின் ஏற்பாடுகளும் பின்பற்றப்பட்ட மரபுகளும் பின்வருமாறு
  - அ. இலங்கைப் பிரதமரின் ஆலோசனையின் பேரில் பிரித்தானிய முடியினால் நியமிக்கப்பட்டார்.
  - ஆ. பதவிக்காலம் அரசியல் யாப்பில் குறிப்பிடப்படாவிட்டாலும் 5 வருடங்களுக்கொருமுறை பதவி புதுப்பிக்கப்படும் முறை பின்பற்றப்படும்.
  - இ. ஒரே ஆள் பதவியில் அமர்த்தப்படும் வரையறை விதிக்கப்படவில்லை.
  - ஈ. இலங்கை பிரதமரின் ஆலோசனையின் பேரில் பிரித்தானிய முடியினால் பதவி அகற்ற முடிந்தது.

- மேற்குறிப்பிட்ட விடயங்களின் பிரகாரம் நாம நிறைவேற்றாளரின் நியமனம் பதவியில் தரித்திருக்கும் கால அவகாசம் தீர்மானிக்கப்படுதல், பதவியிலிருந்து அகற்றப்படுதல் போன்றவை அனைத்தும் இலங்கைப் பிரதமரின் விருப்பின் பேரிலேயே மேற்கொள்ளப்பட்டன.

**அதிகாரங்கள் பணிகள் மற்றும் நிலை**

- மகா தேசாபதியின் அதிகாரங்களும் பணிகளும் சோல்பரி யாப்பில் குறிப்பிடப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் மகா தேசாதிபதி அரசின் தலைவரும் நிறைவேற்றுத் துறையின் தலைவரும் ஆயுதப் படைகளின் தளபதியுமாவார். இவற்றை விட அவர் தமது பணிகளை நிறைவேற்றும் பொழுது பிரித்தானிய மரபு-களை பின்பற்ற வேண்டியிருந்தால் மகா தேசாதிபதியின் அதிகாரங்களையும் பணிகளையும் சட்டத்துறை, நிறைவேற்றுத்துறை, நீதித்துறை மற்றும் சம்பிரதாயபூர்வமானவை என நான்கு தலைப்புகளின் கீழ் பின்வருமாறு குறிப்பிட முடியும்.

**சட்டத்துறை சார்ந்த அதிகாரங்களும் பணிகளும்**

அ. ஆலோசனையின் பேரில் பாராளுமன்றைக் கூட்டுதல், ஒத்தி வைத்தல், கலைத்தல்.
ஆ. பாராளுமன்றின் தவணைகளின் ஆரம்பத்தின் போது சிம்மாசன பிரசங்கத்தை நிகழ்த்துதல்.
இ. சடங்குமுறையான அமர்வுகளின் போது பாராளுமன்றத்திற்கு தலைமை தாங்குதல்.
ஈ. பாராளுமன்றின் மசோதாக்களுக்கு இறுதி அங்கீகாரம் வழங்குதல்.
உ. செனட் மன்றுக்கு 15 உறுப்பினர்களை நியமித்தல்.
ஊ. சிறுபான்மை ஜனக்குழுவினர்களுக்காக மக்கள் பிரதிநிதிகள் சபைக்கு 6 உறுப்பினர்களை நியமித்தல்.
எ. மக்கள் பிரதிநிதி சபையினதும் செனட் சபையினதும் செயலாளர்களை நியமித்தல்.

**நிறைவேற்று அதிகாரங்களும் பணிகளும்**

அ. பிரதமரை நியமித்தல், பிரதமரின் ஆலோசனையின் பேரில் கபினட்டின் ஏனைய அமைச்சர்களையும் பிரதி அமைச்சர்களையும் நியமித்தல்.
ஆ. அமைச்சர்களுக்கும் பிரதி அமைச்சர்களுக்கும் அமைச்சுக்களையும் அமைச்சுப் பொறுப்புக்களையும் ஒப்படைத்தல்.
இ. முப்படைகளின் தளபதிகளையும் பொலிஸ்மா அதிபரையும் நியமித்தல்.
ஈ. அமைச்சுக்களின் நிரந்தர செயலாளர்களையும் உயர் அதிகாரிகளையும் கபினட்டின் செயலாளரையும் நியமித்தல்.
உ. வெளிநாட்டு தூதுவர்களையும் உயர் ஸ்தானிகர்களையும் மற்றும் அரச தூதுவர்களையும் நியமித்தல், நீக்குதல் மற்றும் அவ்வாறான வெளிநாட்டு தூதுவர்களையும் உயர் ஸ்தானிகர்களையும் மற்றும் அரச தூதுவர்களையும் வரவேற்றல்.
ஊ. அரச இலட்சினையை பிரயோகித்தல்.

**நீதித்துறை சார்ந்த அதிகாரங்களும் பணிகளும்**

அ. பிரதம நீதியரசரையும் ஏனைய நீதியரசர்களையும் நியாய விசாரணை ஆணையாளர்களையும் நியமித்தல் மற்றும் நீக்குதல்.
ஆ. நீதி சேவை ஆணைக்குழுவின் தலைவர் தவிர்ந்த ஏனைய உறுப்பினர்களை நியமித்தல்.
இ. குற்றவாளிகளுக்கு மன்னிப்பு வழங்குதல்.

**சடங்கு முறையான பணிகள்**

- தேசிய விழாக்களுக்கு தலைமை தாங்குதல், கௌரவ பட்டங்களை வழங்குதல், தேசிய மட்டத்திலான விழாக்களை திறந்து வைப்பதில் பங்கேற்றல்.

**மகா தேசாபதி பதவி பற்றிய இலங்கையின் அனுபவங்கள்**

- 1948 - 1972 காலப்பகுதியில் நால்வர் மகாதேசாபதி பதவியை வகித்தனர். கபினட் அரசாங்க முறையினில் நாம நிறைவேற்றாளர் பக்கச்சார்பற்றவராக செயற்பட வேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டாலும் இலங்கையில் அவ்வாறு நிகழவில்லை. உதாரணமாக மகாதேசாதிபதி பதவியை வகித்த இரண்டாமவரான சோல்பரி பிரபு 1951 இல் பிரதமரை நியமித்தமை மூன்றாவது மகாதேசாதிபதியான சேர். ஒலிவர் குணதிலக 1958 அவசர காலநிலையை பிரகடனப்படுத்தியமை, 1960 மார்ச் பொதுத் தேர்தலின் பின்னர் அரசாங்கத்தை நியமித்தமை மற்றும் 1962 புரட்சி சதி ஆகிய சந்தர்ப்பங்களில் செயற்பட்ட விதமும் அரசியல் கருத்து மோதல்களுக்கு உட்பட்டது.

- அவ்வாறாயினும் ஏனைய சந்தர்ப்பங்களில் மகா தேசாதிபதிகள் தமது பதவிக்குரிய பணிகளை எதிர்பார்த்தது போன்று பக்கச்சார்பின்றி நிறைவேற்றினர். குறிப்பாக 1964 - 1972 காலப்பகுதியில் அப்பதவியை வகித்த வில்லியம் கொபல்லவ அப்பதவியிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட பக்கச் சார்பற்ற தன்மையை பேணி செயற்பட்டார்.

**முடிவுரை**

கபினட் அரசாங்க முறை ஒன்றின் நாம நிறைவேற்றாளர் கௌரவமான பதவியாயினும் சோல்பரி யாப்பின் கீழிருந்த மகா தேசாதிபதி நியமிக்கப்பட்ட விதம், பதவி நீக்கம் செய்யப்பட்ட முறை அவருக்குரிய அதிகாரங்கள், பணிகள் என்பவற்றின் அடிப்படையில் அவரை ஒரு தேசிய தலைவராக அன்றி வெளிநாட்டு அரசாங்கமொன்றின் பிரதிநிதியாகவே கருத முடிந்தது.

## (ii) 1972 யாப்பின் கீழ் உண்மை நிறைவேற்றாளர்

**நோக்கம்**

கபினட் அல்லது பாராளுமன்ற அரசாங்க முறையில் உண்மை நிறைவேற்றுப் பகுதி என்று பிரதமரின் தலைமையிலான அமைச்சரவையே கருதப்படுகின்றது. கபினட் முறைமையில் நிறைவேற்று அதிகாரத்தை உண்மையாக அனுபவிப்பதும் நடைமுறைப்படுத்துவதும் உண்மை நிறைவேற்று பகுதியாகும். 1972 முதலாம் குடியரசு யாப்பின் மூலம் இலங்கையில் கபினட் அரசாங்க முறையே தாபிக்கப்பட்டது. அங்கு பிரதமர் தலைமையிலான கபினட்டே உண்மை நிறைவேற்றுப் பகுதி என அழைக்கப்பட்டது. இவ்வினாவின் நோக்கம் 1972 முதலாம் குடியரசு யாப்பின் கீழ் தாபிக்கப்பட்ட உண்மை நிறைவேற்றுப் பகுதியின் இயல்பு அது தெரிவுசெய்யப்பட்ட விதம் அதற்குரிய அதிகாரங்கள் ஆகிய விடயங்கள் தொடர்பாக பரீட்சார்த்திகளின் அறிவையும் புரிதலையும் பரீட்சிப்பதாகும்.

**விடையில் உள்ளடக்கப்பட வேண்டிய பிரதான பகுதிகள்**

| | | |
|---|---|---|
| (அ) | உண்மை நிறைவேற்றுப்பகுதி தெரிவுசெய்யப்பட்ட விதம் | 02 புள்ளிகள் |
| (ஆ) | அதிகாரங்கள் மற்றும் பணிகள் | 04 புள்ளிகள் |
| (இ) | சட்டத்துறைக்கு பொறுப்புக் கூறவேண்டியதன் அவசியம் | 01 புள்ளி |
| (ஈ) | பதவிக்காலம் முடிவுறுதல் / பதவி அகற்றப்படுதல் | 02 புள்ளிகள் |
| (உ) | முடிவுரை | 01 புள்ளிகள் |

**மாதிரி விடை**

- 1972 முதலாம் குடியரசு யாப்பின் கீழிருந்த உண்மை நிறைவேற்றுப் பகுதி பிரதமர் தலைமையிலான கபினட் ஆகும். அது அரசியல் நிறைவேற்றுத் துறை என்றும் அழைக்கப்பட்டது. அதற்குக் காரணம் அரசியல் பின்னணியின் அடிப்படையில் பிரதமரும் கபினட்டும் நியமிக்கப்படுதலாகும்.
- 1972 யாப்பின் பிரகாரம் பிரதமர் தலைமையிலான கபினட் சட்டத்துறையான தேசிய அரசுப் பேரவை உறுப்பினர்களிலிருந்து தெரிவு செய்யப்பட்டது. 1972 யாப்பில் பிரதமர் தெரிவு தொடர்பாக விசேடமாக குறிப்பிடப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் தேசிய அரசு பேரவையின் உறுப்பினர்களின் உச்ச நம்பிக்கையை பெற்றவர் என ஜனாதிபதி கருதபவரையே அவர் பிரதமராக நியமித்தார்.

- கபினட்டின் ஏனைய உறுப்பினர்களும் இறுதி அமைச்சர்களும் பிரதமரின் ஆலோசனையின் பேரில் நாம நிறைவேற்றாளரினால் தேசிய அரசுப் பேரவை உறுப்பினர்களிலிருந்து நியமிக்கப்பட்டனர். இதன் பிரகாரம் 1972 யாப்பின் கீழ் இருந்த உண்மை நிறைவேற்று பகுதி தொடர்பாக தென்பட்ட விசேட பண்பு என்னவெனில் அது தேசிய அரசுப் பேரவை உறுப்பினர்களை மட்டும் கொண்டிருந்தமையாகும்.

- பதவிக்காலம் முடிவுற முன்னர் உண்மை நிறைவேற்றுப் பகுதியை பதவி நீக்கம் செய்யும் இரு வழி முறைகள் யாப்பில் குறிப்பிடப்பட்டிருந்தன. அவையாவன
    1. பிரதமரின் வேண்டுகோளின் பேரில் நாம நிறைவேற்றாளரினால் கபினட்டின் உறுப்பினர்கள் தனித்தனியாக பதவி நீக்கப்படுதல் அல்லது பிரதமரின் ஆலோசனையின் பேரில் நாம நிறைவேற்றாளரினால் தேசிய அரசுப் பேரவையை கலைப்பதன் மூலம் முழு கபினட்டையும் பதவி நீக்கம் செய்வதற்கு பிரதமருக்கும் இருந்த அதிகாரம்.

    2. தேசிய அரசு பேரவையின் அதிகாரத்தின் மூலம் பதவி நீக்கம் செய்தல். இதன் கீழ் வருடாந்த வரவு செலவு திட்டத்தை அங்கீகரிக்காமை தேசிய அரசு பேரவையின் முதலாவது தவணையின் போது முன்வைக்கப்படும் அரச கொள்கை பிரகடனத்தை அங்கீகரிக்காமை உண்மை நிறைவேற்று பகுதிக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றை நிறைவேற்றுதல் என்பவற்றின் மூலம் உண்மை நிறைவேற்றுப் பகுதியை பதவி நீக்கம் செய்யும் அதிகாரத்தை தேசிய அரசு பேரவை பெற்றிருந்தது.

- அரசியல் யாப்பின் பிரகாரம் நாட்டின் ஆட்சியும் வழிப்படுத்தலும் பற்றிய பொறுப்பு உண்மை நிறைவேற்றுப் பகுதியிடமே ஒப்படைக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக உண்மை நிறைவேற்றுப் பகுதி தேசிய அரசுப் பேரவைக்கு கூட்டாக பொறுப்புக் கூறவும் பதில் கூறவும் கடமைப்பட்டிருந்தது. இக்கடப்பாட்டின் மூலம் பிறிதொரு விடயம் வெளிப்பட்டது. அதாவது தேசிய அரசுப் பேரவையின் உச்ச நம்பிக்கையை பெற்றிருக்கும் வரை மட்டுமே உண்மை நிறைவேற்று பதவியில் தங்கியிருக்கக் கூடியதாக இருந்தது என்பதாகும்.

- 1972 யாப்பின் கீழ் உண்மை நிறைவேற்றுப் பகுதியின் தலைவரான பிரதமர் தனித்துவமான நிலையினை பெற்றிருந்ததை காண முடிந்தது. அதன் பிரகாரம் பிரதமர் செயற்பாட்டு நிறைவேற்றாளராக செயலாற்றினார். அவர் கபினட்டினதும் அரசாங்கத்தினதும் தலைவராக இருந்தார். அதனால் நாடு உள்வாரியாகவும் வெளிவாரியாகவும் எத்திசையை நோக்கி பயணிக்க வேண்டும் என்பதனை பிரதமரே தீர்மானித்தார். போர் மற்றும் சமாதானத்தை பிரகடனம் செய்தல், தேசிய அரசுப் பேரவையை கூட்டுதல், ஒத்திவைத்தல் மற்றும் கலைத்தல், உண்மை நிறைவேற்றுப் பகுதியின் ஏனைய அமைச்சர்களையும் பிரதி அமைச்சர்களையும் நியமித்தல், அரசியல் யாப்பு நீதிமன்றில் நீதியரசர்களையும் மேன்முறையீட்டு நீதிமன்றினதும் உயர் நீதிமன்றினதும் நீதியரசர்களை நியமித்தல். வெளிநாட்டு தூதுவர்களை வரவேற்றல், வெளிநாட்டு தூது வர்களையும் உயர் ஸ்தானிகர்களையும் ஏனைய அரச தூதுவர்களையும் நியமித்தல் குற்றவாளிகளுக்கு மன்னிப்பளித்தல் ஆகிய அதிகாரங்களை நாம நிறைவேற்றாளரே நிறைவேற்றினார் என்று வெளிவாரியாக தென்பட்டாலும் உண்மையில் சகல அதிகாரங்களையும் நிறைவேற்றியவர் பிரதமரே ஆவார்.

- 1972 யாப்பின் பிரகாரம் உண்மை நிறைவேற்றுப் பகுதி சட்டத்துறையிலிருந்து நியமிக்கப்பட்டது. அதன் விளைவாக உண்மை நிறைவேற்றுப் பகுதி சட்டத்துறைக்குப் பொறுப்புக்கூற கடமைப்பட்டிருந்தது. அப்பொறுப்பு மீறப்படின் நம்பிக்கையில்லா பிரேரணை ஒன்று நிறைவேற்றப்படுவதன் மூலம் உண்மை நிறைவேற்றுப் பகுதியை பதவியகற்றும் அதிகாரத்தை சட்டத்துறை பெற்றிருந்தது. மறுபுறம் சட்டத்துறையினை தாம் விரும்பும் எந்த சந்தர்ப்பத்திலும் கலைத்து விடுவதற்கு உண்மை நிறைவேற்று பகுதியின் தலைவரான பிரதமர் அதிகாரம் பெற்றிருந்தார். இந்த நெருங்கிய தொடர்பின் மூலம் நிறைவேற்றுத் துறைக்கும் சட்டத்துறைக்கும் இடையில் நெருங்கிய வகையில் ஒன்றிலொன்று தங்கியிருந்தமையையும் ஒன்றின் ஒத்துழைப்பு இன்றி மற்றையதிற்கு இருப்பு கிடையாது என்பதையும் அறிந்து கொள்ள முடிந்தது.

- 1972 யாப்பின் கீழ் நிரந்தர நிர்வாகம் தொடர்பாகவும் உண்மை நிறைவேற்றுப் பகுதி குறிப்பிடதக்க அதிகாரத்தை பெற்றிருந்தது. நிரந்தர நிர்வாகத்தின் உத்தியோகத்தர்களை நியமித்தல், இடமாற்றம் செய்தல், ஒழுக்கக் கட்டுப்பாடு மற்றும் பதவி நீக்கம் செய்தல் ஆகிய விடயங்கள் தொடர்பான அதிகாரங்களையும் பொறுப்புக்களையும் உண்மை நிறைவேற்றுப் பகுதியே பெற்றிருந்தது.

**முடிவுரை**

மேற்குறிப்பிட்ட விடயங்களின் மூலம் 1972 யாப்பின் கீழ் தாபிக்கப்பட்ட அரசியல் நிறுவனங்களுள் உண்மை நிறைவேற்று பகுதிக்கு தனித்துவமான நிலை கிடைக்கப்பெற்றிருந்தது என தெரிகின்றது. உண்மையிலேயே அரசாங்க முறையின் தளபதியாக உண்மை நிறைவேற்றுப் பகுதியே திகழ்ந்தது. உண்மை நிறைவேற்றுப் பகுதியே அரசாங்கத்தை கட்டுப்படுத்தி வழிப்படுத்தியது. மேலும் அரசாங்க முறையின் ஏனைய அரசியல் நிறுவனங்களான நாம நிறைவேற்றாளர் மற்றும் தேசிய அரசுப் பேரவை என்பவை உண்மை நிறைவேற்றுப் பகுதியின் வெளிப்படுத்தலுக்குட்பட்டே செயற்பட்டன. அதுமட்டுமன்றி உண்மை நிறைவேற்றுப்பகுதியின் வழிப்படுத்தலின் கீழேயே நிரந்தர நிர்வாகமும் செயற்பட்டது. இவற்றின் மூலம் 1972 யாப்பின் கீழ் தாபிக்கப்பட்ட அரசாங்க முறையில் உண்மை நிறைவேற்றுப் பகுதி எந்தளவு பலம் வாய்ந்ததாக இருந்தது என்பதை அவதானிக்க முடிந்தது.

## (iii) சோல்பரி யாப்பு மற்றும் 1972 யாப்பின் கீழ் சட்டத்துறை

**நோக்கம்**

அரசாங்க முறையொன்றில் சட்டவாக்கம் செய்யும் நிறுவனம் சட்டத்துறை என்று அழைக்கப்படுகிறது. எனினும் சட்டவாக்கத்திற்கு மேலதிகமாக வேறும் சில பணிகளையும் தற்கால சட்டத்துறைகள் நிறைவேற்றுகின்றன. இந்தபணிகளின் இயல்பானது சட்டத்துறைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரமே நிர்ணயிக்கப்படுகின்றது. சட்டத்துறையானது பாரிய நிறுவனமாக அமைவதுடன் பொதுவாக மக்கள் தேர்தல்களினால் தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களையே கொண்டிருக்கும். இதன் மூலம் சட்டத் துறைகளின் செயற்பாடுகளில் அவற்றின் அமைவுச் சேர்க்கை மற்றும் ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் என்பவை நிர்ணயமான பாதிப்பினை செலுத்துகின்றன என்பதாகும். இவ்வினாவின் நோக்கம் சோல்பரி அரசியல் யாப்பிலும் 1972 முதலாம் குடியரசு யாப்பிலும் ஸ்தாபிக்கப்பட்டிருந்த சட்டத்துறைகளின் நிலையினை மேற்குறிப்பிட்ட பிரதான விடயங்களின் அடிப்படையில் ஒப்பீட்டு ரீதியாக பகுப்பாய்வு செய்வதற்குள்ள பரீட்சார்த்திகளின் திறமையை அளவிட்டறிவதாகும்.

**விடையில் உள்ளடக்கப்பட வேண்டிய பிரதான பகுதிகள்**

| | | |
|---|---|---|
| (அ) | ஒழுங்கமைப்பு கட்டமைவு மற்றும் அமைவுச்சேர்கை | 02 புள்ளிகள் |
| (ஆ) | பதவிக்காலமும் பதிவியகற்றப்படுதலும் | 02 புள்ளிகள் |
| (இ) | அதிகாரங்களும் பணிகளும் | 04 புள்ளி |
| (ஈ) | முடிவுரை | 02 புள்ளிகள் |

மாதிரி விடை

- 1948 சோல்பரி யாப்பு, 1972 முதலாம் குடியரசு யாப்பு ஆகியவற்றின் கீழ் கபினட் அரசாங்க முறைமையே செயற்பட்டது. எனினும் அவ்விரு யாப்புகளின் கீழ் தாபிக்கப்பட்ட இரண்டு சட்டத்துறைகளும் அவற்றின் ஒழுங்கமைப்புக் கட்டமைவு, அமைவுச் சேர்க்கை, அதிகாரங்கள் மற்றும் பணிகள் என்பற்றின் பிரகாரம் ஒன்றில் இருந்து மற்றயது வேறுபட்டது.

- 1948 சோல்பரி யாப்பின் கீழ் தாபிக்கப்பட்ட சட்டத்துறை பாராளுமன்றம் என்று அழைக்கப்பட்டது. 1972 முதலாம் குடியரசு யாப்பின் கீழ் தாபிக்கப்பட்ட சட்டத்துறை தேசிய அரசுப் பேரவை என்று அழைக்கப்பட்டது. சோல்பரி யாப்பின் கீழ் இருந்த பாராளுமன்றம் இரு மன்றுகளைக் கொண்டமைந்திருந்தது. அவை மக்கள் பிரதிநிதிகள் சபை என்றும் செனட் சபை என்றும் அழைக்கப்பட்டன. சாதாரண நடைமுறையில் அவை முறையே கீழ்மன்றம் மற்றும் மேல் மன்றம் என்றும் அழைக்கப்பட்டன. 1972 யாப்பின் கீழ் தனிமன்ற சட்டத்துறையே தாபிக்கப்பட்டது. மேற்குறிப்பிட்டவாறு அது தேசிய அரசுப் பேரவை என்று அழைக்கப்பட்டது.

- 1948 யாப்பின் கீழ் தாபிக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் சபை இரு வகையான உறுப்பினர்களை கொண்டிருந்தது. ஒரு பகுதியினர் எளிய பெரும்பான்மை முறையின் கீழ் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் ஆவர். அவ்வுறுப்பினர்களின் எண்ணிக்கை தேர்தல் தொகுதி நிர்ணய ஆணைக்குழு தேர்தல் தொகுதிகளை பிரிக்கும் முறையின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டது. 10 வருடங்களுக்கு ஒருமுறை எடுக்கப்படும் குடிசன கணிப்பீட்டின் பிரகாரம் இந்த நிர்ணயம் மேற்கொள்ளப்பட்டது. அதன் பிரகாரம் குடிசன மதிப்பீட்டின் பின்னர் மக்கள் பிரதிநிதிகள் சபையின் மக்களால் தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கை மாற்றமுற்றது. ஏனைய உறுப்பினர்களின் வகையாவது மகா தேசாபதியால் நியமிக்கப்படும் உறுப்பினர்களாவர். யாப்பின் பிரகாரம் அவர்களின் எண்ணிக்கை 6 ஆகும்.

- சோல்பரி சட்டத்துறையின் இரண்டாம் மன்றமான செனேட் சபை 30 உறுப்பினர்களைக் கொண்டிருந்தது அவர்களுள் 15 பேர் பிரதமரின் ஆலோசனையின் பேரில் மகாதேசாதிபதியால் நியமிக்கப்பட்டதுடன் எஞ்சிய 15 பேரும் பாராளுமன்றில் பிரதிநிதித்துவம் பெற்ற அரசியல் கட்சிகளினால் தனிமாற்று வாக்கு முறைமையின் மூலம் தெரிவு செய்யப்பட்டனர். செனேட் சபையானது தொடர்ச்சியாக செயற்பட்டதுடன் மொத்த உறுப்பினர்களுள் 1 / 3 பகுதியினர் 2 வருடங்களுக்கு ஒரு புதிதாக தெரிவுசெய்யப்பட்டனர்.

- 1972 யாப்பின் கீழ் தாபிக்கப்பட்ட தேசிய அரசுப் பேரவையானது தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களை மட்டுமே கொண்டிருந்தது. அவ்வுறுப்பினர்கள் பிரதேசவாரியான தொகுதிகளிலிருந்து எளிய பெரும்பான்மை முறையின் மூலம் தெரிவு செய்யப்பட்டனர். யாப்பின் பிரகாரம் 10 வருடங்களுக்கொரு முறை மேற்கொள்ளப்படும் குடிசன மதிப்பீட்டின் அடிப்படையில் தேர்தல் தொகுதிகள் மறுநிர்ணயம் செய்யப்பட்டது. இறுதியாக நடைபெற்ற குடிசன மதிப்பீட்டின் பிரகாரம் 1977 இல் அம்மன்றம் 168 உறுப்பினர்களைக் கொண்டிருந்தது.

- சோல்பரி யாப்பில் சட்டத்துறையின் பதவிக்காலம் 5 வருடங்களாகவும் 1972 யாப்பில் சட்டத்துறையின் பதவிக்காலம் 6 வருடங்களாகவும் அமைந்திருந்தன. இரண்டு சட்டத்துறைகளும் குறைந்த பட்சம் வருடத்திற்கொரு முறையாவது கூட வேண்டும். யாப்பின் பிரகாரம் அச்சட்டத்துறைகளை குறிப்பிட்ட பதவிக்காலம் முடிவுறுவதற்கு முன்னர் கலைக்கக்கூடியதாக இருந்ததுடன் பிரதமரின் வேண்டுகோளின் பேரின் நாம நிறைவேற்றாளரினால் அவ்வாறு கலைக்க முடிந்தது.

- ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்களின் பிரகாரமும் இரு சட்டத்துறைகளும் ஒன்றுக்கொன்று வேறுபட்டன. சட்டவாக்க அதிகாரம் என்பதன் பொருள் சட்டவாக்கம் செய்வதற்கு உள்ள அதிகாரமாகும். சோல்பரி யாப்பின் உறுப்புரை 29 (1) இன் பிரகாரம் "இலங்கைத் தீவின் அமைதி, பாதுகாப்பு மற்றும் நல்லாட்சிக்காக சட்டவாக்கம் செய்வதற்கு பாராளுமன்றுக்கு அதிகாரம் இருந்தது" இவ்வாறு குறிப்பிடப்பட்டாலும் பாராளுமன்றின் சட்டவாக்க அதிகாரத்தின் மீதான 3 வரையறைகள் யாப்பின் மூலமே விதிக்கப்பட்டது.

1. உறுப்புரை 29 (2) இன் அ – ஈ வரையிலான உப பிரிவுகள் சட்டவாக்க அதிகாரத்தைக் கட்டுப்படுத்தின.
   அ. சமயம் ஒன்றைச் சுதந்திரமாக வழிபடுவதை தடை செய்யும் அல்லது வரையறை செய்யும் சட்டமொன்றையோ அல்லது
   ஆ. ஒரு ஜனக்குழுவையோ சமயத்தையோ சேர்ந்த ஆட்களை வேறும் ஜனக்குழுவையோ சமயத்தையோ சேர்ந்த ஆட்கள் மீது பாதிப்பு செலுத்தாத வரையறைகளுக்குட்படுத்தும் சட்டம் ஒன்றையோ அல்லது
   இ. ஒரு ஜனக்குழுவையோ சமயத்தையோ சேர்ந்த ஆட்களுக்கில்லாத சலுகையையோ நன்மையையோ வேறும் ஜனக்குழுவையோ சமயத்தையோ சேர்ந்த ஆட்களிற்கு பெற்றுக்கொடுக்கும் சட்டமொன்றையோ அல்லது
   ஈ. சமய நிறுவனமொன்றின் ஆளுநர் சபையின் அங்கீகாரம் இன்றி அந்நிறுவனத்தின் அமைவினை மாற்றும் சட்டம் ஒன்றையோ

   ஆக்கும் அதிகாரம் பாராளுமன்றுக்கு வழங்கப்படவில்லை உறுப்புரை 29 ( 3 ) இன் பிரகாரம் அவ்வாறான சட்டங்கள் செல்லுபடியற்றனவாகும்.

2. நீதி புனராய்வு அதிகாரம்

   அதன் பொருள் சட்டத்துறையினால் ஆக்கப்படும் சட்டங்கள் அரசியல் யாப்புக்கு இசைவானவையா? இல்லையா? என்பதை பரீட்சிப்பதற்கும் இசைவற்றவையாயின் அவற்றை ரத்து செய்வதற்கும் நீதிமன்றுக்கு அதிகாரம் உண்டு என்பதாகும். சோல்பரி யாப்பின் கீழ் இவ்வதிகாரமானது முதலில் இலங்கையின் உயர் நீதிமன்றுக்கும் இறுதியில் பிரித்தானிய கோமறைக் கழகத்திற்கும் உரித்தாக்கப்பட்டிருந்தது. இவ்வதிகாரம் தொடர்பான சிறந்த எடுத்துக்காட்டு 1962 அரசுக்கெதிரான புரட்சிச் சதி வழக்குத் தீர்ப்பாகும்.

3. சோல்பரி யாப்பின் இரண்டாம் உறுப்புரை

   இலங்கைப் பாராளுமன்றம் வேண்டுகோள் விடுப்பின் இலங்கை தொடர்பாக சட்டவாக்கம் செய்வதற்கு பிரித்தானியப் பாராளுமன்றத்திற்கு அதிகாரம் உண்டு என இவ்வுறுப்புரை குறிப்பிட்டது.

- மேற்குறிப்பிட்ட ஏற்பாடுகளின் மூலம் சோல்பரி பாராளுமன்றின் சட்டவாக்க அதிகாரமானது வரையறுக்கப்பட்டதோடு பாராளுமன்றின் இறைமைக்கும் அதன் மூலம் தீங்கு விளைவிக்கப்பட்டது.

- 1972 யாப்பின் கீழ் தேசிய அரசு பேரவையானது பாராளுமன்றின் இறைமை என்ற கோட்பாட்டின் அடிப்படையில் தாபிக்கப்பட்டிருந்தது. அக்கோட்பாட்டின் பிரகாரம் பாராளுமன்றின் அதிகாரமானது தன்னிகரற்றதாகவும் அதற்கு நிகரான அல்லது சவால் விடுக்கக் கூடிய வேறும் அதிகாரம் இல்லை என்றும் அவ்வதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டு பாராளுமன்றுக்கு எந்த சட்டத்தையும் ஆக்க முடியும் என்றும் அச்சட்டங்களை எந்த நீதிமன்றின் முன்னிலையிலும் சவாலுக்குட்படுத்த முடியாது என்றும் பாராளுமன்றின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்துகின்ற சட்டவாக்கம் செய்யும் அதிகாரத்தை வேறும் நிறுவனங்களுக்கு இல்லை என்றும் கூறப்பட்டது.

- இதன்படி தேசிய அரசுப் பேரவை எந்தவொரு சட்டத்தையும் ஆக்குவதற்கும் இல்லாதொழிப்பதற்கும் அதிகாரம் பெற்றிருந்ததுடன் அதனை யாப்பின் 3, 4, 5, 44, 45 மற்றும் 48.2 ஆகிய உறுப்புரைகள் உறுதிப்படுத்தின. இந்த உறுப்புரைகள் இலங்கைக் குடியரசின் இறைமை மக்களுக்குரியதாகும் என்றும் அவ்வதிகாரத்தை மக்களால் தெரிவு செய்யப்பட்ட தேசிய அரசுப் பேரவையினூடாகப் பிரயோகிக்க வேண்டும் என்றும் அதன் பிரகாரம் தேசிய அரசுப் பேரவையின் சட்டவாக்க அதிகாரம் உயர்தன்மை வாய்ந்தது என்றும் தேசிய அரசுப் பேரவைக்கு எந்தவொரு சட்டத்தையும் ஆக்க முடியும் என்றும் அச்சட்டங்களை எந்த நீதிமன்றிலும் கேள்விக்குட்படுத்த முடியாது என்றும் கூறுகின்றனர்.

- 1972 யாப்பின் கீழ் தேசிய அரசுப் பேரவையின் அங்கீகாரத்திற்காக முன்வைக்கப்படும் மசோதாக்களின் யாப்புறு தன்மையை பரீட்சித்துப் பார்க்கும் அதிகாரம் அரசியல் யாப்பு நீதிமன்றுக்கு உரித்தாக்கப்பட்டிருந்தாலும் அம்மசோதா நிறைவேற்றப்பட்டு சட்டமாகியதன் பின்னர் அதனைப் பற்றி கேள்வியெழுப்புவதற்கு எந்தவொரு நீதிமன்றுக்கும் அதிகாரம் வழங்கப்படவில்லை.

- இதன் பிரகாரம் சோல்பரி யாப்பு போலன்றி 1972 யாப்பின் கீழ் தேசிய அரசுப் பேரவையின் சட்டவாக்க அதிகாரமானது உயர்தன்மை பொருந்தியதாக இருந்ததோடு அம்மன்றம் இறைமை பொருந்திய ஒரு நிறுவனமாக விளங்கியது.

முடிவுரை

மேற்குறிப்பிட்ட விடயங்களிலிருந்து 1948 மற்றும் 1972 யாப்புகளின் கீழ் கபினட் மாதிரியிலான அரசாங்க முறை செயற்பட்டாலும் அவற்றின் கீழ் இருந்த 2 சட்டத்துறைகளும் ஒழுங்கமைப்பு கட்டமைவு அமைவுச் சேர்க்கை மற்றும் அதிகாரங்கள் ஆகிய சகல விடயங்களின் அடிப்படையில் ஒன்றுக்கொன்று வேறுபட்டன எனத் தெரிகின்றது.

**வினா இலக்கம் 08 :**

**1978 அரசியல் யாப்பின் மீதான பின்வரும் திருத்தங்களில் எவையேனும் இரண்டின் அடிப்படைப் பண்புகளைக் குறிப்பிடுக.**

**(i) 2001 ஆம் ஆண்டின் 17 ஆம் திருத்தம்**
**(ii) 2010 ஆம் ஆண்டின் 18 ஆம் திருத்தம்**
**(iii) 2015 ஆம் ஆண்டின் 19 ஆம் திருத்தம்**

**(10 × 2 = 20 புள்ளிகள் )**

**(i) 2001 ஆம் ஆண்டின் 17 ஆம் திருத்தம்**

**நோக்கம்**

1978 இரண்டாம் குடியரசு யாப்பின் கீழ் தாபிக்கப்பட்ட நிறைவேற்று ஜனாதிபதி பதவி தொடர்பான விமர்சனமானது ஜனநாயக ஆடை போர்த்தப்பட்ட சர்வாதிகார பதவி என்பதாகும். குறிப்பாகஅரசின் உயர் பதவிகளுக்கான நியமனங்கள் தொடர்பாக ஜனாதிபதிக்கு இருந்த தற்துணிபு அதிகாரத்தை நடைமுறைப்படுத்தும்போது ஜனாதிபதிகள் தன்னிச்சையான முறையில் அவ்வதிகாரத்தை பிரயோகித்ததன் காரணமாக பகிரங்க சேவை, நீதித்துறை மற்றும் பொலிஸ் ஆகிய அரச சேவைகளின் சுயாதீனத் தன்மையும் பக்கச்சார்பற்ற தன்மையும் இல்லாதொழிந்து அவை வேகமாக அரசியல் மயமாக்கத்திற்குட்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதாகும். இந்நிலையினை தடை செய்யும் நோக்கில் 2001 இல் அரசியல் யாப்பின் மீது 17 ஆம் திருத்தம் கொண்டு வரப்பட்டது. இவ்வினாவின் நோக்கம் 17 ஆம் திருத்தத்தை கொண்டு வருவதற்கான யாப்பு பின்னணியையும் அத்திருத்தத்தில் உள்ளடக்கப்பட்ட பிரதான தடைகளையும் பற்றி பரீட்சார்த்திகளின் அறிவையும் புரிதலையும் அளவிட்டறிவதாகும்.

**விடையில் உள்ளடக்கப்பட வேண்டிய பிரதான பகுதிகள்**

| | | |
|---|---|---|
| (அ) | 17 ஆம் யாப்பு திருத்தத்தின் மீது பாதிப்புச் செலுத்திய யாப்புப் பின்னணி | 03 புள்ளிகள் |
| (ஆ) | 17 ஆம் யாப்பு திருத்தத்தின் பிரதான அம்சங்கள் | 05 புள்ளிகள் |
| (இ) | முடிவுரை | 02 புள்ளிகள் |

**மாதிரி விடை**

- 1978 முதலாம் குடியரசு யாப்பின் மூலம் தாபிக்கப்பட்ட நிறைவேற்று ஜனாதிபதி பதவி அரசியல் யாப்பின் மூலம் ஜனநாயகம் என்ற திரைக்கு மறைந்து தாபிக்கப்பட்ட சர்வாதிகார தன்மை பொருந்தியதாக அமைந்தது என அப்பதவி தாபிக்கப்பட்ட தினத்திலிருந்து குறைகூறப்பட்டது.

- குறிப்பாக அரசாங்கத்தின் உயர் பதவிகளுக்கான நியமனங்களை எவ்வித தடைகளும் இன்றி மேற்கொள்வதற்கு ஜனாதிபதிக்கு அதி அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது என்று அறிஞர்கள் விமர்சித்தனர்.

- 1978 இலிருந்து தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதிகள் இவ்வதிகாரத்தை பயங்கரமான முறையில் துஸ்பிரயோகம் செய்வதற்கு தூண்டப்பட்டதோடு அதன் விளைவாக பகிரங்க சேவை, பொலிஸ் மற்றும் நீதித்துறை என்பன வேகமாக அரசியல் மயமாக்கத்திற்கு உட்பட்டு அவற்றின் சுயாதீனத் தன்மையும் பக்கச்சார்பற்ற தன்மையும் இல்லாதொழிந்தன.

- இந்த அனுபவங்களின் மூலம் ஏற்பட்டுள்ள நிலையானது ஜனநாயக ஆட்சிக்கு பொருத்தமற்றதாகவுள்ளது என்றும் ஜனநாயக ஆட்சியை கீழ்ப்படுத்தி வேகமான முறையில் நாட்டில் சர்வதிகார ஆட்சி உருவாகிக்கொண்டிருக்கின்றது என்றும் தென்படலாயிற்று.

- இந்நிலையினைக் கட்டுப்படுத்தி பகிரங்க சேவை, பொலிஸ் மற்றும் நீதித்துறை என்பவற்றின் சுயாதீனத்தை பாதுகாத்து பேணுவதோடு தேர்தல் செயன்முறையை சுயாதீனமாக கொண்டு நடாத்துவதற்கு ஜனாதிபதியின் சில நிறைவேற்று அதிகாரங்களை தடைகளுக்கு உட்படுத்த வேண்டும் என தெளிவாக தென்படலாயிற்று.

- இந்த நோக்கினை இலக்காகக் கொண்டே 2001 ஒக்டோபர் 3 ஆம் திகதி 17 ஆம் திருத்தச் சட்டம் பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்டது. இந்த திருத்தச் சட்டத்தின் விசேட பண்பு என்னவெனில் பாராளுமன்றினை பிரதிநிதித்துவப்படுத்திய சகல அரசியல் கட்சிகளும் ஏகமனதாக அங்கீகரித்தமை ஆகும்.

- 17 ஆம் திருத்த சட்டத்தின் கீழ் யாப்பின் மீது கொண்டு வரப்பட்ட பிரதான மாற்றங்கள் பின்வருமாறு
    1. நிறைவேற்று ஜனாதிபதியின் தீர்மானம் எடுக்கும் அதிகாரத்தை வரையறைக்கும் வகையில் அரசியல் அமைப்பு பேரவை தாபிக்கப்பட்டமை. இப்பேரவை 10 உறுப்பினர்களைக் கொண்டிருந்தது. சபாநாயகரே அதன் தலைவராக இருந்தார். பிரதமர், எதிர்கட்சித்தலைவர், ஜனாதிபதியின் பிரதிநிதி ஒருவர், பிரதமராலும் எதிர்கட்சித் தலைவராலும் பெயர் குறிக்கப்பட்டு ஜனாதிபதியால் நியமிக்கப்படும் 5 உறுப்பினர்கள், பாராளுமன்றிலுள்ள சிறிய கட்சிகளினால் பெயர் குறிக்கப்பட்டு ஜனாதிபதியால் நியமிக்கப்படும் உறுப்பினர் ஒருவர் என்போர் அதன் ஏனைய உறுப்பினர்கள் ஆவார்.

**அரசியல் அமைப்புப் பேரவை 2 பணிகளைக் கொண்டிருந்தது**

i. பின்வரும் சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு நியமிக்க வேண்டிய ஆட்களின் பெயர்களை ஜனாதிபதிக்கு சிபாரிசு செய்தல்.

அ. தேர்தல் ஆணைக்குழு
ஆ. பகிரங்கசேவை ஆணைக்குழு
இ. தேசிய பொலிஸ் ஆணைக்குழு
ஈ. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு
உ. இலஞ்சம் அல்லது ஊழல் விசாரணை ஆணைக்குழு
ஊ. நிதி ஆணைக்குழு
எ. எல்லை நிர்ணய ஆணைக்குழு

ii. அரசியல் யாப்பு சபையினால் அங்கீகரிக்கப்படவேண்டிய நியமனங்கள்

அ. பிரதம நீதியரசர் மற்றும் உயர் நீதிமன்றின் ஏனைய நீதியரசர்கள்
ஆ. மேன்முறையீட்டு நீதிமன்றின் தலைவரும் ஏனைய நீதியரசர்களும்
இ. நீதிசேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்கள்
ஈ. சட்டமா அதிபர்
உ. கணக்காய்வாளர் நாயகம்
ஊ. பொலிஸ்மா அதிபர்
எ. ஒம்புட்ஸ்மன்
ஏ. பாராளுமன்றின் செயலாளர் நாயகம்

2. ஏற்கனவே இருந்த சில ஆணைக்குழுக்களுக்கு மேலதிக அதிகாரங்கள் பெற்றுக்கொடுக்கப்பட்டன.
உதாரணம் : நீதிசேவை ஆணைக்குழு
பகிரங்கசேவை ஆணைக்குழு

3. நிர்வாக மேன்முறையீட்டு சபை என்ற நிறுவனம் தாபிக்கப்பட்டமை.

4. புதிய சில ஆணைக்குழுக்கள் தாபிக்கப்பட்டமை.
உதாரணம் : தேசிய பொலிஸ் ஆணைக்குழு மற்றும் தேர்தல் ஆணைக்குழு

**முடிவுரை**

மேற்குறிப்பிடப்பட்டவை 17 ஆம் திருத்தச் சட்டத்தின் பிரதான அம்சங்களாகும். எனினும் அரசியல் காரணங்களால் எதிர்பார்த்த பெறுபேறுகளை பெற்றுக்கொள்ள முடியவில்லை. திருத்தச் சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்ட முக்கிய நிறுவனமான அரசியல் அமைப்பு பேரவையின் உறுப்பினர்கள் நியமிக்கப்படாமையின் காரணமாக 2005 ஆகும் போது அது முழுமையாக செயற்பாடற்ற நிலைக்கு தள்ளப்பட்டது. தேர்தல் ஆணைக்குழு எந்த தினத்திலும் நியமிக்கப்படவில்லை.

## (ii) 2010 ஆம் ஆண்டின் 18 ஆம் திருத்தம்

**நோக்கம்**

2010 இல் யாப்பின் மீது கொண்டு வரப்பட்ட 18 ஆம் திருத்தத்தின் மூலம் 17 ஆம் திருத்தத்தினால் ஜனாதிபதியின் மீது விதிக்கப்பட்டிருந்த சகல தடைகளும் நீக்கப்பட்டது மட்டுமன்றி 1978 மூல யாப்பின் சில உறுப்புறுரைகள் கூட ஜனாதிபதியின் அதிகாரத்தை மேலும் அதிகரிக்கும் வகையில் மாற்றப்பட்டன. அறிஞர்கள் இந்த திருத்தத்தினை சர்வாதிகாரத்திலிருந்து உச்ச சர்வாதிகாரத்திற்கு செல்லும் முயற்சியாகும் என்று குறிப்பிட்டனர். இவ்வினாவின் நோக்கம் இந்நிலை தொடர்பாக பரீட்சார்த்திகள் வகிக்கும் அபிப்பிராயத்தை பற்றி பரீட்சிப்பதாகும்.

**விடையில் உள்ளடக்கப்பட வேண்டிய பிரதான பகுதிகள்**

(அ) 18 ஆம் திருத்தத்தின் பிரதான அம்சங்கள் 05 புள்ளிகள்

(ஆ) 18 ஆம் திருத்தத்தின் விளைவுகள் 03 புள்ளிகள்

(இ) முடிவுரை 02 புள்ளிகள்

**மாதிரி விடை**

- 18 ஆம் திருத்தம் பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்டு 2010 செப்டெம்பர் 08 ஆம் திகதி சபாநாயகரின் இறுதி அங்கீகாரம் கிடைக்கப் பெற்றது. அத்திருத்தத்தின் மூலம் அரசியல் யாப்புக்கு 3 பிரதான மாற்றங்கள் செய்யப்பட்டன.
  1. ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவது தொடர்பாக நியமிக்கப்பட்ட இரண்டு தவணைகள் என்ற வரையறை நீக்கப்பட்டமை.
  2. அரசியல் யாப்பின் மீது கொண்டு வரப்பட்ட 17 ஆம் திருத்த சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட அரசியலமைப்புப் பேரவை இல்லாதொழிக்கப்பட்டு அதற்குப் பதிலாக அதிகாரம் குறைந்த பாராளுமன்றப் பேரவை நியமிக்கப்பட்டு ஜனாதிபதியின் அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டமை.
  3. சுயாதீன ஆணைக்குழுக்களின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டமை.

**பாராளுமன்றப் பேரவை**

- அரசியல் அமைப்பு பேரவை இல்லாதொழிக்கப்பட்டு அதற்குப் பதிலாக 18 ஆம் திருத்தச் சட்டத்தின் கீழ் பாராளுமன்றப் பேரவை தாபிக்கப்பட்டது. அது பின்வரும் 5 உறுப்பினர்களைக் கொண்டமைந்திருந்து.
  1. பிரதமர்
  2. சபாநாயகர்
  3. எதிர்கட்சித்தலைவர்
  4. பிரதமரால் பெயர் குறிக்கப்படும் பாராளுமன்ற பிரதிநிதி ஒருவர்
  5. எதிர்கட்சித் தலைவரால் பெயர் குறிக்கப்படும் பாராளுமன்ற பிரதிநிதி ஒருவர்

- முன்னர் நிலவிய அரசியலமைப்பு பேரவையோடு பாராளுமன்ற பேரவையை ஒப்பிடுகையில் பின்வரும் பிரதான மாற்றங்களைக் காணமுடிந்தது.
  i. அரசியல் அமைப்பு பேரவையின் 10 உறுப்பினர்களுள் 7 பேர் பாராளுமன்றினை பிரதிநிதித்துவப் படுத்தாத சிவில் சமூக உறுப்பினர்களாக இருந்தனர். ஆனால் பாராளுமன்றப் பேரவையின் 5 உறுப்பினர்களும் பாராளுமன்றின் உறுப்பினர்களாவார்.

  ii. ஜனாதிபதியினால் மேற்கொள்ளப்படும் நியமனங்கள் தொடர்பான சிபாரிசு செய்வதற்கும் அங்கீகரிப்பதற்கும் அரசியலமைப்புப் பேரவை பெற்றிருந்த அதிகாரம் பாராளுமன்றப் பேரவைக்கு வழங்கப்படவில்லை.

- 18 ஆம் திருத்தத்தின் பிரகாரம்

அ. தேர்தல் ஆணைக்குழு
ஆ. பகிரங்க சேவை ஆணைக்குழு
இ. தேசிய பொலிஸ் ஆணைக்குழு
ஈ. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு
உ. ஊழல்கள் அல்லது இலஞ்ச விசாரணை ஆணைக்குழு
ஊ. நிதி ஆணைக்குழு
எ. எல்லை நிர்ணய ஆணைக்குழு

போன்றவற்றுக்கான உறுப்பினர்களை நியமிக்கும் போது ஜனாதிபதி பாராளுமன்றப் பேரவையின் அவதானத்தினைக் கோர வேண்டும். அதேபோன்று

அ. பிரதம நீதியரசர் மற்றும் உயர் நீதிமன்றின் நீதியரசர்கள்
ஆ. மேன்முறையீட்டு நீதிமன்றின் தலைவர் மற்றும் ஏனைய நீதியரசர்கள்
இ. நீதி சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்கள்
ஈ. சட்டமா அதிபர்
உ. கணக்காய்வாளர் நாயகம்
ஊ. ஒம்புட்ஸ்மன்
எ. பாராளுமன்றின் செயலாளர் நாயகம்

போன்றோரை நியமிக்கும் போது ஜனாதிபதி பாராளுமன்றப் பேவையின் அவதானிப்பினைக் கோர வேண்டும்.

- அவதானிப்பினைக் கோரினாலும் பாராளுமன்றப் பேரவை தமது அவதானிப்பினை முன்வைத்தாலும் ஜனாதிபதி அதற்கு கட்டுப்பட்டவரல்ல. அவதானிப்பினை கவனத்தில் கொள்ளாது ஜனாதிபதி தமது தற்துணிவின் பிரகாரம் தமக்கு தேவையானவாறு இப்பதவி நியமனங்களை மேற்கொள்ள முடிந்தது.

- 17 ஆம் திருத்தத்தின் கீழ் ஜனாதிபதி பொலிஸ்மா அதிபரை அரசியல் அமைப்பு பேரவையின் அங்கீகாரத்துடனேயே நியமிக்க வேண்டும். எனினும் 18 ஆம் திருத்தத்தின் கீழ் அந்த வரையறை இல்லாதொழிக்கப்பட்டு பொலிஸ்மா அதிபரை நியமித்தல் நேரடியாகவே ஜனாதிபதியின் கீழ் கொண்டு வரப்பட்டது.
18 ஆம் திருத்தத்தின் மேற்கொள்ளப்பட்ட பிறிதொரு பாரதூரமான மாற்றம் என்னவெனில் சுயாதீனமான ஆணைக்குழுக்களுக்கு வழங்கப்பட்டிருந்த அதிகாரங்கள் மிகப் பலமான வகையில் குறைக்கப்பட்டது. இதன் பிரகாரம் தேர்தல் ஆணைக்குழு பகிரங்க சேவை ஆணைக்குழு, தேசிய பொலிஸ் ஆணைக்குழு போன்ற நிறுவனங்களின் அதிகாரங்கள் எல்லையற்றவாறு குறைக்கப்பட்டது.

- இவற்றுள் மிகவும் பாரதூரமான விடயம் என்னவெனில் பகிரங்க சேவை ஆணைக்குழுவுக்கிருந்த அதிகாரங்கள் குறைக்கப்பட்டமையாகும். 17 ஆம் திருத்தத்தின் பிரகாரம் அரச அதிகாரிகள் நியமித்தல், பதவி உயர்த்துதல், இடமாற்றம் செய்தல், ஒழுக்கக் கட்டுப்பாடு மற்றும் பதவி நீக்கம் செய்தல் உள்ளிட்ட அரச உத்தியோகத்தர்கள் தொடர்பான சகல கொள்கைகள் தொடர்பான ஏற்பாடுகளை வகிக்கும் அதிகாரத்தை பகிரங்க சேவை ஆணைக்குழுவே பெற்றிருந்தது. எனினும் 18 ஆம் திருத்தத்தின் கீழ் இவ்வதிகாரங்கள் அமைச்சரவைக்கு வழங்கப்பட்டது.

- இதற்கு மேலதிகமாக 17 ஆம் திருத்தத்தின் கீழ் இலாகா தலைவர்களை நியமித்தல், பதவி உயர்த்துதல், ஒழுக்கக் கட்டுப்பாடு, பதவி நீக்கம் செய்தல் ஆகிய விடயங்கள் தொடர்பாக பகிரங்க சேவை ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டிருந்த அமைச்சரவைக்கு மதியுரை வழங்கும் அதிகாரத்தை 18 ஆம் திருத்தத்தின் கீழ்நேரடியாகவே அமைச்சரவைக்கு ஒப்படைக்கப்பட்டது.

**முடிவுரை**

18 ஆம் திருத்தச் சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட யாப்பு மாற்றங்கள் பற்றிய சுருக்கமே மேலே குறிப் பிடப்பட்டன. இந்த திருத்தத்தை ஜனநாயகவாதிகள் ஜனநாயகத்திற்கு எதிரான பலமான தாக்குதல் என்ற வகையில் பொருள் விளக்கம் செய்தனர். சில விமர்சகர்கள் இந்த திருத்தத்தின் விளைவாக சுயாதீன பகிரங்க சேவை வீழ்ச்சியடைந்தது என சுட்டிக்காட்டினர். நீதித்துறையின் சுதந்திரமும் சட்டத்தின் ஆட்சியும் வீழ்ச்சியுற்றன. சட்டத்துறையானது நிறைவேற்றுத் துறையின் ஆதிக்கத்துக்கு உட்பட்டது. சுயாதீன தேர்தல் முறை வீழ்ச்சியடைந்தது. முழுமையாக எடுப்பின் ஜனநாயகம் பாரதூரமான வகையில் அரிப்புக்குட்பட்டது. இக்குற்றச்சாட்டுகளின் உண்மை, உண்மையற்ற தன்மை எவையாயினும் 18 ஆம் திருத்தச் சட்டம் ஜன நாயகத்தின் முரண்பட்ட தன்மை என இறுதியாக கூற முடியும்.

## (iii) 2015 ஆம் ஆண்டின் 19 ஆம் திருத்தம்

**நோக்கம்**

18 ஆம் திருத்தமானது எதிர்பார்க்கப்பட்டது போன்று நாட்டில் பாரதூரமான அரசியல் சிக்கல்கள் தோன்றுவதில் பலமான பாதிப்புக்களை ஏற்படுத்தின. நாட்டில் நிறைவேற்று சர்வாதிகாரம் தோன்றி யதை தெளிவாக எடுத்துக் காட்டியது. பகிரங்க சேவை, பொலிஸ், நீதித்துறை என்பன வெளிப்படை யாகவே நிறை வேற்றுத் துறையின் கைப்பொம்மைகளாக மாறியதை காண முடிந்தது. இதற்கு சமா ந்தரமான முறையில் நாட்டில் ஊழல்களும் முறைகேடுகளும் நாளுக்கு நாள் அதிகரிக்கலாயின. அரசாங்கத்திற்குஎதிராக சிவில் சமூகத்தின் எதிர்ப்பு நாளுக்கு நாள் உக்கிரமமடைந்தது. இந்த சிக் கல்களுக்கு மத்தியில் 2015 ஜனவரி மாதத்தில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் அதிகாரத்தி லிருந்த ஜனாதிபதி தோல்வியுற்று புதிய ஜனாதி பதி ஒருவர் தெரிவுசெய்யப்பட்டார். புதிய ஜனாதி பதியினாலும் அரசாங்கத்தினாலும் முன்வைக்கப்பட்ட 100 நாள் வேலைத்திட்டத்தில் நாட்டில் ஜனநா யக ரீதியான நல்லாட்சியை தாபிக்க வேண்டும் என்ற விடயம் பிரதான இடத்தைப் பெற்றது. இந்த செயன்முறையின் ஆரம்ப கட்டம் என்ற வகையில் 2015 மே மாத்தில் அரசியல் யாப்புக்கு மேற் கொள்ளப்பட்ட 19 ஆம் திருத்தத்தினைக் குறிப்பிட முடியும். இவ்வினாவின்நோக்கம் மேற்குறிப் பிட்டவாறு 19 ஆம் திருத்தத்தினை கொண்டு வருவதில் பாதிப்புச் செலுத்திய மற்றும் 19 ஆம் திருத் தத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட யாப்பு மாற்றங்கள் பற்றி பரீட்சார்த்திகளின் அறிவையும் புரிதலை யும் பரீட்சிப்பதாகும்.

**விடையில் உள்ளடக்கப்பட வேண்டிய பிரதான பகுதிகள்**

| | | |
|---|---|---|
| (அ) | 19 ஆம் திருத்தத்தின் அரசியல் பின்னணி | 02 புள்ளிகள் |
| (ஆ) | 19 ஆம் திருத்தத்தின் உள்ளடக்கம் | 06 புள்ளிகள் |
| (இ) | முடிவுரை | 02 புள்ளிகள் |

**மாதிரி விடை**

- 17 ஆம் திருத்தத்தின் மூலம் 1978 மூலயாப்பினால் நிர்மாணிக்கப்பட்ட நிறைவேற்று சர்வதிகாரத்தை கட்டுப்படுத்துவதற்கான முயற்சியே மேற்கொள்ளப்பட்டது. 18 ஆம் திருத்தத்தின் மூலம் அந்த முயற்சி பி-ன்தள்ளப்பட்டது. அதன் பெறுபேறாக நாட்டில் பயங்கரமான நிறைவேற்றுச் சர்வதிகாரம் விருத்தியடைய ஆரம்பித்தது.

- இவ்வாறு விருத்தியடைந்த நிறைவேற்று சர்வாதிகாரத்தின் கீழ் நாட்டின் ஜனநாயக ஆட்சி முறையும் ஜன நாயக விழுமியங்களும் பாரதூரமான வகையில் அரிப்புக்குட்பட்டுக்கொண்டுள்ளன என்பது தெளிவாகத் தென்பட்டது.

- இந்த நிலையே கட்டுப்படுத்தி நாட்டில் ஜனநாயகத்தை உறுதிப்படுத்தி பேணும் நோக்கில் 2015 ஜனவரி மாத்தில் ஆட்சிக்கு வந்த நல்லாட்சி அரசாங்கம் 19 ஆம் திருத்தத்தை முன்வைத்தது.

- 19 ஆம் திருத்தத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட பிரதான மாற்றங்களை பின்வருமாறு குறிப்பிடலாம்.
  1. தகவல் அறியும் உரிமை அறிமுகம் செய்யப்பட்டமை.
  2. ஜனாதிபதியின் பதவிக்காலத்தை 5 வருடங்கள் வரை குறைத்தமை.
  3. ஜனாதிபதிப் பதவியை ஒரு நபரினால் 2 தவணைகளுக்கு மட்டுமே வகிக்க முடியும் என்ற ஏற்பாடு மீண்டும் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டமை.
  4. பதவியில் உள்ள ஜனாதிபதி இறந்தால் அல்லது பதவி வெற்றிடமானால் பதில் ஜனாதிபதி பதவி பற்றிய ஏற்பாடு
  5. ஜனாதிபதிக்கு மேலதிகப் பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டமை.
  6. ஜனாதிபதியின் விடுபாட்டுரிமை வரையறுக்கப்பட்டமை.
  7. அரசியல் அமைப்பு பேரவையை மீண்டும் அறிமுகம் செய்தமை இதன் மூலம் ஆணைக்குழுக்களின் உறுப்பினர்களை நியமித்தல் மற்றும் உயர் அதிகாரிகளையும் நீதியரசர்களையும் நியமிப்பதற்கு ஜனாதிபதிக்கிருந்த அதிகாரங்களை வரையறை செய்தமை.
  8. கபினட் அமைச்சர்களின் உச்ச எண்ணிக்கையின் வரையறை பற்றிய ஏற்பாடு அறிமுகம் செய்யப்பட்டமை.
  9. பாராளுமன்றின் பதவிக்காலம் 05 வருடங்களாகக் குறைக்கப்பட்டமை.
  10. பாராளுமன்றினைக் கலைப்பதற்கு ஜனாதிபதிக்கிருந்த அதிகாரங்களை திருத்தியமை.
  11. பாராளுமன்றின் பிரதிநிதிகளுக்கு எதிரான ஒழுக்க விசாரணைகளை மேற்கொள்வதற்கான அதிகாரத்தை உயர் நீதிமன்றுக்கு வழங்கியமை.
  12. அவசர சட்டங்கள் பற்றிய ஏற்பாட்டினை இல்லாதொழித்தமை.
  13. கணக்காய்வு சேவை ஆணைக்குழுவையும் தேசிய பெறுகை ஆணைக்குழுவையும் அறிமுகம் செய்தமை.
  14. தேர்தல் ஆணைக்குழு, தேசிய பொலிஸ் ஆணைக்குழு, பகிரங்க சேவை ஆணைக்குழு என்பவற்றின் அதிகாரங்கள் அதிகரிக்கப்பட்டமை.
  15. வெளிநாட்டு பிரஜாவுரிமையைப் பெற்ற ஒரு நபர் பாராளுமன்ற தேர்தல்களிலோ ஜனாதிபதித் தேர்தலிலோ போட்டியிட முடியாதவாறு சட்ட ஏற்பாடுகளை செய்தமை.

**முடிவுரை**

மேற்குறிப்பிடப்பட்டவை 19 ஆம் திருத்தத்தினை கொண்டு வருவதில் பாதிப்புச் செலுத்திய பின்னணியும் 19 ஆம் திருத்தத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்களும் ஆகும். இந்த திருத்தத்தின் பெறுபேறாக நிறைவேற்று ஜனாதிபதியின் தன்னிச்சையான அதிகாரம் வரையறை செய்யப்பட்டு அரசாங்கத்தின் வெளிப்படையான தன்மை வளர்ச்சியுற்று பிரஜைகள் பலப்படுத்தப்பட்டுள்ளனர் என சுட்டிக்காட்ட முடிகிறது.